

நீர்வேலி

வாய்க்காற்றரவை

# மூத்த விநாயகர் தேவஸ்தானம்

# மஹாகும்பாபிஷேக மலர்

2008

உ

சிவமயம்

நீர்வேலி

வாய்க்காற்றரவை

# மூத்த விநாயகர் தேவஸ்தானம்

# மஹாகும்பாபிஷேக மலர்

# 2008



**மலராசிரியர்**

வித்யாபூஷணம், சாதக சிரோமணி

பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா B.A.(Hons)

(கோப்பாய் – சிவம்)

*வெளியீடு:*

**மூத்த விநாயகர் தேவஸ்தானம்**

**வாய்க்காற்றரவை, நீர்வேலி.**

**18-07-2008**

சர்வதாரி சம்வத்ஸர மஹோற்சவ தீர்த்தவாரித் தினம்

உ

# நீர்வேலி
# வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் ஆலய
# நவகுண்டபக்ஷ புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம்

சிவபூமி எனத் திருமூல நாயனாரால் புகழப்பட்ட ஈழமணித் திருநாட்டின் சிரசென விளங்கும் யாழ்ப்பாணத்திலே சைவமும் தமிழும் தழைத்து வளர்வதும், சிவஸ்ரீ ஆபதோத்தாரணக் குருக்கள், சிவசங்கர பண்டிதர், சிவப்பிரகாச பண்டிதர் போன்றோர் பிறந்து வளர்ந்து ஆன்மீகப் பணி செய்து பண்பட்டு மிளிர்வதும், இயற்கை வளம் கொழிப்பதுமாகிய நீர்வேலிக் கிராமத்தில் மூத்த நயினார் பதியிலே கோயில்கொண்டு எழுந்தருளியிருந்து அடியார்களுக்கு சகல செல்வ போகங்களையும் நல்கிவரும் வாய்க்காற்றரவை மூத்த விநாயகப் பெருமானுக்கும் விசாலாக்ஷி அம்பிகா சமேத விஸ்வநாத சுவாமிக்கும் தக்ஷிணாமூர்த்தி, மஹாலக்ஷ்மி, சுப்பிரமணியர், பைரவர் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும், நிகழும் சர்வஜித் வருஷம் வைகாசி மாதம் 13ஆம் திகதி **(26-05-2008) திங்கட்கிழமை ஷஷ்டித் திதியும் திருவோண நக்ஷத்திரமும் அமிர்தசித்த யோகமும் சேர்ந்த பகல் 11.45 மணி முதல் 12.30 வரையிலான** சிம்மலக்ன சுபவேளையில் நவகுண்டபக்ஷ மஹாயாக சகித புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது.

இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் தலைமையில் ஈழத்தின் தலைசிறந்த சிவாச்சாரியர்களும் சாதகாச்சாரியர்களும் கலந்துகொண்டு இக்கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்திவைத்தனர்.

ஏழுநாட்கள் கிரியைகள் நடைபெற்றன. பூர்வாங்கக் கிரியைகளும் ஐந்து நாள் யாகமும் எட்டுக்கால யாகபூஜைகளும் நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

கிரியைகளுடன் இணைந்து, நாட்டுமக்களின் நலன்வேண்டி இடர்களை பதிகம், பொன், பொருள், தானியம் வேண்டல் பதிகம், கோளறுபதிகம் முதலிய திருமுறைப் பாடல்கள் பல ஓதுவார்களால் பாடப்பெற்றமையும் தினமும் மாலை சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தமையும் சிறப்பான செயற்பாடுகளாகும்.




ஆலயத்தின் அழகிய முகப்புத் தோற்றம்




கேணியுடன் கூடிய ஈசானத் தோற்றம்



ஆலயத்தின் அழகிய உட்புறத் தோற்றம்



மூலவராய் விளங்கும் மூத்தவிநாயகர்



திருச்சிற்றம்பலம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் தீரு ஆலவாயான் திருநீறே.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

திருச்சிற்றம்பலம்





## தமிழ்நாடு, காஞ்சிபுரம்,
## ஸ்ரீ ஏகாம்பரநாதேஸ்வரர் தேவஸ்தானம்,
## ஸ்ரீ கைலாசநாதர் தேவஸ்தானம்,
## சைவசித்தாந்த ஆகமசாரம், சிவாகமஞானபாநு,
## சிவாகமச் செல்வர்
# சாளவ க. ராஜப்பாக் குருக்கள்
# அவர்கள் வழங்கிய ஆசியுரை

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" என்ற சேக்கிழார் பெரியபுராணத்தின் முதலடியான "உலகெலாம்" என்பதை இறைவனே எடுத்துக் கொடுத்ததாக வரலாறு. இந்த உலகெலாம் என்ற இறைவன் வாக்கே உலகெங்கும் சைவமதம் பரவி இருந்ததற்குச் சான்றாகும். பின்னால் வரும் "ஓதற்கரியவன்" என்ற பதமானது மனித நிலைகளுக்கு உட்பட்டவர்களால் உணரப்படுதற்கும் ஓதி உணர்தற்கும் அரியதாக உள்ள அருட்சக்தியைப்பற்றிச் சேக்கிழார் பெருமான் கூறியதாகும்.

இப்பொழுது சைவமதமானது அகில உலகத்திலும் (அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா முதலிய மேலை நாடுகளிலும் இந்தோனேஷியா, சிங்கப்பூர், மடகஸ்கார், ஸ்ரீலங்கா முதலிய கீழை நாடுகளிலும்) பரவி அங்குள்ள சைவாபிமானிகளால் எல்லா மக்களுக்கும் பரப்பப்பட்டு அருள்பாலித்துவருகிறது.

ஆகமத்தில் "சிவேன ஸ்தாபிதம் சைவம், சைவேன ஸ்தாபிதம் சிவ:" என்ற வாக்கியத்தின் பொருள், சிவன் உலகத்தைப் படைக்கும் காலத்தில் சைவ நெறியானது சிவனால் உண்டாக்கப்பட்டதாகவும் அப்படிப்பட்ட சைவ சமயமானது வேதாகம வழிமுறைகளின்படி உலகெங்கும் பரம்பொருளாகிய சிவனுக்கு ஆலயங்கள் நிறுவிப் ப்ரதிஷ்டை செய்து உற்சவங்கள் நடத்தி நம்மைப் படைத்த இறைவனுக்கு நன்றிக் கடனாக விழாக்கள் எடுத்து நமது மனத்திற்குப் பேரானந்தத்தையும் உண்டாக்கி அவன் அருளையும் பெற்றுய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இறைவன் உலகெங்கும் வ்யாபித்திருந்தாலும் பாரத புண்ணிய தேசத்தில் பல திருவிளையாடல்கள் புரிந்து மக்களோடு மக்களாய்க் கலந்து, நல்லோர்க்கு ஆசிநல்கியும் தீயோர்க்கு மறக்கருணையினால் புத்திபுகட்டியும் எல்லோரையும் ஆட்கொள்கிறான் என்பதற்குப் பல புராண வரலாறுகளும் சரித்திரச் சான்றுகளும் ஆதாரமாக உள்ளன.

இப்போதுள்ள இந்தியா ஒருகாலத்தில் ஐம்பத்தாறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு சிற்றரசர்களால் ஆளப்பட்டுள்ளது. இந்த ஐம்பத்தாறு தேசங்களில் இலங்கையும் ஒன்றாகும். தேவார ஆசிரியர்களால் பாடல் பெற்ற பல புண்ணிய ஸ்தலங்கள் தமிழ்நாட்டில் நிரம்பியுள்ளதுபோல இலங்கையிலும் திருக்கேதீஸ்வரமும் திருக்கோணமலையும் உள்ளன.


இப்படிப் புண்ணிய ஸ்தலங்கள் சூழ்ந்த இலங்கை மிகச் சிறப்பாக இருக்கும் என நம்புகிறேன். நீர்வேலி என்ற கிராமத்திற்கு நீரினால் அமைக்கப்பட்ட அகழ்சூழ்ந்த

வேலிபோன்ற அமைப்பு ஒருகாலத்தில் இருந்ததோ என இப்போது நாம் அறியாவிட்டாலும் இவ்வூருக்கு இப்பெயர் வர அது காரணமாக இருக்கலாம். இவ்வாலயத்தின் கும்பாபிஷேக அழைப்பிதழில் கும்பாபிஷேகக் கிரியைகள் தெள்ளத்தெளிவான முறையில் அச்சிடப்பட்டுள்ளன.

முதன்முதலாக இலங்கையில் திருக்கேதீஸ்வரப் பெருமானுக்கு மஹோற்சவம் நடத்த நான் சென்றபோது அங்குள்ள சிவாச்சாரியர்களும் நிர்வாகத்தினரும் பக்தர்களும் விழாக் கிரியைகளை ஆகம முறைப்படி நடத்தி வைப்பதற்கு உறுதுணையாக இருந்தனர்.

பின்னொருகாலத்தில் கொழும்பு மாநகரம் பம்பலப்பிட்டியில் அஸ்வமேத யாகம் நடைபெற்றபோதும் அங்குள்ள பல குருமார்களைச் சந்தித்து ஆகம சிந்தனைகள் செய்ததிலும் எல்லோருமே கிரியைகளை பக்தியுடனும் பாவனையுடனும் நடத்திவைத்ததைக் கண்டு மகிழ்ந்தோம். தொடர்ந்து பல கும்பாபிஷேகங்களில் ஸ்ரீ பா. ஷண்முகரத்ன சர்மா, ஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் மற்றும் ஆஸ்திரேலியாவில் கும்பாபிஷேகம் நடத்தச் சென்றபோது பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள், தற்சமயம் கனடாவில் பணிபுரியும் பூரண. தியாகராஜக் குருக்கள் மற்றும் பல வித்வான்களையும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்படிப்பட்ட வித்வான்களுடைய நெறிமுறைகளைப் பின்பற்றி அதேமுறையில் திறம்பட நடத்த எண்ணம் கொண்டு நீர்வேலி மூத்த விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை சர்வசாதகமாக ஏற்று நடத்தும் குருமணிகளான கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள், ஸ்ரீ மஹாதேவக் குருக்கள் மற்றும் ஆஸ்தான குருமார்களும் கலந்து திறம்பட நடத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

பல கும்பாபிஷேகங்களையும் உற்சவங்களையும் திறம்பட நடத்தி அனுபவம் வாய்ந்த மேற்படி குருமார்கள் இந்த மூத்த விநாயகர் கும்பாபிஷேகத்தையும் ஆத்மார்த்தமாக நடத்தி இலங்கைவாழ் மக்களுக்கு அமைதியையும் இறையருளையும் மென்மேலும் பெற்றுத்தர இந்த மூத்த விநாயகர் அருள்புரியவேண்டும் எனக் காஞ்சிபுரம் காமாக்ஷியம்பாள் சமேத ஸ்ரீ ஏகாம்ரநாதர் பாதகமலங்களை வணங்கித் துதித்து நாமும் நல்லாசி வழங்கி நிறைவு செய்கிறோம்.





உ

## ஆலய ஆதீனகர்த்தர்களுள் ஒருவரும் மஹாகும்பாபிஷேக பிரதம குருவுமாகிய

# சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்களின் ஆசியுரை

ஆன்மாக்கள் உய்திபெறுதற் பொருட்டுப் பெருங் கருணாமூர்த்தியான பரம்பொருள் உருவத் திருமேனி தாங்கி ஆலயங்கள் தோறும் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்றது.

அவரது திருவருட்சக்தி அத்திருவுருவங்களின் தரிசனம் மூலம் ஆன்மாக்களுக்குப் பக்குவநிலை கொடுத்து இக, பர சுகங்களை நல்குகின்றது.

இறையருட் சக்தியை ஏற்படுத்துவதற்கு மஹாகும்பாபிஷேகக் கிரியைகள் செய்யப்படுகின்றன. இக்கிரியைகள் சிவாகமங்களில் சொல்லப்பட்ட ஆதாரங்களையுடையவை.

நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த நயினார் பதியிலே கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமான் இன்று மஹாகும்பாபிஷேகம் செய்யப்பெற்றுத் திருவருட் பொலிவு பெறுகின்றார்.

இப் பெருவிழாவின்மூலம் இக்கிராமம் மாத்திரமல்லாமல் நாடு முழுவதுமே நலம்பெற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

கும்பாபிஷேகக் கிரியைகளில் கலந்துகொண்ட அந்தண சிரேஷ்டர்களுக்கும் நீண்டகாலம் பாடுபட்டுழைத்து இக்கைங்கர்யத்தை நிறைவுசெய்ய உதவிய பக்தர்கள் அனைவருக்கும் இவ்வூர் மக்களுக்கும் விநாயகப் பெருமானின் அருட்பேறு கிட்டவேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசிகூறுகிறேன்.

"சர்வே ஜனாஸ் சுகினோ பவந்து"

இங்ஙனம்,
சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள்.




ஆதீனகர்த்தர்கள்.
சிவஸ்ரீ ஆ.சந்திரசேகரக் குருக்கள்
சிவஸ்ரீ ஆ.சோமசுந்தரக் குருக்கள்
சிவஸ்ரீ ஆ.சுப்பிரமணிய சர்மா



தேர் மண்டபத்தின் அழகிய தோற்றம்



கும்பாபிஷேக கர்மாரம்பத்தில் மஹாகணபதி ஹோமம்



கர்மாரம்பத்தின்போது திருமுறை ஓதப்படுகின்றது
பண்ணிசைமணி திருஞானசம்பந்தர் அவர்கள்

உ



### ஆலய ஆதீனகர்த்தர்களுள் ஒருவரும்
### ஆலயகுருவுமாகிய
# சிவஸ்ரீ ஆ. சோமசுந்தரக் குருக்களின்
# ஆசியுரை

"ஆலயம்தானும் அரன் எனத் தொழுமே" என்பதற்கிணங்க ஆலயம் இறைவடிவமே ஆகும். அதனால்தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று பெரியோர்கள் கூறியுள்ளனர்.

வாய்க்காற்றரவை விநாயகர் ஆலயம் மிகப் பழைமையானது. ஆகம நெறிமுறை வழுவாமல் அந்தண சிரேஷ்டர்களால் பரம்பரை பரம்பரையாகப் பரிபாலனம் செய்யப்பட்டும் நித்திய நைமித்திகக் கிரியைகள் செய்யப்பட்டும் மரபுவழிப் பெருமையோடு விளங்குவது.

இவ்வாலயத்தில் இன்று மஹாகும்பாபிஷேகம் நிகழ்கிறது. அற்புதங்கள் பல நிகழ்த்தும் மூத்த விநாயகர் உருவத்தால் மிகவும் சிறியவர். ஆனால் அருளால் பெரியவர்.

ஊரவர்கள் யாவரதும் பொருளுதவியாலும் இடையறாத முயற்சியாலும் அடியார்கள் பலரின் சரீர உழைப்பினாலும் இன்று இக் கோவில் மிகவும் அழகான முறையில் திருப்பணி செய்யப்பெற்று தட்சணாமூர்த்தி, மஹாலட்சுமி ஆகிய புதிய பரிவார தெய்வங்களுடனும் பொலிவுபெற்று விளங்குகிறது.

இவ்வாலயம் சார்ந்த அனைவருக்கும் ஆசிகூறி எல்லாரும் நல்வாழ்வு வாழப் பிரார்த்திக்கிறேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இங்ஙனம்,
சிவஸ்ரீ ஆ. சோமசுந்தரக் குருக்கள்.

உ

## சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியும்
## சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
## நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
## ஆகியவற்றின் குருவுமாகிய
## அதிவந்தனீய
## கிரியாகலாப முக்தாமணி
# சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்களின்
# ஆசியுரை

*சர்வதாரி வருஷம் வைகாசி மாதம் 13ஆம் நாள் (26-05-2008) நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் ஆலய நவகுண்டபக்ஷ புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் விநாயரின் திருவருளும் குருவருளும் கைகூடப்பெற்று வெகுசிறப்பாக நடைபெற்றது. இச்சிறப்பு நிகழ்வின் அறிவுசார்ந்த சமயப்பணியாக, பெருமுயற்சியினால் வெளிவரும் கும்பாபிஷேகச் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.*

*எமது இந்துசமய வழிபாட்டின் சகல கிரியைகளிலும் முதலில் ஆராதிக்கப்படும் தேவனாக விளங்குபவன் விநாயகனே. அவரின் நாமங்களில் ஒன்றான, "சர்வதேவாக்ர பூஜிதாய நம:" என்பது இதனை உறுதிப்படுத்துகிறது.*

*எல்லாக் கிரியைகளுக்கும் முதலில் இவரை வழிபட்டு உபசாரங்கள் செய்து மகிழ்வித்த பின்னரே ஏனைய கிரியைகள் செய்யப்படுவதிலிருந்து காணாபத்திய வழிபாட்டின் மேன்மையான சிறப்பைக் காணலாம்.*

*இத்தகைய சிறப்புக்கள் போன்று ஏனைய பல்வேறு சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டமையப்பெற்ற கணபதி வழிபாடு, நாளுக்குநாள் அதிகரித்து வருவது மகிழ்ச்சிக்குரியதே. மிகவும் பக்தி சிரத்தையுடன் எளிமையாகத் தொன்றுதொட்டு இன்றளவும் இவ்வழிபாடு நடைபெறுவதை அவதானிக்கலாம்.*

*இங்கு நீர்வேலியில் கோவில்கொண்டு வரலாற்றுச் சிறப்பையும் பூர்வீக ஐதீகச் சிறப்பையும் கொண்டமையப்பெற்ற மூத்த விநாயகருக்கும் வேத சிவாகம சாஸ்திரோக்த சம்பன்னமாக நவகுண்ட பக்ஷமாக கும்பாபிஷேகம் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தகுந்த நிகழ்வாகும்.*

*மேற்படி ஆலயத்தில் ஆதீனகர்த்தர்களாக விளங்கும் விப்ர சிரேஷ்டர்களினால் கும்பாபிஷேகக் கிரியைகள் கிரமமாகவும் பக்திபூர்வமாகமாகவும் அனுபவம் சார்ந்த வெளிப்பாடாகவும் விளங்கியதைக் கும்பாபிஷேக தினத்தில் நேரில் காணமுடிந்தது.*

*மஹாகும்பாபிஷேக முகூர்த்த நிர்ணயத்தின் சிறப்பும் முக்கியத்துவமும் கும்பாபிஷேகப் பத்திரிகையில் புலப்பட்டிருந்தது. ஒரு பிரதிஷ்டைக்குரிய அனைத்து*

விடயங்களுக்கும் முக்கிய இடங்கள் அளிக்கப்பட்டிருந்தமையும் வரவேற்கத்த்குந்த செயற்பாடுகளாகும்.

அத்துடன் கும்பாபிஷேக கிரியா கால நிகழ்வுகளின்போது அக் கிரியைகளுக்கான விளக்கங்கள், சமய நற்சிந்தனைகள், வேத பாராயணம், திருமுறை பாராயணம் போன்றவற்றுக்கும் இடமளிக்கப்பட்டு பழமையும் புதுமையும் போற்றப்பட்டு பாரம்பரியமாக வரும் பண்பாட்டு அம்சங்களையும் எடுத்துக் காட்டும் ஆலயமாக இவ்வாலயம் விளங்கிவருகின்றது. புதுமையான இம்மூத்த விநாயகரை அர்ச்சித்து கணபதி கைங்கர்யங்களையும் மேற்கொள்ளும் பாக்கியத்தை ஆதீன கர்த்தர்களுக்குக் கொடுத்திருப்பது விநாயகர் திருவருள் என்றே கூறவேண்டும்.

முதற்தரச் சிறப்பாக நடைபெற்ற மஹாகும்பாபிஷேகத்தின் பூரணமான பலாபலன்கள் நம் அனைவருக்கும், குறிப்பாக விநாயகர் அடியார்களுக்கும் ஊர்வாழ் மக்களுக்கும் நிறைவாகக் கிடைக்கவேண்டுமெனக் கணபதி திருவடி வழுத்தி ஆசிகள் கூறுகின்றேன்.

சுபமஸ்து.

சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக் குருக்கள் | சுதுமலை
13-07-08.

## பிள்ளையாரின் பிள்ளைகளும் சந்தோஷி மாதாவும்

எந்தச் செயலையும் தொடங்குமுன்பு விநாயகரை வழிபடுவது மரபு. ஏனென்றால் சித்திக்கும், புத்திக்கும் க்ஷேம லாபங்களுக்கும் அதிபதி அவர்தான். அவரால் தான் அவற்றைத் தரமுடியும் என்ற நம்பிக்கைதான் காரணம்.

கணபதியின் சக்திகளான சித்திக்குப் பிறந்தவன் சுபன், புத்திக்குப் பிறந்தவன் லாபன். சுபம் - ஷேமமாக இருப்பது. அதாவது நலமாக இருப்பதால் நிகழக்கூடியது. லாபம் என்பது நம் செயலுக்குரிய பலனைக் குறைவின்றிப் பெறுவதைக் குறிப்பது.

'கணபதியை வணங்கினால் காரியம் சித்திக்கும்' அதனால் 'சுபம்' ஏற்படும். 'புத்தி' தெளிவாகி 'லாபம்' விளையும். இதைத்தான் மறைமுகமாக உணர்த்துகிறது விநாயகர் புராணம். இப்படியாக உருவான பிள்ளையாரின் பிள்ளைகளான சுபனும், லாபனும் தங்களுக்கு ரக்ஷை கட்டுவதற்கு ஒரு சகோதரி வேண்டும் என்று வேண்டிக் கேட்டதற்காக பிள்ளையார் உருவாக்கிய மகள்தான் 'சந்தோஷிமாதா' என்றும் ஒரு உப புராணக்கதை உண்டு. எல்லா இல்லங்களிலும் எல்லா உள்ளங்களிலும் சந்தோஷத்தை உண்டாக்குபவள் என்னும் கருத்தில் "சந்தோஷி" எனப்படுகிறாள்.

உ

## இணுவில்
## தர்மசாஸ்தா குருகுல அதிபர்
# சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்களின் ஆசியுரை

நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் தேவஸ்தானம் தனிச்சிறப்புக்கள் பலவற்றைக் கொண்டது. அந்தணப்பெருமக்களாலேயே நிர்வகிக்கப்பட்டுவரும் இவ்வாலயத்தில் நித்திய நைமித்திகங்கள் யாவும் சிவாகம நெறிமுறைப்படி மிக நேர்த்தியாக நடைபெறுகின்றன.

இவ்வாலயத்தின் ஆதீன கர்த்தர்கள் போதாயன சூத்திர நெறிமுறையைப் பின்பற்றுபவர்கள். இதனால், ஏனைய சிவாசாரியர்களை வழிநடத்திச் செல்லக்கூடிய தகுதியும் உரிமையும் இவர்களுக்குப் பிறப்பிலேயே உண்டு.

அதற்கேற்ப மிக இறுக்கமாக பாரம்பரிய நெறிமுறைகளைப் பேணுபவர்களாகவும் மிகவும் நைஷ்டிகமான செயல்பாடுகளுடையவர்களாகவும் இவர்கள் வாழ்ந்து வருவது கண்கூடு.

பிக்ஷாடனக் குருக்கள் என அழைக்கப்பட்ட பெரியவர் சிவஸ்ரீ சு. ஆபதோத்தாரணக் குருக்கள் அவர்கள் வாழும் காலத்தில் அனைத்து அந்தண சிவாசாரியர்களாலும் போற்றி மதிக்கத்தக்கவராகப் பேர், புகழோடு வாழ்ந்தார். அவரது புதல்வர்களான இவ்வாலயத்தின் இன்றைய ஆதீனகர்த்தர்களும் தமது வேத சிவாகம நெறிமுறை வாழ்க்கையை நன்கு நடத்தி வருகிறார்கள்.

இப்போது நடந்த இவ்வாலயத்தின் மஹாகும்பாபிஷேகமானது மிகவும் கட்டுக்கோப்புடனும் சாஸ்திரோக்தமான கிரியைகளுடனும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்ட சிவாச்சாரியர்களும் அந்தண சிரேஷ்டர்களும் மிகவும் கௌரவமாக நடத்தப்பட்டதுடன் நன்கு உபசரிக்கப்பட்டுச் சம்மானிக்கப்பட்டனர். இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் இது மிகவும் பாராட்டத்தக்க விடயம்.

இவ்வூர் மக்கள் யாவரும் சகல வழிகளிலும் தேவஸ்தான பரிபாலகர்களுடன் மிகவும் பணிவுடனும் பக்தியுடனும் இணைந்து செயலாற்றியிருக்கிறார்கள். அவர்களும் பெருமைக்குரியவர்கள்.

மூத்த விநாயகரின் மஹாகும்பாபிஷேக மலர் ஒன்று வெளிவருவது அவசியமானதே. அனைத்து அந்தணப் பெருமக்களுக்கும் நீர்வேலிக் கிராம மக்களுக்கும் எனது ஆசிகளைத் தெரிவித்து அப்பன் அடியிணை போற்றி அமைகின்றேன்.

உ

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவரும்
## வல்வை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பிரதம குருவுமாகிய
## சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்களின்
# ஆசியுரை

சிவாகம மரபில் நடைபெறும் ஆலய வழிபாட்டில் பிரதிஷ்டை என்பது மிக முக்கியமானதாகும். இறைதிருவுருவத்தில் மூர்த்திகரத்தை அதிகரிப்பதற்கும் கோவிலில் காணப்படக்கூடிய தோஷங்களைப் போக்கி அருட்பொலிவை மேம்படுத்தவும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிகழவேண்டுமென்பது ஆகம விதி.

அவ்வகையில் நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் ஆலயத்தில் இப்போது கும்பாபிஷேகம் நிகழ்ந்திருக்கிறது. அதனையொட்டிக் கும்பாபிஷேக மலர் ஒன்றும் வெளிவருவது சிறப்பானதாகும். மிக அழகிய கட்டுமானத்துடனும் அற்புதமான விக்கிரக வேலைப்பாடுகளுடனும் புதுப்பிக்கப்பெற்ற இக் கோவிலில் மஹாலட்சுமி, தட்சணாமூர்த்தி, தம்பப் பிள்ளையார் முதலிய புதிய மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருப்பதனால் அடியார்களின் வழிபாட்டுத் தேவைகள் முழுமை பெறுகின்றன.

மரபுவழிப் பெருமையும் சிவபூஜாபலமும் வேத சிவாகமப் பயிற்சியும் சம்ஸ்கிருத மொழியறிவும் மிக்க சிவாசார்யப் பெருந்தகைகளால் நிர்வகிக்கப்பட்டும் கிரியைகள் நிகழ்த்தப்பட்டும் வருகின்ற பெருமைக்குரிய இவ்வாலயம் இப்போது புதுப் பொலிவுபெற்று மஹாகும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்று திவ்வியமாகக் காட்சிதருகின்றது.

விக்கினங்கள் தீர்க்கும் எங்கள் விநாயகப் பெருமான் இக்கும்பாபிஷேக மகிமையால் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்து நமது நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைபெறவும் நமது மக்கள் சகல துன்பங்களிலுமிருந்து விடுபட்டு இன்ப வாழ்வு வாழவும் அருள்செய்யவேண்டுமெனப் பிரார்த்தித்து நல்லாசி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

## ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தான

## (நல்லூர் சிவன் கோவில்)

பரிபாலகரும் பிரதம குருவும்
யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை
சிரேஷ்ட விரிவுரையாளரும் ஆகிய

# பிரம்மஸ்ரீ ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்த சர்மாவின்


# வாழ்த்துரை

*மூத்த நயினார் கோவில் வளவு என்னும் புண்ணிய பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற விநாயகப் பெருமானின் மஹாகும்பாபிஷேகம் என்னும் சிவபுண்ணியச் செயல் திருவருட் சிறப்பினால் இனிது நிறைவேறியுள்ளமை ஆனந்தத்தைத் தருகின்றது.*

*கோவில் பரிபாலனத்தையும் ஆலய நித்திய நைமித்திகக் கிரியைகளையும் தொன்றுதொட்டு ஒருங்கே நிகழ்த்திவருகின்ற அந்தண சிரேஷ்டர்களின் வழிகாட்டுதலோடு அடியார்களும் ஒன்றிணைந்து இவ்வரிய சிவதர்மத்தைச் செய்துள்ளார்கள்.*

*ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சிவசங்கரபண்டிதர் போன்ற பெரியோர்கள் வணங்கி அருள்பெற்ற இத்திருத்தலம் புதுப்பொலிவு பெற்றுள்ளமை எமது சமயம், பண்பாடு என்பவற்றின் எழுச்சிக்கு ஒரு புதிய உத்வேகத்தைத் தருகின்றது.*

*பிரம்மஸ்ரீ சிவசாமிக்குருக்கள், சந்திரசேகரக் குருக்கள் என அழைக்கப்படும் அண்ணாச்சாமிக் குருக்கள், பிக்ஷாடனக் குருக்கள் ஆகியோரின் பரம்பரையினரால் சிவாகம நெறி தவறாது பரிபாலனமும் நித்திய நைமித்திகக் கிரியைகளும் நிகழ்ந்து வருகின்ற விநாயகப் பெருமானின் திருஅருட் கருணையினால் ஆலயத்தைச் சார்ந்தவர்களும் ஊர்மக்களும் மற்றும் அனைவரும் எல்லா நலன்களும் பெற்று நல்வாழ்வு வாழ வாய்க்காற்றரவை விநாயகப் பெருமானின் திருவடிகளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.*



# இரண்டாவது குருமஹா சந்நிதானம்
# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
# அருளாசிச் செய்தி

*விநாயகர் அடியார்களுக்கு!*

*நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிரதேசத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு நடைபெற்ற கும்பாபிஷேகத்தை அனைவருக்கும் தெரிவிக்கும் வகையில் கும்பாபிஷேக மலர் வெளியிடுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. பழமையும் பெருமையும் பல சிறப்புக்களையும் கொண்ட விநாயகர் ஆலயம் இன்று பல திருப்பணிகள் நடைபெற்று சிறப்புக்களுடன் காட்சிதருவது அனைவருக்கும் மகிழச்சியைத் தருகின்றது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இவ் ஆலயத்தில் நடைபெற்றது ஆலயத்திற்கும் ஊருக்கும் மக்களுக்கும் புனிதத் தன்மை ஏற்படுத்தியுள்ளது. நீர்வளமும், நிலவளமும் கொண்ட நீர்வேலி பல ஆலயங்களைக் கொண்ட பிரதேசமாகும். எல்லா ஆலயங்களுக்கும் நடுநாயகமாக விநாயகப் பெருமான் எழுந்தருளியுள்ளார்.*

*வேதபாராயணம், திருமுறைப் பாராயணம், புராணபடலம் போன்ற பல நிகழ்ச்சிகளை நடாத்தி இங்கும், வெளிநாடுகளில் வாழும் அறிவாளர்களை வரவழைத்து சமய விடயங்களை உரைக்கின்ற செயற்பாடுகளையும் இவ் ஆலயம் கொண்டுள்ளது. வேண்டுவார் வேண்டுவதை ஈகின்றவனாக விநாயகப் பெருமான் எழுந்தருளியுள்ளார். விநாயகர் வழிபாடு நம் சமயத்தில் முதல் நிலையைப் பெற்றிருக்கின்றது. தனக்கு மேல் தலைமை இல்லாத் தலைவனாக விளங்குபவர். விநாயகப் பெருமான். இம்மைக்கும் மறுமைக்கும் பேரின்பத்தை தரக்கூடிய வழிபாடு. இதனை உணர்ந்த நீர்வேலிவாழ் மக்கள் விநாயப் பெருமானுக்கு ஆலயமாக்கி அமைத்த கும்பாபிஷேகம் பெருவிழா நடாத்தியது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. கும்பாபிஷேகத்தை நடாத்திய சிவாச்சாரிய பெரு மக்கள் நீண்ட குருத்துவ பாரம்பரியத்தை கொண்டவர்கள். நித்திய சிவபூஜை, நித்திய அக்கினி போன்ற வழிபாடு மரபுகளை கொண்ட குருமார்களால் இவ் ஆலயம் வழிநடத்தப்படுகின்றது. இவர்களுடைய பணி வாழ்த்துவதற்குரியதாகும். இவ் ஆலயம் இன்னும் பல அறப் பணிகளைச் செய்து மக்களை வழிப்படுத்தி மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டியாக அமையட்டும். கும்பாபிஷேக நூலாசிரியருக்கும், மக்களுக்கும் இறைவனுடைய அருள் கிடைப்பதாக! அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.*

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

உ

# திருவடி சரணம்!

**மூலப்பொருளே,**
**மூவுலகரசே,**
**வேதமுதல்வனே,**
**முதல்வனின் முதல்வ,**
**பேழைவயிறனே,**
**உத்தமி புதல்வனே,**
**ஐந்து கரத்தனே,**
**ஆனைமுகத்தனே,**
**ஞானக் கொழுந்தே,**
**எம் இடர்களைந்து**
**எமக்கருள்புரியும்**
**கண்மூன்றுடைய**
**கற்பகக்களிறே,**
**காத்தருள் கணபதி**
**விக்ன விநாயக,**
**இறைவ, நின் பொற்கழல்**
**போற்றி! போற்றி!**
**பல்லாயிரம் போற்றி!**
**கற்பக விநாயகக் கடவுளே போற்றி!**

நீர்வைக் கிராமத்தின் வடதிசையமர்ந்து நான்கெட்டுத் திக்கும் தன் அருள் ஒளி பரப்பும் வாய்க்காற்றரவை அருள்மிகு ஸ்ரீ மூத்த விநாயகர் - எம் மூத்த நயினார் - பொற்பாதம் மனத்திருத்தி எமக்கெல்லாம் வேண்டும் வரமருளும் ஞானக் கொழுந்தன் திருவடி சரணம்!

எங்கிருப்பினும் அங்கெல்லாம் எழுந்தருளி வேண்டுவார் வேண்டுவதை வழங்கி அடியவர்க்கெல்லாம் பேரருள் புரியும் மிகப்பெரும் ஊற்றே விக்கின விநாயகர். அப் பரம்பொருளை அருள்மிகு நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகரிடம் கண்டு களிக்கும் பெரும் பேறு எமக்குக் கிடைத்த அருஞ்செல்வமாகும்.

பழைமையான ஆலயம். அதன் அருமையைப் பெருமையை அறிவார் அறிவாரே. திக்கற்ற, நொந்த இதயங்கட்கு அப்பரம்பொருளின் தும்பிக்கையே நம்பிக்கை நட்சத்திரமாம். அண்மையில் ஆலயத் திருப்பணி இனிதே நடந்தேறிய முறையும் அப்பணிக்கு வேண்டிய செம்பொன் கிடைத்த வழியும் பெருமானின் திருவருளே!

இவ்வாலயத்தின் நித்திய நைமித்திகப் பணிகள் சிறப்புற நிகழ்வதற்கு வழிபடுவோர் தளராது வழங்கும் ஆதரவும், ஆரம்ப காலத்திலிருந்தே ஆலயம் அந்தணப் பெருமக்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் வரலாறும் ஓர் சிறப்பம்சமெனக் கருதலாம். எனவே இவ்வாலயத்தைக் 'குருக்கள் கோயில்' என அழைக்கப்பட்ட சிறப்பும் அதற்குண்டு. பக்தி சிரத்தையுடன் முப்போதும் - காலை, உச்சி, அந்தி மூன்று வேளையும் - திருமேனி தீண்டி விநாயகப் பெருமானை அருள்சுரக்கும் தெய்வமாக்கிய பெருமை

அதன் முன்னைய அந்தணப் பெருமக்களையே சாரும். அவர்களில் அமரர் சிவஸ்ரீ அப்பாத்துரைக் குருக்கள் என அழைக்கப்பட்ட சிவஸ்ரீ சந்திரசேகரக் குருக்களும் ஒருவராவர். மிக நைட்டிகமான, ஐதீகமான, கண்டிப்பான ஆளுமையுடையவர். அவரைத் தொடர்ந்து அவரின் புதல்வர் பிட்சாடனக் குருக்கள் - பிச்சுக் குருக்கள் என அழைக்கப்பட்ட சிவஸ்ரீ ஆபதோத்தாரணக் குருக்கள். பலராலும் வியந்து போற்றி வணங்கப்பட்டவர். அரை நூற்றாண்டுகட்கு மேல் அரும்பணி ஆற்றியவர். அவர்களைத் தொடர்ந்து வாழையடி வாழையாக அவர்களின் வழிபற்றி அமரரின் புதல்வர்கள் முப்போதும் திருமேனி தீண்டும் பணியை சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்களும் அவரது சகோதரர் சிவஸ்ரீ ஆ. சோமசுந்தரக் குருக்களும் அவரின் பிள்ளைகளும் இன்று பற்றுடன் ஆற்றிவருகின்றமையை நாம் அறிவோம்.

சிறிய, பெரிய ஆலயங்களின் அருளும் சிறப்பும் அங்கு பக்தி பரவசத்துடன் பணியாற்றும் அந்தணர்களின் சிறப்பிலேயே தங்கியுள்ளது என்பதனை அறிவார் அறிவாரே.

"இன்றெடுத்த இப்பணியும் இனித் தொடரும் எப்பணியும்
நன்மணியே சண்முகனார்தன் னுடனே நீஎழுந்து
எம்பணியை உம்பணியாய் எடுத்தாண்டு எமதாக்கும்
பொன்வயிற்றுக் கணபதியே போற்றியெனப் போற்றுகின்றேன்.


"சிவப்பணி சிறக்கச் செம்பொன் விருப்புடன் ஈவார் பெறுக வீடு"
"செய்க தவம், செய்க தவம் நெஞ்சே, தவம் செய்தால்
எய்த விரும்பியதை எய்தலாம் வையகத்தில்"
"அன்பிற் சிறந்த தவம் வேறில்லை, அன்புடையர் இன்புற்று வாழ்தல் இயல்பு"

என்ற மகாகவி பாரதியாரின் கூற்றினையும் சிந்தித்து செற்படுவோமாக.

வாய்க்காற்றரவையான், ஒற்றைக் கொம்பன், பேழைவயிறன், ஞானக் கொழுந்தன், கண் மூன்றுடையோன் திருவடி சரணம்! சரணம்! சரணம்!

**நீர்வேலி**
**08-07-2008**

**த. ந. பஞ்சாட்சரம்**
**விநாயக அடியானொருவன்.**



# கோயில் வரலாறு

*[ கோயில் தருமபரிபாலராகிய பிரம்மஸ்ரீ சு.பிட்சாடனக் குருக்கள் அவர்கள் 1962 ஆம் ஆண்டு எழுதியது. ]*

***ஸதா பாலரூபாபி விக்நாத்ரி ஹந்த்ரீ***
***மஹாதந்தி வக்த்ராபி பஞ்சாஸ்யமான்யா***
***விதீந்த்ராதிம்ருக்யா கணேசாபிதாமே***
***விதத்தாம் ஸ்ரீயம்காபி கல்யாணமூர்த்தி***

**இதன் பொருள் :** எப்பொழுதும் குழந்தை வடிவாக இருந்தாலும் விக்கினங்களாகிய மலையைப் பொடியாகச் செய்யும் சக்தியுள்ளவராயும், யானை முகத்துடன் கூடியவராய் ஐந்து முகத்தையுடைய பரமேசுவரனாலும் (திரிபுரசங்கார காலத்தில்) பூசிக்கத் தகுந்தவராயும் பிரம்மா முதலிய தேவர்களுக்கும் தங்கள் மனோரதத்தை பூர்த்தி செய்வதற்கு தேடத்தகுந்தவராயும் கணேசன் என்னும் பெயருடன் கூடினவராயும் மங்களகரமான சரீரத்துடன் கூடின பரம புருஷராயுமுள்ள விநாயகர் எமக்கு ஐஸ்வர்யத்தைக் கொடுக்கட்டும்.

வாய்க்காற்றரவை பிள்ளையார் கோயில் கொண்டிருக்குமிடம் பண்டுதொட்டு மூத்தநயினார் கோயில் வளவு என அழைக்கப்பட்டு வந்தது. இற்றைக்கு ஐந்நூறு வருடங்களுக்கு முன்னர் மூத்தநயினார் கோயில் வளவு மரங்கள் நெருங்கியுள்ள சோலையையும் மாடு ஆடுகள் நீர்குடிக்கத்தக்க கேணியையுமுடையதாயிருந்தது. போர்த்துக்கீசர் இலங்கையை ஆண்ட காலத்திலே குப்பிளான், குரும்பசிட்டி, கட்டுவன் முதலிய ஊர்களிலுள்ளவர்கள் வழிநடையாய் நீர்வேலிக்கூடாக வன்னிக்குச் சென்று கமம் செய்வதும், மீண்டும் தம்மூருக்குச் செல்வதும் நடைபெற்றது. அங்ஙணம் செல்பவர்கள் நீர்வேலியில் மூத்தநயினார் வளவில் தங்கிச் செல்வார்கள்.

மேலே குறிப்பிட்டவர்கள் ஒருமுறை வன்னிக்குச் சென்று கமம் செய்தபோது வயலொன்றில் ஒரு விநாயக விக்கிரகத்தைக் கண்டெடுத்தார்கள். அவ்விக்கிரகத்தை தங்கள் சொந்த ஊரிலே ஸ்தாபிக்க விரும்பி நெல்லுச்சாக்குக்குள்ளே வைத்துக்கொண்டு திரும்பிவரும் சமயத்தில் நீர்வேலியிலே மூத்தநயினார் கோயில் வளவிலே வழமைபோலத் தங்கினார்கள். தங்கியவர்கள் ஆயாசத்தைத் தீர்த்த பின்பு பிள்ளையார் விக்கிரகம் வைக்கப்பட்ட நெல்லுச்சாக்கைத் தங்கள் ஊருக்கு கொண்டு போவதற்காகத் தூக்கினார்கள். அச்சாக்கைத் தூக்கமடியவில்லை. பின்பு பலர் கூடித்தூக்கினார்கள், அதன் பின்பு அவர்கள் தங்களால் இயன்ற முயற்சிகளையெல்லாம் செய்தார்கள். எல்லாம் வல்ல இறைவன் வல்லமைக்கு முன் மனிதர் வல்லமை எம்மட்டு ! முடிவில் இது பிள்ளையார் விக்கிரகத்தின் திருவிளையாட்டெடன எண்ணி அந்நெல்லு மூட்டையை மூத்தநயினார் கோவில் வளவிலேயே விட்டுவிட்டு அச்சத்தோடும், ஆச்சர்யத்தோடும் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றுவிட்டனர்.

இவற்றைக் கேள்விப்பட்ட காணிக்குரிய சிறுப்பிட்டியைச் சேர்ந்த உயர் வேளாண் மரபினர் அக்காலத்திலே நீர்வேலியில் வசித்த பிரம்மஸ்ரீ சிவசாமிக் குருக்களோடு கலந்தாலோசித்து அவ்விடத்திலேயே கோவிலைக்கட்டி கும்பாபிஷேகம் செய்து விநாயகரை பிரதிஷ்டை செய்தனர். சில வருடங்கள் சென்ற பின்பு காணிக்குரியோர் கோயிற் பரிபாலனத்தை சிவசாமிக் குருக்களிடம் ஒப்படைத்தனர்.

அன்று தொடக்கம் அவர் பரம்பரையினரால் கோயில் சிறப்பாக பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

சிவசாமிக் குருக்கள் வயது முதிர்ந்த காலத்தில் பிரம்மஸ்ரீ சந்திரசேகரக் குருக்களிடம் கோயிற் பரிபாலனத்தை ஒப்படைத்தார். சந்திரசேகரக் குருக்கள் சிவசாமிக் குருக்களின் மருமகனாவார். வேதாகம சாஸ்திரத்தில் மிக்க வல்லவரான சந்திரசேகரக் குருக்களை அண்ணாச்சாமிக் குருக்கள் எனவும் அழைப்பார்கள்.

சிவசாமிக் குருக்கள் கோவிற் பரிபாலனத்தை ஒப்படைக்கும்போது தாம் சிவலோகப் பிராா்த்தி அடையும் திதியில் பிள்ளையாருக்கு அபிஷேகம் வருடம்தோறும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவரின் விருப்பப்படியே வருடம்தோறும் அவர் சிவலோகப் பிரார்த்தியடைந்த திதியாகிய மார்கழி மாதத்து அபரபத்த நவமியில் பிள்ளையாருக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்று வருகின்றது.

அண்ணாச்சாமிக் குருக்களின் வாக்குச்சித்திக்கு பல சம்பவங்கள் உள. நீர்வேலி சிறுப்பிட்டி கிராமத்திலுள்ள முதியோர்கள் அண்ணாச்சாமிக் குருக்களின் பெருமையை இன்றும்கூறி அச்சப்படுவதைக் காணலாம்.

சுருங்கச் சொன்னால் அண்ணாச்சாமிக் குருக்கள் 'உரு' உள்ளவர் 'உரு உட்காரும்' தொல்காப்பியச் சூத்திரம்.

இந்தக் கோயில் தோன்றியது தொடங்கிக் காலத்துக்குக்காலம் பிள்ளையாரின் அற்புத விளையாட்டுக்கள் நடந்துகொண்டே வருகின்றன. தெய்வமில்லை என்ற எண்ணம் பெருகிவரும் இக்காலத்தில் வாய்க்காற்றரவை பிள்ளையாரை வணங்கி அருள் பெற்றவர்கள் பலர் இருக்கின்றார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறோம்.

பிள்ளையாரின் அற்புதவிளையாட்டுக்களை இங்கு விரித்துச்சொல்ல விரும்பவில்லை.

நீர்வேலி கிராமத்துக்கு இக்கோயில் ஈசான திக்கில் அமைந்திருக்கிறது. சுத்த சிவப்பிராம்மணர்கள் நித்திய நைவித்யங்கள் செய்யப்படுகின்றன. சைவ ஆகமங்களிலே வடகிழக்குத் திசையாகிய ஈசான பாகத்தில் அமையும் கோயிலால் சகல விருப்பங்களும் கைகூடும் எனக் கூறப்பட்டிருக்கிறது.

'சர்வகாமப் பலப்ரதம்' என்பது ஆகம வாக்காம்.

இடவிசேடத்தாலும், மூர்த்தி விசேடத்தாலும் மேம்பட்ட இவ்வாலயத்தை யாவரும் வணங்கி இட்ட சித்திகளையும், பரகதியையும் அடைவார்களாக.

அரி அரி வட்டர் என்ற ஒருவர் பல ஆண்டுகளுக்கு முன்னர் நீர்வேலியில் இருந்தார். அவருக்குக் குப்பிளான், கட்டுவன் முதலிய கிராமங்களோடும் தொடர்பிருந்தது.

கோயிலைப்பற்றியும், அரி அரி வட்டரைப்பற்றியுமுள்ள வரலாறுகள் நீர்வேலியில் கூறப்படுவன போலவே குப்பிளான் கட்டுவன் பகுதிகளிலும் கூறப்படுகின்றன. அரி அரி வட்டர் சிறந்த மந்திரசக்தியுடையவர். தேவதைகளை வசப்படுத்தி தாம் நினைத்தவற்றை அவற்றைக் கொண்டு செய்விக்கவல்லவர். அவருக்கு ஒருக்கால் பேதி நோய் ஏற்பட்டது. கிராமம் முழுதும் அந்நோயால் வருந்தியது. அச்சமயத்தில் அரி அரி வட்டர் வாய்க்காற்றரவை பிள்ளையார் மீது வயந்தன் பாட்டுப்பாடி வழிபாடு செய்தார். அதனால் பேதி நோயின் கெடுதி நீங்கிற்று. இக்காலத்திலும் அம்மை முதலிய தொற்று நோய்கள்

காணப்பட்டால் வயந்தன் பாட்டுப்பாடி கோலாட்டம் அடிக்கும் வழக்கமுண்டு. இதன் தொடர்பாக கட்டுவன் பகுதியிலும், வன்னிப் பகுதியிலும் கோலாட்டம் அடிக்கப்பட்டது சிந்திக்கத்தக்கது. வயந்தன் பாடலடங்கிய ஏடுகளை இன்னும் பல இடங்களில் காணலாம்.

இக்கோயிலின் கூட்டுப்பிரார்த்தனை இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு புண்ணிய தினங்களிலும், வெள்ளிக் கிழமைகளிலும், உற்சவ காலங்களிலும் தவறாது நடத்தப்படுகின்றது. கூட்டுப்பிரார்த்தனையிலே சிறுவர்களும், பெரியவர்களும் பங்குபற்றி வருகிறார்கள். அவர்களைப் பாராட்டவேண்டும்.

- ஆலயம் தொழுவது சாலவும் நன்று –

## குட்டி வணங்குதல்

முட்டியாகப் பிடித்த இருகரங்களாலும் சிரசிற் குட்டும்பொழுது மத்தகத்திலுள்ள அமிர்தமானது சுழுமுனைநாடி வழியாக மூலாதாரத்திலுள்ள கணேசரை அடைந்து அபிஷேகமாக அவர் உவந்து திருவருள் செய்வார் என்பதே இதன் பாவனையாகும். மும்முறை குட்டுவது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மல நீக்கத்தின் பொருட்டாம்.

## தோப்புக்கரணம்

கரணம் என்றால் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகும். இந்தக் கரணங்களை நம்மிடமிருந்து தோற்பது தோப்புக்கரணம் எனப்படும். விநாயகர் முன் இவற்றையெல்லாம் இழந்து தூய்மையடைய வேண்டுமென்றும்; எண்ணி வந்த காரியங்கள் ஈடேற வேண்டுமென்றும்; அறியாப்பிழைகளை உணர்ந்து திருந்தி மன்னித் தருளுமாறும் வேண்டுவதே தோப்புக்கரணம் ஆகும்.

ஆனைமுகன் சந்நிதியில் மும்முறை தாழ்ந்தெழுதல், நான் - எனது என்னும் அகங்கார மமகாரங்கள் நீங்கித் திருவருள் வசப்பட்டு நிற்றல் என்னும் பொருளாகும். உள்ளங் காலிலிருந்து உச்சம் தலை வரை நமது நரம்புகள் கத்தரிக்கோல் போல் செல்கின்றன. அடிக்கடி உட்கார்ந்து எழுந்திருப்பதால் (தோப்புக் கரணத்தால்) அந்த நாளங்கள் சோர்வின்றி நீண்டு உள்ளே இரத்தம் நன்கு ஓட வழி ஏற்படும். சுத்தமான இரத்தம் மூளைக்குச் செல்வதால் சாந்தமான நினைவுகள் தோன்றும். இக் காரணங்களால்தான் மும்முறை சிரசில் குட்டி மும்முறை தாழ்ந்தெழுந்து வணங்கும்படி பெரியோர் வகுத்துள்ளனர்.

## சிதறு தேங்காய் உடைப்பது ஏன்?

கணபதி மதோற்கடகராக அவதரித்தபோது, காசி மன்னன் பூர்ண கும்ப மரியாதையோடு அவரைத் தன் அரண்மனைக்கு அழைத்துப் போனான். வழியில் ஓர் அரக்கன் மலை போல் உருவெடுத்து வழிமறித்தான். கும்பத்தின் மீது இருந்த தேங்காயை எடுத்து அசுரன் மேல் எறிந்து அவனைத் தூள் தூளாக்கினார் விநாயகர். அந்த சம்பவத்தை நினைவு கூர்ந்து, விக்கினங்கள் தூளாக வேண்டி உடைக்கப்படுவதே சிதறு தேங்காய். விக்னங்கள், தோஷங்கள் நிவர்த்தி செய்வதற்காக மாத்திரம் தான் சிதறு தேங்காய் உடைக்க வேண்டும். சுபகாரியங்களுக்கு இரண்டு பாதியாகத்தான் உடைத்து வைக்க வேண்டும்.


சிதறு தேங்காயை ஆண்கள் மட்டுமே உடைக்க வேண்டும். பெண்கள் இரண்டு பாதியாக மட்டுமே உடைக்க வேண்டும். பெண்கள் சிதறு தேங்காய் உடைத்தால் அவர்களின் வாழ்வும் சிதறிவிடும்.



கடஸ்தாபனம் செய்யும் சிவாசார்யர்கள்



கேணியில் விசேஷசந்தி



ஸ்தூபி கும்பாபிஷேகம்



வசந்தமண்டப ஸ்தூபி அபிஷேகம்

உ

# நீர்வேலி
# வாய்க்காற்றரவைப் பிள்ளையார்மீதுபாடப்பெற்ற
# ஊஞ்சற் பதிகம்

இவ்வாலயத்தின் தேவஸ்தான பரிபாலகரும் தர்மகர்த்தாவுமாகிய சிவஸ்ரீ சு. ஆபதோத்தாரணக் குருக்கள் அவர்கள் கேட்டுக்கொண்டபடி கொக்குவில், சைவப் பெரியார், புலவர், திரு த. குமாரசாமிப்பிள்ளை அவர்களால் பாடப்பெற்று விநாயக பக்தன் திரு க. விநாயக சுந்தரம் என்பாரால் யாழ்ப்பாணம் நல்லூர், திருவள்ளுவர் அச்சகத்தில் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டு இன்றளவும் பயன்பாட்டில் இருப்பது.

காப்பு

உலகமெலாம் தோன்றவருள் ஓங்காரந்தான்
உமைசிவனார் உளம்பூத்த கருணையாலே
நிலவுமொரு திருவுருவாய் நீர்வேலிக்கண்
நிறைவாய்க்காற் றரவைநிகே தனத்தின் வாழும்
புலமையருள் கயமுகவைங் கரத்து நால்வாய்ப்
புனிதவிநா யகன்பாதம் போற்றி ஊஞ்சல்
மலருமிசைத் தண்டமிழால் அடியேன் பாட
மாமுகவன் அவன்சரண மலர்காப் பாமே

பதிகம்

சீராரும் நால்வேதம் தம்ப மாகச்
சிறந்தசிவா கமங்கள்மேல் விட்டமாக
நேராரும் நாற்பாதம் தாம்ப தாக
நிறைகலைகள் ரத்னமணிப் பலகையாக
ஏராரும் பிரணவம்ஒண் பீடம் ஆக
இணைத்தமைத்த திருவூஞ்சல் இனிதாய் மேவி
தாராரும் நீர்வேலி தன்னில் வாய்க்கால்
தரவையுறை விநாயகரே ஆடீரூஞ்சல்

திருமுடியின் நவரத்ன மகுடம் மின்ன
திருநுதலின் மணிஓடை திலகம் மன்ன
இருசெவியில் குண்டலங்கள் இணைந்தே துன்ன
எழிலார்கிம் புரிமுகமும் இபமே யன்ன

வருமாரைங் கரம்பாசாங் குசங்கள் இன்ன
மருவபய வரதகல சங்கள் மன்ன
உருவார்மா தாணி கண்டி உரத்தின் மின்ன
ஓங்கார விநாயகரே ஆடீரூஞ்சல்

சந்திரசூ ரியர்கவிகைப் பணிதான் ஆற்ற
சதுர்முகனார் இருக்கோதிச் சார்ந்து போற்ற
இந்திரனார் காளாஞ்சிகால் வட்டம் தோற்ற
எரியாடி நிருதிவாள் எடுத்தே யேற்ற
மந்திரிபூம் பிடகம்யமன் வரிசை தேற்ற
வானவர்தாம் தொழுதுமலர் மாரி தூற்ற
சந்தமிகும் நீர்வேலி தன்னில் வாய்க்கால்
தரவையுறை விநாயகரே ஆடீரூஞ்சல்

ஆதிசைவர் ஆகமங்கள் ஆராய்ந் தங்கம்
அன்பினொடு பூசைசெய்யும் அருள்தான் பொங்க
மாதிரங்கள் மறைமுழக்கம் மழைபோற் பொங்க
மகிழ்ந்தடியார் தோத்திரப்பண் ஓசைபொங்க
சாதிநெறி தவறிலரன் பகத்தே பொங்க
சந்ததம்மா லைகள்சாத்தும் தவத்தோர் பொங்க
தாதிவர்பூ நீர்வேலி தன்னில் வாய்க்கால்
தரவையுறை விநாயகரே ஆடீரூஞ்சல்

அங்கமெலாம் ஐங்கரனார் தம்பால் வாழ
அநுதினமும் பணிபுரிவோர் அயலே சூழ
மங்கலமாம் இசைப்பணியோர் மகிழ்ந்து சூழ
வரம்பெறுவோர் விரதமுடன் மலிந்து சூழ
சங்குமுதல் வாத்தியங்கள் தழைத்துச் சூழ
தருநிழல்வாழ் அரம்பையர்கை வடங்கள் சூழ
தங்குபுகழ் நீர்வேலி தன்னில் வாய்க்கால்
தரவையுறை விநாயகரே ஆடீரூஞ்சல்

தும்புருவு நாரதர்யாழ் வீணை மீட்ட
தூயவர மகளிர்நடம் கரங்கள் காட்ட
அம்பரமார் துந்துபிஐந் தோசை கூட்ட
அமரரெலாம் கரங்கூப்பிச் சிரங்கள் கோட்ட
நம்பனிப முகனடியார் துயரம் ஓட்ட
நாதசுரம் தவில்முழக்கம் நயந்து காட்ட
சம்பிரம நீர்வேலி தன்னில் வாய்க்கால்
தரவையுறை விநாயகரே ஆடீரூஞ்சல்

அந்தணனாம் நம்பியமு தூட்ட உண்டு
அவற்குமறை ஆகமங்கள் அருளல் கண்டு

வந்துபணி அபயகுலன் மகிழ்வுகொண்டு
மருவுதிரு முறையிடமும் அறிந்தான் பண்டு
முந்தைவரு கயமுகன்செய் இடுக்கண் மிண்டு
முழுதகல இமையவர்முன் செய்தார் கொண்டு
தந்தையென நீர்வேலி தன்னில் வாய்க்கால்
தரவையுறை விநாயகரே ஆடீரூஞ்சல்

தேங்கமழும் பூமலர்தண் சோலை ஓர்பால்
திகழ்மதுவுண் டளிபாடும் சிறப்பும் ஓர்பால்
மாங்குயில்கள் மதுரவொலி கூவும் ஓர்பால்
மரகதமா மயிலினங்கள் மருவும் ஓர்பால்
தீங்கதலிக் குலைக்கனிகள் திகழும் ஓர்பால்
திருவனையார் இல்லறமும் சிறக்கும் ஓர்பால்
தாங்குமிசை நீர்வேலி தன்னில் வாய்க்கால்
தரவையுறை விநாயகரே ஆடீரூஞ்சல்

அயனரிக்கும் அரியவரே ஆடீரூஞ்சல்
ஆகுவா கனத்தவரே ஆடீரூஞ்சல்
உயவுயிர்கட் கருள்பவரே ஆடீரூஞ்சல்
ஓங்கார உருவினரே ஆடீரூஞ்சல்
கயமுகத்து முக்கணரே ஆடீரூஞ்சல்
கயமுகனை வென்றவரே ஆடீரூஞ்சல்
சயமிகுந்த நீர்வேலி தன்னில் வாய்க்கால்
தரவையுறை விநாயகரே ஆடீரூஞ்சல்

வாழிமறை ஆகமம்அந் தணர்ஆன் வாழி
வாழிமழை மன்னவர்செங் கோலும் வாழி
வாழிதமிழ்த் திருமுறைகள் சைவம் வாழி
வாழிஅடி யார்திருவைந் தெழுத்தும் வாழி
வாழியறம் மங்கையர்கள் கற்பும் வாழி
வாழிவளம் சிறந்துமக்கள் மகிழ்ந்து வாழி
வாழிதிரு நீர்வேலிக் கோவில் வாழி
வாழியருள் விநாயகர்தாள் வாழி வாழி!

## எச்சரிக்கை

இராகம்: சங்கராபரணம்

தந்திமுக அவுணனைச் சங்கரித் தருள்புரிந்த
எந்தைவிநா யகன்முன்னர் யாரும் எச்சரிக்கை
சந்ததமும் அன்புளம் தழைத்தவருக் கின்பருளும்
சுந்தரவி நாயகனைத் தொழுவீர் எச்சரிக்கை

## பராக்கு

இராகம்: பிலஹரி

முக்கண்வி நாயக முன்னவன் கோவிலின் முன்வருவீர் பராக்கு
முழுதுல காள்பவ னடிபணி அமரரும் முனிவருமே பராக்கு
தக்கநீர் வைப்பதி வாய்க்கால் தரவையில் சார்ந்தவி நாயகர்தம்
தாள்பணி அன்புடை யோரெவ ராயினும் சந்நிதியில் பராக்கு

## லாலி

இராகம்: உசேனி

ஈசலாலி விக்ன ராசலாலி உமை
ஈசரருள் கயமுகக ணேச லாலி
ஆர்வமுடன்பணிபவர்க் கன்பலாலி நீர்வை
ஆரும்விநா யகமூர்த்தி ஐயலாலி - லாலி.

## மங்களம்

இராகம்: மத்தியமாவதி அல்லது சுருட்டி

பல்லவி

மங்களம் ஜெய மங்களம் -- ஜெய ஜெய

அனுபல்லவி

சங்கரனார் உமையம்மை தந்தருளும் மைந்தருக்கு
ஐங்கரங்கள் ஆனைமுகம் கொண்டருளும் ஐயருக்கு - மங்களம்


சரணம்

இன்கதலி தேன்சொரியும் நீர்வையில்வாய்க் கால்தரவை
நன்பதியாக் கொண்டுறையும் மூத்தநயி னார்தமக்கும்
அன்புநிறை அந்தணர்க்கும் அன்பருக்கும் ஆன்களுக்கும்
பொன்புலமை தந்தருளும் புனிதவிநா யகரடிக்கும் - மங்களம்

சுபம்.



பிரதான கும்பங்கள் வீதிவலம் வரும் காட்சி



கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்ட சிவாசார்ய மணிகள்



பிரதமகுருமாருடன் சாதகாசார்யர்கள்



ஆதீன கர்த்தர்களுடன் வேதபாராயண வித்தகர்கள்



# குடமுழுக்கு விழா

– பிரம்மஸ்ரீ ஆ. இராமநாத சர்மா

குடமுழுக்கு விழா என்பது ஆலயங்களில் நிறுவப்படும் திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே. கும்பாபிஷேகத்தை குடமுழுக்கு என்றும் அழைப்பர். கும்பாபிஷேகம் நான்கு வகைப்படும்.

அ. ஆவர்த்தம் ஆ. அநாவர்த்தம் இ. புனராவர்த்தம் ஈ. அந்தரிதம்

ஆன்மாக்களாகிய நாம் தனுவாகிய சரீரத்தைக் கொண்டு சிவசாஸ்திர உணர்ச்சியால் நல்லறிவு ஏற்பட்டு பதிபுண்ணியமாகிய கும்பாபிஷேகத்தில் பங்குபற்றி தரிசித்தல் முக்கிய கடமையாகும். ஒவ்வொரு கிரியைகளையும் தரிசித்து பங்குபற்றுவதால் பெரும் பயனுண்டு.

திருக்கோயில்களைப் பழைய சிறப்புடன் இருக்கச்செய்தலாகிய கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பானது. சேய்வோர், செய்விப்போர், வழிபடுவோர் என அனைவரும் நன்மை பெறுவர். மக்கள் நாள்தோறும் செய்துவரும் வழிபாட்டில் ஏற்படும் பிழைகள் மகோற்சவத்தாலும், மகோற்சவ காலத்தில் ஏற்படும் தவறுகள் கும்பாபிஷேகத்தாலும் தீரும். எனவே கும்பாபிஷேகத்தை "பெரும் சாந்தி" எனவும் **"குடமுழுக்கு"** எனவும் சொல்வர்.

சைவக்கிரியைகள் எல்லாம் மந்ரங்கள், கிரியைகள், பாவனைகள் என்பவற்றால் செய்யப்படுகின்றன. இவைகள் கும்பாபிஷேகத்தில் இன்றியமையாதவை. கும்பாபிஷேகத்தில் வைக்கப்படும் கும்பங்கள் சர்வசக்தி ஸ்வரூபமான சர்வ தீர்த்தங்களையுடைய சிவ ஸ்வரூபமாகும்.

கும்பாபிஷேகத்தில் இடம்பெறும் கிரியைகள் தனபூஜை, அனுக்ஞை, பிரவேசபலி, வாஸ்து சாந்தி, ம்ருத்சங்கிரகணம், ஆச்சார்ய பூஜை, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், பூதசுத்தி முதலியனவாகும்.

தனபூஜை என்பது புண்ணியவசத்தால் பெறப்பட்ட திரவியங்களைச் சிவார்ப்பணம் செய்து கும்பாபிஷேகத்திற்கு பயன்படுத்தல்.

அனுக்ஞை என்பது உத்தரவு பெறுதல். நல்வழியில் பெறப்பட்ட திரவியத்தைக் கொண்டு கும்பாபிஷேகக் கிரியைகளை சாஸ்திரப்படி மேற்கொள்ள இறைவனிடம் அனுமதி பெறுதலாகும்.

பிரவேசபலி என்பது குறித்த இடத்தில் உள்ள துர்தேவதைகளைப் பூஜித்து பலி கொடுத்து வேறு இடங்களுக்கு செல்லவும், இறைவனை இருத்தவேண்டியுள்ளது எனவும் அவர்களைத் திருப்திப்படுத்துதலாகும்.

வாஸ்துசாந்தி என்பது பூமிக்கு அதிபதியான பிரமனைப் பூஜித்து வாஸ்து புருஷனின் உபாதை இல்லாதிருக்க அப்புருஷனை காவல் புரியும் தேவதைகளுக்குச் செய்யும் பூஜை.

ம்ருத்சங்கிரகணம் என்பது மண்ணெடுத்தல். பூமியையும், திக் பாலகர்களையும் வணங்கி அனுமதி பெற்று கிரியை செய்வதற்கு வேண்டிய மண்ணை வெட்டியெடுத்தலாகும்.

ஆச்சார்ய பூஜை என்பது குருவிற்கு சகல உபசாரங்கள் செய்து இச்சிவ கைங்கரியத்தைச் செய்து பக்தர்களை இறை அனுக்கிரகத்திற்கு பக்தர்களை தகுதியாக்க வேண்டும் என்று வழிபடுதலாகும்.

ஆங்குரார்ப்பணம் என்பது நெல் முதலிய தாணியங்களை பாலில் ஊறவிட்டு சந்திரனை வணங்கி உலக நன்மையின் பொருட்டு பயிர் வளர்த்தல். (முளையிடல்)

இரக்ஷாபந்தனம் என்பது எல்லாக் கருமங்களிலும் அசுத்தம் நீக்கி எடுத்த காரியங்களை இடையூறின்றி முடிப்பேன் என்ற உறுதியுடன் வாகீஸ்வரியின் நாடியில் உண்டானதாகப் பாவித்து நாகராஜனை வழிபாடு செய்வதாகும்.

பூதசுத்தி என்பது ஐம்பூதங்களையும், இவை சம்ம்ந்தமான ஆத்மாக்களையும் சுத்தப்படுத்துவதாகும்.

இக்கிரியைகளின் பின் கும்பஸ்தாபனம், யாகசாலையில் பிரவேசம் செய்து ஹோமங்கள், பூஜைகள் நடாத்தப்படும். மூர்த்திகளுக்கு தானியவாசம், ஜலவாசம் இடம்பெற்று அஷ்டபந்தனம் என்ற மருந்துசாத்தி எண்ணைக்காப்பு, பிம்பசுத்தி என்பன செய்யப்படுகின்றன.

சுகல உபசாரங்களுடன் யாகசாலையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட கும்பங்களைப் பூஜை செய்து குறித்த முகூர்த்தத்தில் தோத்திர வேத பாராயணங்களுடனும், மேள வாத்தியங்கள் முழங்க மந்திர உச்சாரனங்களுடன் வீதிவலம் வந்து அந்தந்த மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்யப்படும். இதன்பின் தொடர்ந்து 45 நாட்கள் வரை விசேட அபிஷேகம் பூஜை செய்து ஈற்றில் சங்காபிஷேக பூஜை செய்து மண்டல பூஜை பூர்த்தியாகும்.

"உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக்கியர்கள் எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரத்தான்றன்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்"

என்ற திருஞானசம்பந்தரின் திருவாக்கிற்கு ஏற்ப சிறப்பினையுடைய கும்பாபிஷேகத்தினைத் தரிசித்துப் பங்குபற்றுவதன் மூலம் சிவபோகமாகும், நித்தியானந்த மோட்சமும், சுபீட்சங்களும் பெறுவார்களென்பது தெளிவாகும்.

இத்தகைய சிறப்பும் புண்ணியபலமும் கொண்ட கும்பாபிஷேகம் நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயர் ஆலயத்தில் நிகழவிருப்பதால் கிராமமக்கள் சகல சம்பத்துக்களும் பெறுவார்களாக.



உ
கணபதிதுணை
யாழ்ப்பாணத்து—நீர்வேலி
# வாய்க்காற்றரவை விநாயகமூர்த்திப் பிள்ளையார்கோவிற்
# சங்காபிஷேக உற்சவ விஞ்ஞாபனம்.

சைவாபிமானிகளே;

இக்கோவிலில் நிகழும் சித்தார்த்தி௵ ஆனிமீ உ௩-ந் திகதி (7-7-19) திங்கட்கிழமை சிங்க லக்கினமாகக் கும்பாபிஷேகஞ் செய்யப்பட்டது. அதின் 45-ம் நாளாகும் ஆவணிமீ ௪-ந் திகதி (20-8-19) புதன்கிழமை பகல் 12 மணிக்கு நவோத்தர சகஸ்திர சங்காபிஷேகமும், அன்றிரவு [illegible], பலவித விநோதக் காட்சியான [illegible] திருநாளும் நடத்தப்படும்.

சங்காபிஷேக மகிமை; அபிஷேகஞ் செய்தற்குரிய [illegible] மட பாத்திரத்திலும் தாமிரம் ஆயிரமடங்கு விசேஷம், வெள்ளி பதினாயிரமடங்கு விசேஷம், பொன் இலட்சமடங்கு விசேஷம், இரத்தினம் பத்திலட்சமடங்கு விசேஷம், [illegible] கோடிமடங்கு விசேஷம், சங்கம் அநந்தமடங்கு விசேஷம். [illegible] சந்திரன் சூரியன் சக்கரம் என்னுமிவைகளை அதி தேவதைகளாகவும், மத்தியில் வருணனையும் பிற்பாகத்தில் பிரமாவையும் நுனியில் கங்கை முதலிய சர்வ தீர்த்தங்களையுமுடைய மகிமையுள்ளது.

ஆதலால், சைவசமயிகளாகிய நீங்களெல்லீரும் மேற்சுட்டிய தினத்தில் வந்து சங்காபிஷேகத்தையும் அன்றிரவு நடத்தப்படும் உற்சவத்தையும் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்கின்றேன்.

இங்ஙனம்,
ச. சுப்பிரமணியக்குருக்கள்
ஆதீனகர்த்தர்.

வயாவிளான்—ஜயசிறீ சாரதா பீடேந்திரசாலை.

*சித்தார்த்தி வருடம் ஆனி மாதம் 23ஆம் திகதி (07-07-1919) திங்கட்கிழமை நிகழ்ந்த கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 20-08-1919 புதன்கிழமை நடைபெற்ற மண்டல பூர்த்தி விழாவின் விளம்பரம் இதுவாகும். அப்போதைய ஆதீனகர்த்தர் சிவஸ்ரீ ச. சுப்பிரமணியக் குருக்கள் அவர்களால் வெளியிடப்பட்ட இப் பிரசுரம் சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள் அவர்களின் பாதுகாப்பில் இருந்தது.*



நீர்வேலி, குருக்களாதீனத்தைச் சார்ந்த

வாய்க்காற்றரவை விநாயகராலயத்திலே

விகாரி ௵ ஐப்பசி ௴ 3௳ / ௯௦௦

கூடிய சபையாரின் அங்கீகார பத்திரம்

ஸ்ரீமத் வி. சபாபதி ஐயர் அவர்கள் சொல்லிவருஞ் சோதிட பலன்கள் அனுபவத்துக்கு முழுவதும் ஒத்திருத்தல் உலகறிந்த உண்மை. இவர் பஞ்சாங்கத்திற் குறித்த போதாயன அமாவாசை முதலிய விரதங்களின் நிர்ணயங்கள் முழுவதும் சாஸ்திர சம்மதமே என்பது நாம் ஆராய்ந்துகண்ட உண்மை.

இப்படியாயினும், இவருடைய விகாரி வருஷ பஞ்சாங்கம் வழக்கிற்கிடமாய் நிற்றமையால் நாம் ஐயுற்று, இத் தேதியில் நமது கோவிலில் இவரை வருவித்துச் சில சனசமூகத்திற் பல ஆட்சேபங்களையுந் தொடுத்தோம். நம்முடைய ஆட்சேபங்கட்கெல்லாம் இவர் பொருந்துமாறு தகுந்த சமாதானங்களை உடனுக்குடன் திடமாகச் சொல்லி நமது சந்தேகத்தை முழுவதுமொழித்த சாதுரியத்தை மிகப் பாராட்டுகின்றோம்; இதுமுதல் இவர் பஞ்சாங்கத்தையே நாமெல்லாம் அங்கீகரிப்பதற்குத் தடையில்லை:

சோ. சந்திரசேகரக் குருக்கள் (நீர்வேலி)

வே: பஞ்சாக்ஷரக் குருக்கள் ,,

வி. பாலசுப்பிரமணியக் குருக்கள் (சிதம்பரம் ஜோதிஷர்)

கு. வைத்தியநாதக் குருக்கள் (நவிண்டில்)

ச. கதிரேசக் குருக்கள் (ஷை கோவில் அர்ச்சகர்)

கு. கார்த்திகேயக் குருக்கள் (நீர்வேலி கந்தசுவாமி கோவில்)

ச. சிவப்பிரகாசன் (நீர்வேலி)

இவர் சம்ஸ்கிருத விற்பத்தியிலே இத்தேசத்திலே தமக்கு இணையில்லாது பெரும்புகழ் படைத்த ஸ்ரீமத் சங்கரபண்டிதரவர்களுடைய புத்திரரும், மாணாக்கருமாகிய பண்டிதர்.

1987ஆம் ஆண்டு கொக்குவில் சோதிட பரிபாலன மடத்தினால் வெளியிடப்பட்ட "ஜாதக பாஸ்கரன்" என்ற நூலில் IX ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட இந்த சான்றிதழ் அந்த நிறுவனத்தின் நற்பெயரைக் குறிப்பதற்காகப் பிரசுரிக்கப்பட்டது.

அக்காலத்தில் வாய்க்காற்றரவை விநாயகராலயத்தில் கற்றறிந்த ஆன்றோர்கள் பலர் கூடி ஆராய்ந்தே எவ்விடயத்தையும் முடிவெடுத்தார்கள் என்பதற்கு ஓர் ஆவணமாக இப்பிரசுரம் திகழ்கிறது.



பிரதமகுருமாருடன் யாகசம்ரக்ஷகர்கள்



பக்தராய்ப் பணிசெய்யும் தொண்டர் குழாம்



மண்டல பூர்த்திநாளில் பஞ்சகுண்ட சகித சஹஸ்ரகலச
சங்காபிஷேக யாகம்



புதிதாக அமைக்கப்பெற்ற மஹாலக்ஷ்மி, தக்ஷிணா மூர்த்தி
சந்நிதானங்களின் முன்னே மண்டல பூர்த்தி நாளில்
அஷ்டோத்தரசத சங்காபிஷேக மண்டபம்



# பஞ்சகுண்ட, நவகுண்ட பூஜைகளும் பிரபஞ்ச தத்துவமும்.

**வித்யாபூஷணம் பிரம்மஸ்ரீ**

**ப. சிவானந்த சர்மா** B.A.(Hons)

**(கோப்பாய் சிவம்)**

இந்துக்களின் வாழ்க்கையில் ஆலய வழிபாடு முக்கியத்துவம் பெறுகிறது. ஆகம விதிமுறைப்படி சிற்ப சாஸ்திர மரபுக்கிணங்கக் கட்டப்பட்டிருக்கும் ஆலயங்களில் வழிபடு தெய்வத்தின் திருவுருவம் ஆகமநெறிமுறைக்கமையப் பிரதிஷ்டை செய்யப்படுகிறது.

நாம் வணங்கும் இறைவனுக்கு, அவன் ஒரு நாமம் ஓருருவம் இல்லாதவனாயிருப்பினும் நமது ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவும் வகையில் நமது முன்னோர்கள் கற்பித்துத் தந்த உருவங்களை நாம் அமைக்கின்றோம். நமது பரம்பொருள் அங்கிங்கெனாதபடி இப் பிரபஞ்சம் எங்கணும் பரந்து நிறைந்து கரந்திருப்பினும் அவனோடு நாம் கலந்துறவாடுவதற்கு வாய்ப்பாக ஆலயங்களை அமைக்கின்றோம்.

இவ்வாறு அமைக்கும் ஆலயக் கட்டடங்களும் அங்கு ஸ்தாபிக்கப்படும் திருவுருவங்களும் 'இறைவன் நூல்' ஆகிய ஆகமங்கள் என்னும் மிகப்பழைய நூலில் சொல்லியிருக்கும் முறைகளில் கட்டப்பட்டிருப்பினும் இன்றைய நவீன அறிவியல் நோக்கிலே பார்க்கும்போதும் அவை இப்பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும் சக்தியைத் தேக்கி எமக்கு வழங்கும் முறையிலே அமைந்திருக்கின்றன என்பதைச் சிறிது ஆராயின் அறியலாம்.

அவ்வாறு அமைப்புமுறைகளை ஆராய்வது ஒருபுறமிருக்க, அங்கு இறையருட்சக்தியை ஏற்படுத்துமுகமாக நிகழ்த்தப்பெறும் கிரியைகள் யாவும் தத்துவ உட்பொருள் வாய்ந்தவையாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் பிரபஞ்ச சக்தியைத் தேக்கித் தரும் செயல்முறைகளாக இருக்கின்றன என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.

அத்தகைய கிரியைகளில் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக வைபவத்திலே பிரதானமாக அமைக்கப்படும் யாகசாலைகளில் நிகழும் கும்பபூஜைகளைத் தொடர்ந்து நிகழும் குண்டபூஜை அல்லது அக்னிகார்யத்திலே காணப்படும் பிரபஞ்ச தத்துவத்தையே நாம் இங்கு பிரதானமாக நோக்கப்போகிறோம்.

மின்சார சக்தியை நாம் மின்கலங்களில் சேமிப்பதுபோல இறைசக்தியைப் பிரபஞ்ச சக்தியாக கருவறையிலுள்ள விக்கிரகத்தில் சேமிக்கின்றோம். மின்கலத்தில் சேமிப்பதற்கு வேண்டிய மின்சாரத்தை உண்டாக்குவதற்குச் சில செயற்பாடுகளைச் செய்யவேண்டி இருப்பதைப்போல இறைசக்திச் சேமிப்பிற்குச் சிவாகமக் கிரியைகள் தேவைப்படுகின்றன.

பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் சக்தியை ஒருங்கு குவிப்பதற்கு ஐம்பூதங்களினூடான படிமுறைக் கிரியைகள் உதவுகின்றன. சூரிய சக்தியைப் பூதக்

கண்ணாடியூடாகக் குவித்து அதன்சக்தியை ஒருங்கு சேர்ப்பதன்மூலம் பஞ்சினை எரிப்பது போன்றதே இது என விளங்கிக்கொள்ளலாம்.

"பிரம்மண ஆகாசாத் சம்பூதஹ
ஆகாசாத் வாயுஹு
வாயோர் அக்னிஹி
அக்னேர் ஆபஹ
அத்ப்யஹ் ப்ருதுவீ" என்பது உபநிடத வாக்கியம்.

"பிரம்மமானது ஆகாயத்திலிருந்து தோன்றி, வாயுவுக்கும் வாயுவிலிருந்து அக்னிக்கும், அக்னியிலிருந்து தண்ணீருக்கும், தண்ணீரிலிருந்து நிலத்திற்கும் படிப்படியாக இறங்கி வருகிறது" என்பதே இதன் விளக்கமாகும்.

சிவபிரானது நெற்றிக்கண்ணில் தோன்றிய அக்கினிச் சுடராகிய முருகப்பெருமான் ஆகாயமார்க்கமாக வாயுபகவானிடமும் பின்னர் அக்னி பகவானிடமும் அதன்பின் கங்கையாகிய தண்ணீரிடமும் சென்று இறுதியில் பிருதுவி என்னும் நிலத்தின் அம்சமாகிய தாமரைப் பூவில் தங்கிக் குழந்தை வடிவம் பெறுகிறார் என முருகப்பெருமான் திருவவதாரம் கூறுவது இந்தத் தத்துவத்தைத்தான்.

இங்கு ஆகாயம், வாயு, அக்னி, தண்ணீர், நிலம் எனக்கூறப்பட்ட ஐந்தும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனப்படும் பஞ்சபூதங்களாகும். பூதம் என்றால் உண்டாக்குவது எனப் பொருள். (பூ - பவ் - உண்டாகுதல் - என்பது வினையடி ஆகும்) இப்பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டதனால் பிரபஞ்சம் எனப் பெயர் ஏற்பட்டது.

ஆகாயம் என்பது காட்சிக்கும் தொடுகைக்கும் அப்பாற்பட்ட பரவெளி மட்டுமே. அதன் அடுத்த நிலையாகிய காற்று தொடுகைக்கு உட்படுமெனினும் கட்சிக்கு அடங்காதது. அடுத்த நிலையாகிய தீ தொடுகைக்கும் காட்சிக்கும் உட்பட்டதே எனினும் தொட்டுணர்வதற்கு அப்பாற்பட்ட சக்தியை உடையது. நான்காம் நிலையிலுள்ள நீர் தொடுகைக்கும் காட்சிக்கும் உடன்படுவதாகவும் நமது இலகுவான பயன்பாட்டுக்குரியதாகவும் இருப்பினும் நிலையான வடிவத்தை அது பெறுவதில்லை. இறுதிநிலையாகிய பூமி (நிலம் என்னும் தரையில் பெறப்படும் மண், கல், உலோகம் என்பன) எல்லா வகையிலும் எமக்கு உகந்ததாக, வேண்டிய உருவைப் பெறவல்லது.

ஆகாய வெளியில் பரந்து நிறைந்து மறைந்திருக்கும் பிரபஞ்ச சக்தியாகிய இறையருட்சக்தியை மேல்நோக்கிக் குவிந்து கூர்மையாக நிற்கும் உலோகப் பொருளாகிய கலசங்கள் தாங்கிய விமானம் என்னும் ஸ்தூபி ஈர்த்துக் கீழேயுள்ள திருவுருவத்தில் சேமிக்கின்றது. (மான என்பது அளவு. வி என்பது சிறப்பான. குறித்த பிரமாணத்தில் சிறப்பாக அளந்து உருவாக்கப்பட்டதே விமானம்.)

இதேபோல மந்திரங்களின் அதிர்வுகள் பிரபஞ்ச சக்தியை ஈர்க்கும் தன்மையுடைய ஒத்த அதிர்வுகளைக் கொண்டிருக்கின்றன. அவை கதிர்வீச்சுப்போல பேரருட்சக்தியைக் கும்பத்திலும் அக்கினியிலும் விக்கிரகத்திலும் கொண்டுவந்து சேர்க்கத்தக்கன.

மஹோற்சவத்திலே தம்பம், கும்பம், விம்பம் என்னும் மூன்று இடங்களில் திருவருட்சக்தி விளங்குவதாகக் கூறுவர். அதேபோல பிரதிஷ்டையில் அக்கினி, கும்பம், விக்கிரகம் ஆகிய மூன்று இடங்களிலும் திருவருட்சக்தி பொலிவுற்று

விளங்குகிறது. இறுதியில் அக்கினியிலுள்ள சக்தி கும்ப நீரில் சேர்க்கப்பட்டு அது அபிஷேகத்தின்மூலம் விக்கிரகத்திலே சேர்க்கப்படுகிறது.

இந்தப் பிரபஞ்ச சக்தி நமது சக்திக்கு அப்பாற்பட்ட பெரும்சக்தி. அதனை ஒரேதடவையில் ஒன்றாக ஈர்த்து எடுத்துவிட முடியாது என்பதால் பகுதி பகுதியாக அந்தச் சக்தியின் பல்வேறு அம்சங்களைப் பகுத்து ஒவ்வோர் இடத்தில் குவித்துப் பின்னர் அவை யாவற்றையும் ஒன்றாக இணைக்கின்ற முயற்சிதான் யாகசாலையில் அமைகின்ற பல எண்ணிக்கையிலான ஹோமகுண்டங்களில் பூஜை செய்தல்.

அக்கினி அளவற்ற சக்தி வாய்ந்தது. ஆக்கவும் அழிக்கவும் வல்லது அது. நமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை உருவாக்கித் தருவதும் அது. நம்மையே அழித்துவிடுவதும் அக்கினியே. எந்த அசுத்தத்தையும் தூய்மைசெய்யும் சக்தியும் அதற்குண்டு. பிரபஞ்சத்தையே இயங்கச்செய்யும் மூலப்பொருளாக நடுவில் நின்று சுழன்றுகொண்டிருக்கும் சூரியன் ஓர் அக்கினிக் கோளமன்றோ? அதனால்தான் ஆதியிலிருந்து இன்றளவும் அக்கினி ஓர் தெய்வ சக்தியாக யாவராலும் வணங்கப்படுகிறது. அத்தகைய அக்கினி மூலமாகவே நாம் அருட்சக்தியைச் சேகரிக்க முற்படுவது பொருத்தமானதல்லவா?

எனவே, ஒன்றிலிருந்து முப்பத்துமூன்று குண்டம் வரை ஓமகுண்டங்களை யாகசாலையில் அமைத்து அங்கு எரியோம்பி அவற்றில் ஒவ்வொரு சக்திகளைத் தனித்தனியே வருவித்துப் பின்னர் அவை யாவற்றையும் பிரதான குண்டமாகிய ஒரு குண்டத்திலே சேர்த்து அதைப் பிரதான கும்பத்து நீரிலே சேர்த்து அதையும் அபிஷேகம் மூலம் விக்கிரகத்திலே சேர்க்கின்றோம்.

எல்லாமே டிஜிற்றல் மயமாக இருக்கும் இன்றைய உலகில் அதன்மூலம் நாம் இதனை விளங்கிக்கொள்ள முயற்சிக்கலாம். மின் அஞ்சல் மூலம் நாம் ஒரு விடயத்தை அனுப்பும்போது ஒரே தடவையில் அனுப்ப முடியாத சந்தர்ப்பங்களில் அதனைப் பல பகுதிகளாகப் பிரித்து அனுப்புகின்றோம். பெறுபவர் பின்பு அவற்றை ஒன்று சேர்க்கிறார்.

மேலும், கணினியில் படங்களை உருவாக்கும்போது புள்ளிகளின் செறிவு அதிகரிக்கும்போது அவை துல்லியமானவையாக அமைவதைக் காணலாம் குறைந்த புள்ளிகள் உடைய படங்கள் கையாள இலகுவாக இருப்பினும் அவை செறிவு குறைந்தவையாக இருப்பதால் அதிக அழகுடன் காணப்படுவதில்லை.

இதே தத்துவம்தான் யாக குண்டங்களிலும் காட்படுகிறது. அருட்செறிவு அதிகமாக இருக்கவேண்டுமானால் அதிக குண்டங்களை உருவாக்கிப் பகுதி பகுதியாகச் சக்தியைச் சேகரிக்கும்போது துல்லியமான சக்திச் சேமிப்பு கிடைக்கும். அதற்கான இடம் பொருள், ஏவல் கிடைக்காதவிடத்துக் குறைந்த எண்ணிக்கையில் குண்டங்களை அமைத்து ஓரளவு சக்தியைப் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுவாக, நவகுண்டம் எனப்படும் ஒன்பது குண்டம் சாதாரண நிலையில் போதுமானது. அதற்கு அடுத்தபடியாக பஞ்சகுண்டம் எனப்படும் ஐந்து குண்ட முறை பயன்படுகின்றது. பஞ்ச பூதங்களின் வழியாகச் சேர்க்கப்படும் சக்தி பஞ்சகுண்டங்கள் மூலமாகச் சேர்க்கப்படும்போது அதில் ஒரு பொருத்தப்பாடும் உள்ளது. தத்துவங்களை விளங்கிக்கொள்ளவும் பஞ்சகுண்டமுறை இலகுவானது என்பதால் அதனை இங்கு பார்க்கலாம்.

யாகசாலையின் நடுவிலே வேதிகை என்னும் மேடையில் பிரதான கும்பம் அமைந்திருக்கும். அதில் பிரதான மூர்த்தி ஆவாஹனம் செய்யப்பட்டுத் தினமும் மந்திர உச்சாடனம் மூலம் உருவேற்றப்பட்டு அருட்போலிவோடு விளங்குவார்.

அந்த வேதிகைளின் நான்கு திசைகளிலும் நான்கு குண்டங்கள் அமைய, ஐந்தாவது குண்டம் ஈசான திக்கில் (வடகிழக்கில்) அமையும்.

ஈசான குண்டமே பிரதான குண்டம். அங்கு சிவாக்கினி முறைப்படி வளர்க்கப்பட்டு அதன் நான்கு திசைகளிலும் நான்கு அக்கினிகள் பூஜிக்கப்பட்டு அவை பின்னர் அங்கிருந்து ஏனைய நான்கு குண்டங்களிலும் சேர்க்கப்படும்.

இப்போது பிரதானகுண்டத்திலிருப்பது சிவாக்கினி. இந்த அக்கினியில்தான் மூலமூர்த்தியின் பிரதான அம்சம் அவாஹனம் செய்யப்படும். அத்தோடு ஆகாய மூர்த்தியும் அதன் அதிபதியும் இங்கு எழுந்தருளச் செய்வர். ஈசானம், நேத்ரம், அஸ்த்ரம் ஆகிய மந்திரங்கள் இங்கு சிறப்பிக்கப்படுகின்றன. ஈசானம் என்பது மேலே உள்ள திசையையும் குறிப்பது. இறைவனது மேல்நோக்கிய முகம் ஈசானம். ஈசன் என்றால் யாவற்றையும் ஆள்பவன். அவன் யாவற்றையும் தனது கண்களால் பார்த்துக்கொண்டிருக்கிறான் எப்தைக் குறிக்கவே இங்கு நேத்ர மந்திரம் (நோத்ரம் - கண்) சிறப்பிக்கப்படுகிறது. யாவரையும் காத்துநிற்பதற்கு அஸ்திரமந்திரம் உதவுகிறது. (அஸ்த்ரம் - ஆயுதம்)

கிழக்குத்திசையிலுள்ள குண்டத்தில் இருப்பது ஆஹவனீயாக்கினி. ஹவனம் என்ற சொல் யாகம், பிரார்த்தனை, அர்ப்பணம் முதலிய பொருள்களைக் கொண்டது. எனவே ஆஹவனீயம் என்பது ஹோமம் செய்து பிரார்த்தித்து அர்ப்பணித்தல் ஆகும். இந்த அக்கினியில் வாயு மூர்த்தியும் அதன் அதிபதியும் ஆவாஹனம் செய்யப்படுகின்றனர். சம்ஹிதா மந்திரங்கள் எனப்படும் பதினொரு மந்திரங்களில் இங்கு தத்புருஷ மந்திரமும் இருதய மந்திரமும் சிறப்பிக்கப்படுகிறன.

இவ்வுலக வாழ்க்கையில் ஆன்மா காற்றின் தன்மைபோல அலைபாயும் மனத்தைக் கட்டுப்படுத்தித் தனது ஈடேற்றம் கருதி இறைவனைத் (தத்புருஷ) தனது இதயத்திலிருத்திப் (இருதயமந்திரம்) பிரார்த்தனை வழிபாடுகளைச் செய்துகொண்டிருக்கவேண்டும் என்பதை இது குறிப்பாகக் காட்டுகிறது. உலகியல் வாழ்வில் ஆன்மீகத்தை இக் கிழக்குக் குண்டம் குறிப்பதாகக் கொள்ளலாம். கிழக்குத்திசையின் குண்டம் சமசதுரவடிவில் அமைந்திருக்கும். சமநிலையில் வாழ்வதன் அவசியத்தை இது காட்டுகிறது.

தென்திசையிலிருப்பது தட்சிணாக்கினி. அதில் வஹ்னி(தீ) மூர்த்தியும் அதன் அதிபதியும் எழுந்தருளுவர். அகோரமந்திரமும் சிரோமந்திரமும் இங்கு சிறப்பிக்கப்படுவன.

தட்சிணம் என்றால் தெற்கு. தென்திசை யமனுக்குரியது. ஆன்மா உடலைவிட்டதும் செல்லும் திசை இதுதான். அந்திமக் கிரியைக்குப் பயன்படும் அக்கினி தட்சிணாக்கினியே. சிவன் இத்திசையில் அகோரமூர்த்தமாக அக்கினி வடிவில் காட்சியளிப்பதாலேயே இத்திசையில் அக்கினி (வன்னி) மூர்த்தியும் அகோர மந்திரமும் சிறப்பிக்கப்படுகின்றன. சிரோமந்திரம் என்பது தலையைக்குறிப்பது. (சிரம் - தலை)

கிழக்கேயுள்ள ஆஹவனீயாக்கினியில் நாம் ஹோமம் செய்து பிரார்த்தித்து

நமது உலகியல் தேவைகளை வேண்டும் அதே நேரத்தில் நமது நிலையாமையை நினைத்து நமது இறப்புக்குப் பிந்திய நிலையின் தேவைகளை நினைப்பதற்கு தென்திசைக் குண்டம் வழிசமைக்கிறது. இக்குண்டம் அர்த்த சந்திரன் அதாவது பாதிச் சந்திரனின் வடிவில் அமைந்திருக்கும். வளர்வதும் தேய்வதும் சந்திரனின் இயல்பு. பாதிச் சந்திரன் இரண்டுக்கும் இடைநிலை. வாழ்க்கையும் உயர்வு தாழ்வை உடையது. இடைநிலையில் வாழ்வது இறுதிக்கு நல்லது என்பதை இதன்மூலம் உணரலாம்.

கிழக்கு, தெற்குத் திசைக் குண்டங்களிற்கு அடுத்ததாக வடக்குக் குண்டமே பூஜிக்கப்படுவது வழக்கம். சிவனது அழகுமுகமாகிய வாமதேவ முகத்தைக் குறிப்பதோடு அவனது வாமபாகமாகிய இடப்பாகத்துக்குரியதும் இக்குண்டமே. அப்பாகமே சக்திக்குரியதுமாகும். அதனால்தான் அழகு, மென்மை, மேன்மை என்பவற்றைக் குறிக்க இக்குண்டம் தாமரை வடிவில் (பத்மம்) அமைக்கப்படுகிறது.

இங்கு உள்ள அக்கினி கேவலாக்கினி. கேவலம் என்ற சொல் இன்றைய பயன்பாட்டிலிருப்பதுபோலக் கீழானது என்ற பொருளையுடையதன்று. கேவலம் என்றால் தனித்தது எனப் பொருள். வேறொன்றையும் சாராது தனியாக நிற்கும் தூய அக்கினி இது. இங்கு எழுந்தருளுவோர் ஜலமூர்த்தியும் அதன் அதிபதியுமாவர். நீருக்குள் நெருப்பும் நெருப்புக்குள் நீரும் உண்டு என்பதை ஆழ்ந்து சிந்திப்போர் தத்துவார்த்தமாக உணர்வர். நீர் அதிகமானால் நெருப்பை அணைக்கும். நெருப்பு அதிகமானால் நீரை வற்றச் செய்யும். இரண்டும் சமநிலையிலிருந்தால் யாவும் இயல்பாயிருக்கும்.

இங்கு சிறப்பிக்கப்படும் மந்திரங்கள் வாமதேவ மந்திரமும் சிகா மந்திரமும். சிகா என்றால் தலைமயிர். அழகைத் தருவதும் அதிமுக்கியமான உறுப்பாகிய சிரசைக் காப்பதும் சிகையே. பண்டை நாளிலிருந்து அறிவின் சின்னமாக சிகையைக் கருதினர். வடக்குத்திசை காந்தப் புலம் செறிவாயுள்ள பகுதி. சக்திச்செறிவு, சக்தியின் திசை (இடப்புறம்), அறிவுத் தேட்டம் என்பன இங்கு ஒருங்கிணைவது கவனிக்கத்தக்கது.

உலகியலில் ஆன்மீகத்தை மேம்படுத்தி, இறப்புக்குப் பிந்திய வாழ்வுபற்றிய சிந்தனையோடு செயற்பட்டால் அறிவும் அழகும் இனிமையும் மிக்க தாமரைமலர்ப் பாதத்தை நாடும் வாய்ப்புக் கிட்டும் என்பமை இம்மூன்று குண்டங்களின் வரிசைப்பாடு உணர்த்துகின்றன.

அடுத்து வருவது மேற்குக் குண்டமாகிய வ்ருத்த குண்டமெனப்படும் வட்ட வடிவாயமைந்த குண்டம். இங்கு உள்ள அக்கினி கார்ஹபத்யாக்கினி. கிருஹம் என்னும் வீட்டிற்கு உரியது கார்ஹபத்யம். இங்கு எழுந்தருளுவோர் பிருதுவி மூர்த்தியும் அதன் அதிபதியுமாவர். சத்யோஜாத மந்திரமம் கவச மந்திரமும் இங்கு சிறப்பிக்கப்படுகின்றன.

சத்யோஜாதம் சிவனது அனுக்கிரக முகம். அருட்செறிவு மிக்கது. கருணை வடிவானது. கவசம் என்பது பாதுகாப்பைக் கருதுவது. கிருஹஸ்தாசிரமத்தில் இருந்துகொண்டு வாழ்வின் பாதுகாப்பைக் கருதி யாவருக்கும் சேவையாற்றிக் கொண்டிருக்கவேண்டும் என்பதை இது குறித்துநிற்கிறது.

இவ்வாறு படிமுறையாகவும் பகுதியாகவும் சேகரித்த சக்தியைப் பிரதான குண்டத்தில் ஒன்றுசேர்த்து அதனைப் பரதான கும்பத்திலே ஒன்றுசேர்த்து அதை

மூலமூர்த்தியில் அபிஷேகம் செய்கிறோம். இதுவே திருவுருவில் இறைசக்தி எழுந்தருளச் செய்யும் கிரியையாகும்.

ஆகாயம் என்னும் பரவெளியில் பரந்திருக்கும் இறையருட்சக்தி நம்மை நாடி இறங்கி வரும் முறையை இங்கு தெளிவாக நோக்கினோம். மறுதலையாக மேற்குக் குண்டத்திலிருந்து ஈசான குண்டம் வரை நாம் மீண்டும் இவற்றைச் சிந்தித்துப் பார்த்தால் உலகியல் வாழ்விலிருந்து படிப்படியாக ஆன்மீகநிலையில் உயர்ந்துசதாசிவ மூர்த்தியிடம் நாம் ஐக்கியமாகிவிடும் நிலையையும் இது காட்டுகிறது எனலாம்.

## ஆனைமுகனுக்கு உகந்த மலர்கள் 21

| | | | |
|---|---|---|---|
| 01. புன்னை | 02. மந்தாரை | 03. மகிழம்பூ | 04. பாதிரி |
| 05. தும்பை | 06. ஊமத்தை | 07. சம்பங்கி | 08. மாம்பூ |
| 09. தாழம்பூ | 10. முல்லை | 11. கொன்றை | 12. எருக்கு |
| 13. செங்கழுநீர் | 14. செவ்வரணி | 15. வில்வம் | 16. அரளி |
| 17. குருந்தை | 18. பவளமல்லி | 19. ஜாதிமல்லி | 20. மாதுளம்பூ |
| 21. கண்டங்கத்தரிப்பூ | | | |

## கணபதிக்கு உகந்த நிவேதனங்கள் 21

| | |
|---|---|
| 01. அப்பம் | 02. மோதகம் |
| 03. அவல் | 04. பொரி |
| 05. பால் | 06. தேன் |
| 07. எள்ளுப்பாகு | 08. புட்டு |
| 09. கரும்பு | 10. மாம்பழம் |
| 11. பலாப்பழம் | 12. வாழைப்பழம் |
| 13. விழாம்பழம் | 14. வள்ளிக்கிழங்கு |
| 15. வெள்ளரிப்பழம் | 16. இராசவள்ளிக்கிழங்கு |
| 17. பயறு | 18. கடலை வகைகள் |
| 19. பருப்பு வகைகள் | 20. நாவற்பழம் |
| 21. சித்திரான்னம் | |

## பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்யும் இலைகளும், பயன்களும்

கண்டங்கத்தரி - லட்சுமி கடாட்சம்,
வெள்ளெருக்கு - நற்புகழ்,
அரளி - அன்பு,
அகத்தி - துயரம் போக்கும்,
அரசு - எதிரி நாசம்,
மருதம் - மகப்பேறு கிட்டும்.

உ

# கணபதி யெனும் குணமேரு

– வித்துவான், திருமதி. வசந்தா வைத்தியநாதன்

"என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசு கமழ் சோலைவியன் நாரையூர் முக்கண்
அரசு மகிழ் அத்தி முகத் தான்"
- நம்பியாண்டார் நம்பி

"சத்யம், ஞானம், அனந்தம், பிரம்மம்" என்று உபநிடதம் உரைக்கும். எள்ளினுள் எண்ணெயாக, மலருள் மணமாக, தீயினுள் திறலாக எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரப்பிரும்மம் உருவுடன் கூடியும், உருவமில்லாமலும் தோற்றுகின்றது. இதனைச் சகுணம், நிர்குணம் எனப் பெரியோர் கூறுவர். உருவமற்ற பரம்பொருள் நமக்காக ஆன்மகோடிகளின் மேல் வைத்துள்ள கருணையால் உருவம் கொள்கின்றது. நிறமற்ற நீர் குளிர்ந்து வெண்மையான பனிக்கட்டியாக உறைந்து உருவமும், நிறமும் கொள்கின்றதுபோல நிர்க்குணப் பிரும்மம் சகுணப் பிரும்மமாகின்றது. குணம்குறி கடந்த முதல்வன் குணம்குறி தாங்கி வருவதற்கு காரணம், உலக உயிர்களெல்லாம் எவ்வகையிலாவது உய்திபெற வேண்டும் என்ற அளப்பருங் கருணையே என்று கூறுகின்றது சித்தியார்.

"ஆறண மாகமங்க ளருளினா லுருவுகொண்டு
காரண னருளா னாகில் கதிப்பவ ரில்லை யாரும்
நாரணன் முதலாயுள்ள சுரர்நரர் நாகர்க்கெல்லாஞ்
சீரணி குருசந் தானச் செய்தியுஞ் சென்றிடாவே"

"குறித்ததொன் றாக மாட்டாக் குறைவிலனாத லானும்
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமையானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பான் மேவுத லிலாமையானும்
நிறுத்திடு நினைந்த மேனி நின்மல னருளினாலே"

## விநாயகர் திருவுரு

முதல்வனாகிய இறைவன் அளவில் ஆற்றல் உடையவனாதலாலும் முற்றறிவும் இயல்பாகவே பாசங்களின் நீங்கிய தன்மையும் உடையவனாதலால், தான் நினைந்தவொரு திருவுருவை மேற்கொள்ளும் ஆற்றலுடையவன். அப்படி அவன் கொண்ட எண்ணற்ற வடிவங்களுள் நமது கருமேனி கழிக்க வந்த திருமேனியே "கணபதி" யெனும் கருணை வடிவமாகும். ஒலி உருவில் உள்ள எழுத்து வரி வடிவில் அமைந்ததுபோல எழுத்துக்களின் தோற்றமாகிய பிரணவத்தையே வடிவமாகக் கொண்டு அன்பர் அகத் தாமரையில் அவரவர் பக்குவத்திற்கேற்ப அருள் செய்கின்றான்.

இறைவனின் அளப்பரிய ஆற்றல்களுள் "இடையூறு களைதல்" என்பதும் ஒன்று. அந்த ஆற்றலின் நிலைக்களனாய் விளங்குபவன் வேழமுகத்து விநாயகன். இவருடைய திருவடிவம் ஆழ்ந்த சிந்தனைக்குரியது. வேறு எந்த தெய்வத்திலும் காணமுடியாத

விசித்திர வடிவம். யானை முகம், ஒடிந்த கொம்பு, ஒடியாத மருப்பு, மணிமுடி, துதிக்கை, பேழை வயிறு, குறுங்கால்கள் இவற்றை நமது எண்ணக்கோட்டால் ஒருங்கிணைத்தால் கிடைப்பது ஓங்காரப் பிரணவம். அதுவே ஐங்கரனின் அழகிய திருவுருவம்.

வேழமுகனுடைய அதிசய திருவுருவைப்போன்றே அவரது வழிபாட்டு முறையும் வித்தியாசமானது. எவரும் எளிதாகச் செய்யலாம். சாணத்தையோ, மஞ்சளையோ பிடித்துவைத்து அறுகம்புல்லைச் சாத்தி வழிபட்டாலே போதும் ஆனைமுகன் அகமகிழ்வான்.

## விநாயக வணக்கம்

விநாயகர் வணக்கத்தில் சிறப்பு வாய்ந்தது இரு கரங்களாலும் மாறித் தலையில் குட்டிக் கொள்வதும், காதுகளைப் பிடித்துத் தோர்புக்கரணம் இடுதலும் ஆகும். இதற்குப் புராண காரணங்கள் பல இருப்பினும், உடற்கூற்றின் ஆய்வுப்படி செவிக்கும், மூளைக்கும் இருபது நரம்புகளின் தொடர்பு உண்டு எனவும், செவிகள் மூலம் பெற்ற உபதேசங்கள் மூளையில் சென்று தங்குவதற்கு நரம்புகளைப் பதப்படுத்த சிரசில் குட்டிக்கொள்வதும், தோர்புக்கரணம் இடுதலும் உதவும் என்று ஆராய்ச்சி வல்லுநர் கூறுகின்றனர்.

## ஆனந்தமே விநாயகர்

உலகிலே எத்துணை முறை பார்த்தாலும் தெவிட்டாத பொருட்கள் கடல், நிலவு, யானை, குழந்தை முதலியன. குழந்தைத் தன்மையும், யானை வடிவமும் கொண்ட விநாயக வடிவும் அத்தகையதே. விநாயகர் ஆனந்தமே வடிவானவர்.

"ஸ்வஸ் வாநந்த மகாதேவ
கணேசா ப்ரம்மணஸ்பதி
ஆநந்தஸ்யாதிதே வோயம்
ஸ்வாநந்தேச இதிர்யதே"

ப்ரம்மணஸ்பதியான கணபதி ஸ்வானந்தம், ஆனந்தம் எனும் இரு இன்ப நிலைகளுக்கும் அதிபதியாவர். ஸத்-சித்-ஆனந்தம் இணைந்த சச்சிதானந்த வடிவினர். ஆனந்தமே ஆத்மாவின் ஸ்வரூபம். ஆத்மாவே ப்ரம்மம். ஆகவே அனைத்து உயிர்களுக்கும் கணேச பரப்ரம்மமே அடிப்படையாகும்.

## வழிபட்டுப் பேறுபெற்றோர்

"கணபதி பூஜை கைமேற் பலன்" என்பது பொருள்மொழி. கணபதியை வழிபட்டுப் பேறுபெற்றோர் பலர். ஒருசிலரைக் காண்பாம்.

வியாசர் விநாயகரின் ஏகாக்ஷர மந்திரத்தை தியானித்து பதினெண் புராணங்களையும் ஆக்கித்தந்தார்.

தக்ஷன் முத்கல முனிவரின் அறிவுரைப்படி கணபதியை வழிபட்டு சிவநிந்தனை செய்த பாவத்தையும், வீரபத்திரக் கடவுளால் அடைந்த துன்பத்தையும் போக்கிக்கொண்டான்.

படைப்புக் கடவுளாகிய பிரம்மதேவன் கணபதியை நினைக்காமல் சிருஷ்டித் தொழிலைத் தொடங்கப், படைத்தவை யாவும் பூத, பிசாசுகளாயின. அதுகண்டு அஞ்சிய நான்முகன் கணபதியின் ஏகாக்ஷர மந்திரத்தை ஜெபித்து சித்தி, புத்திகளை புதல்விகளாகப் பெற்று அவர்களையே விநாயகருக்குத் திருமணம் செய்து வைத்தார்.

சோமகாந்தன் என்னும் மன்னன் பிருகு முனிவர்பால் விநாயக மந்திர உபதேசம் பெற்று குட்டநோய் நீங்கப்பெற்றான்.

மதுகைடபர்களால் வருந்திய திருமால், சிவபெருமானிடம் விநாயக சடக்ஷர மந்திரத்தை உபதேசம்பெற்று அவர்களை வெல்லும் ஆற்றலைப் பெற்றான்.

வல்லாளன் என்னும் செட்டி விளையாட்டாகக் கல்லை கணபதியாக பாவித்தும், வழிபட்டும் பெருமான் அவனுக்குப் பேரருள் செய்தார்.

கற்கன் என்ற அரசகுமாரன் குட்ட நோயால் வருந்தினான். முத்கல முனிவரிடம் ஏகாக்ஷர மந்திரம் பெற்று நோய் நீங்கியது மட்டுமன்றி, கவுண்டின்ய நகரத்திற்கு மன்னனும் ஆனான்.

விதர்ப்ப தேசத்து மன்னன் வீமராசன். இவன் விநாயகரின் ஏகாக்ஷர மந்திரத்தை ஜெபித்து உருக்மாங்கதனைப் பெற்றெடுத்தான். உருக்மாங்கதனை கவி முனிவனின் மனைவி முகுந்தை விரும்பினாள். அதற்கு உருக்மாங்கதன் உடன்படாமையால் வெண்குட்டம் உண்டாகுமாறு சபித்தாள். நாரத முனிவரின் துணையால் கதம்ப நகரத்துக் கணேசகுண்டத்துள் மூழ்கி சிந்தாமணி விநாயகரை வணங்கி நோய் நீங்கப்பெற்று சாலோகப் பதவியையும் பெற்றான்.

இந்திரன் தனது தகாத செயலால் கௌதமரிடம் பெற்ற சாபமான ஊன இந்திரியத்தை ஞான இந்திரியமாக மாற்றிக்கொண்டது விநாயக உபாசனையின் விளைவே.

கவி முனிவனின் மனைவியாகிய முகுந்தையின் மகன் கிரிச்சிரமன் முனிவரிடம் கணபதி மந்திர உபதேசம் பெற்று கல்வியில் சிறந்து விளங்கினான். அத்திரி முனிவரை வாதில் வென்றான்.

கிரிச்சிரமனின் மகன் பலி. இவன் கணேசரை வழிபட்டு தன் மனத்தாலேயே வஞ்சிரதந்தன், வீமகாயன், காளகூடன், சண்டன், பிரசண்டன் என்ற ஐந்து பிள்ளைகளை உண்டாக்கி அனைத்து உலகங்களையும் தனதாட்சிக்குக் கீழ் கொண்டுவந்தான். திரிபுரன் என்ற பெயரோடு வங்காளத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தான்.

அமரர்கள் கணபதி அஷ்டாக்ஷர மந்திரத்தை நாரதர்பால் உபதேசம் பெற்று அசுரரால் இழந்த பதவியை மீண்டும் பெற்றனர். உமாதேவியார் விநாயக சதுர்த்தி விரதத்தை மேற்கொண்டு உலகுய்யச் செய்யும் தமது எண்ணங்களை ஈடேற்றிக் கொண்டார்.

கர்த்தமன் பிருகு முனிவர் வாயிலாகத் தான் நுகரும் சகல செல்வங்களுக்கும் காரணம் முற்பிறவியில் தான் செய்த கணபதி உபாசனையே என அறிந்தான். அதுமட்டுமல்லாது எடுத்துள்ள பிறவியிலும் சதுர்த்தி விரதம் மேற்கொண்டு இருமைப் பயனையும் எய்தினான்.

முருகன் கிருஷ்ணையாற்றின் வடகரையிலுள்ள வனத்தில் விநாயகரை வழிபட்டு அவரருளால் மயில்வாகனத்தையும், பல வரங்களையும் பெற்றார். அவ்வனத்தையே "மயூரேசம்" என்னும் தலமாக்கி இலட்ச விநாயகர் என்னும் மூர்த்தியை பிரதிட்டை செய்து வழிபட்டு சூரபன்மனாதியரை வென்றார்.

மன்மதன் சிவபெருமானிடம் பிள்ளையாரின் ஏகாக்ஷர மந்திர உபதேசம் பெற்று விநாயகர் துணையால் விஷ்ணு கிருஷ்ணனாகத் தோன்றிய காலத்து அவருக்கு மகனாகப் பிறந்து பிரத்யும்நன் என்னும் பெயரோடு விளங்கினான்.

கிருஷ்ணன் மனைவியாகிய உருக்மணிதேவி கணேச உபாசனையால் சம்பராசுரனை வென்று ப்ரத்யும்நனை மீட்டாள். இரதியின் அவதாரமான சம்பரன் மகளைப் ப்ரத்யும்நனுக்கு மணம் புரிவித்தாள். பாணாசுரனால் சிறையிடப்பட்ட அநிருத்தனை ப்ரத்யும்நன் விநாயகரை வழிபட்டு சதுர்த்தி விரதமிருந்து மீட்டான்.

ஆதிஷேசன் நாரதரது உபதேசப்படி சதுர்த்தி விரதமிருந்து அரன் முடியிலிருக்கும் பெருமையையும், ஆயிரம் தலை நாகமாக அவனியைத் தாங்கவும், ஒரு தலையோடு விநாயகருக்கு உதரபந்தனமாக இருக்கும் புண்ணியத்தையும் பெற்றான்.

இதேபோன்று கார்த்தவீரியன், அங்காரகன், ஜனகன் முதலானோர் வரலாறுகள், அறுகின் பெருமை, ஔவையார், முதலியோர்களின் வரலாறுகள் விநாயக புராணம், காஞ்சி புராணம், கந்தபுராணம், வாமன, வராக, பாத்மபுராணங்களில் மிக விரிவாக பேசப்பட்டுள்ளன. விரிவஞ்சி ஒருசிலரின் வரலாறுகளையே நான் இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

விநாயகரின் சீர்த்தியையும், கீர்த்தியையும் நூல்கள் சிறப்பாக நமக்குத் தெளிவாக்குகின்றன.

சுக்கிர நீதியால் விநாயகரின் திருவடிவம் அபிதானகோசத்தில் விநாயகர் அவதாரம் யோகசாஸ்திரங்களில் குண்டலினி சக்தியை எழுப்பும் ஆதார தெய்வமாக விநாயர் குறிப்பிடபெற்றுள்ளார். சோதிட நூல்களில் விநாயகருக்குரிய உத்திராட நட்சத்திரத்தின் பெருமை பேசப்படுகின்றது.

## திருமுறைகளில் விநாயகர்

திருமுறைகள் சிவனது புகழையே பேசுவதற்கு எழுந்த பெருநூல்கள். அப்படியிருந்தும், விநாயகர், முருகன் இவர்களது பெருமைகளும் அணுபக்ஷம், சம்புபக்ஷம் என்ற முறையில் குறிக்கப்பெற்றுள்ளன.

திருஞானசம்பந்தரின் திருக்கடைக்காப்புப் பாடல்களில் விநாயகரைப்பற்றிய குறிப்புக்கள் ஐந்து இடங்களில் வந்துள்ளன. திருநாவுக்கரசரும் தனது ஐந்தாம் திருமுறைத் திருப்பூவனூர் பதிகத்துள்

"நார ணன்னொடு நான்முகன் இந்திரன்
வார ணன்கும ரன்வணங் குங்கழற்
பூர ணன்திருப் பூவனூர் மேவிய
கார ணன்னனை யாளுடைக் காளையே"

என்றும் நான்காம் திருமுறை திருவதிகை வீரட்டானப் பதிகத்தில்

"பலபல காமத்தராகி பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதியெனும் களிறும்"

என்ற தொடரிலும் ஆறாம் திருமுறையாகிய திருத்தாண்டகத்தினுள் திருப்புறம்பயம், திருவீழிமிழலை, திருக்கச்சி, திருவாய்மூர், திருநாரையூர்ப் பதிகங்களில் விநாயகரின் பெருமையைச் சிறப்பித்துள்ளார்.

சுந்தரர் திருநாகைக்காரோணம், திருஓணகாந்தன் தளி பதிகங்களில் குறித்துள்ளார்.

ஒன்பதாம் திருமுறையில் திருமாளிகைத் தேவர் "தனதன்நற்றோழா" எனத் துவங்கும் திருக்கோயில் பதிகத்துள்ளும் சேந்தனார் "குணமணிக்குருளை" எனத்துவங்கும் திருஇடைக்கழி பதிகத்துள்ளும் குறிப்பிட்டுள்ளார்.

பத்தாம், பதினோராம் திருமுறைகளில் விநாயகர் புகழ் பரக்கப் பேசப்படுகின்றது.

சேக்கிழார் பெருமான் தமது பன்னிரெண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்துள் பாயிரத்திலும், திருக்குறிப்புத் தொண்டர் புராணத்திலும் குறிப்பிட்டுள்ளார்.

## புராணங்களில் வேழமுகர்

சேக்கிழார் புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், விருந்தாசலப் புராணம், காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம், விநாயக புராணம் முதலியவற்றுள்ளும், திருப்புகழிலும், ஔவையாரது பாடல்களிலும் குமரகுருபரர், சிவப்பிரகாசர் போன்ற ஆன்றோர் வாக்குகளிலும் இராமலிங்கசுவாமிகளின் திருவருட்பாவிலும் விநாயகரைக் காணலாம். ஆதிசங்கரரின் கணேச பஞ்சரத்தினம், கணேச புஜங்கம் முதலியனவும், ஸ்ரீமஹா கணபதி நவார்ண வேதபாதஸ்தவம், ஸ்ரீவரமஹா கணபதி மந்த்ராக்ஷராவளி ஸ்தோத்ரம், ஸ்ரீ கணபதி உபநிஷத் போன்ற வடமொழித் துதிகளும், நக்கீர தேவர் அருளிய விநாயகர் திரு அகவல், விநாயக கவசம் போன்ற எண்ணற்ற பக்திச்சுவை நனி சொட்டிடும் பாடல்களும் ஆனை முகனை வந்திக்கும் அற்புதப் பாடல்களாகும்.

நிறைவாக தருமையாதீன பத்தாவது குருமணி ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞான தேசிக பராமாச்சார்ய சுவாமிகள் அருளிய ஸ்ரீ காசி துண்டிராஜ கணபதி திருவருட்பாவில் அருமைமிகு பாடலை சிந்தித்து வந்திப்பாம்.

"ஓங்கார வடிவான உன்பாத தாமரையும்
உபயபரி புரமறைகளும்
உதிக்கின்ற செங்கதிர்கள் ஒருகோடி நிகரொளியும்
உத்தூள நீற்றி னொளியும்

பாங்கார் கசானனமும் முககரமும் வளர்புயப்
பவளாசலங்கள் நான்கும்
பாசமுட னங்குசம் கொம்போ ரிலட்டுகம்
பட்சமொடு வைத்த கரமும்

நீங்காத அருள்மாரி பொழியும்த்ரி யம்பகமும்
நிறையுமும் மதமாரியும்
நீள்சடா டவியும்வெண் பிறையும்ஒரு தொந்தியும்
நெஞ்சில் ஒருகாலும் மறவேன்

காங்கேயன் மகிழ்தமையனே கங்கைநதி பெருகு
காசிவாழ் தூண்டிராச
"கணபதி யெனும் பெரிய குணமேருவே" அருட்
கருணா நிதிக் கடவுளே".

நீர்வேலி வாய்க்காற்றரவையில் மூத்த விநாயகனாய் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்மழை பொழியும் ஆனைமுகனின் இணையடிபணிந்து இம்மலரை சமர்ப்பிக்கின்றேன்.



# சிறந்த விநாயகர் தலங்கள்

இறைவன் எங்கும் விளங்கினாலும், திருக்கோயில்களில் மிக விளக்கம் பெற்றுள்ளார். பசுவின் உடம்பெங்கும் பால் பரவியிருப்பினும் முலையின் வழியாகவே வெளிப்படுகின்றது. அதுபோல விநாயகர் எங்கும் எழுந்தருளியிருந்தாலும், சில தலங்களில் அவருடைய திருவருட்பொலிவு சிறந்து தோன்றுகின்றது. அத்தலங்களையும் அவைகளிலுள்ள விநாயகர் திருநாமங்களையும், முடிந்தவரையில் வரலாற்றையும் தெரிவிப்போம்.

| | | |
|---|---|---|
| திருவாடுதுறை | - | துணைவந்த விநாயகர்<br>அழகிய விநாயகர்<br>சிவப்பிரகாச விநாயகர் |
| திருநறையூர்ச்சித்தீச்சரம்<br>திருவிடைமருதூர் | - | ஆண்ட விநாயகர் |
| திருவையாறு | - | ஆதிவிநாயகர் |
| விருத்தாசலம் | - | ஆழத்துப்பிள்ளையார் |
| திருச்சிராப்பள்ளி | - | உச்சிப்பிள்ளையார் |
| குடந்தைக் கீழ்க்கோட்டம்<br>(நாகேஸ்வர சுவாமிகோவில்) | - | கங்கைக் கணபதி |
| திருக்காறாயில் | - | கடுக்காய் விநாயகர் |
| திருக்கச்சூர் | - | தாலமூலவிநாயகர்<br>கருக்கடிவிநாயகர் |
| திருக்கடவூர் | - | கள்ளவாரணப் பிள்ளையார் |
| கடிக்குளம்<br>திருக்கருகாவூர்<br>சிதம்பரம் | - | கற்பக விநாயகர் |
| திருமுருகன்பூண்டி | - | கூப்பிடுபிள்ளையார் |
| திருநாட்டியத்தான்குடி | - | கைகாட்டி விநாயகர் |
| திருக்கொட்டையூர் | - | கோடி விநாயகர் |
| திருமறைக்காடு | - | சிந்தாமணி விநாயகர்<br>வீரகத்தி விநாயகர் |
| கீழ்வேளூர்<br>திருமழபாடி | - | சுந்தர கணபதி |
| திருவுசாத்தானம் | - | சூதவனப்பிள்ளையார் |
| அன்பிலாலந்துறை | - | செவிசாய்த்த விநாயகர் |
| திருநள்ளாறு | - | சொர்ண விநாயகர் |

| | | |
|---|---|---|
| சிதம்பரம் | - | திருமுறைசுட்டிய விநாயகர்<br>கற்பகப் பிள்ளையார்<br>(கேஷ்த்திரபாலப் பிள்ளையார்)<br>முக்குறுணி விநாயகர்<br>(முகக்கட்டண விநாயகர்)<br>உச்சிட்ட விநாயர்<br>நரமுகவிநாயகர் |
| திருப்பனையூர் | - | துணையிருந்த விநாயகர் |
| நாகபட்டிணம் | - | மாவடிப்பிள்ளையார்<br>நாகாபரணப்பிள்ளையார்<br>பஞ்சமுகவிநாயகர் |
| திருஇன்னம்பர் | - | நிருத்தன விநாயகர் |
| திரிவீழிமிழலை | - | படிக்காசு விநாயகர் |
| திருப்புறம்பயம் | - | தேன்விநாயகர்<br>பிரளயம்காத்த பிள்ளையார் |
| திருமாகறல் | - | பொய்யா விநாயகர் |
| சீகாழி | - | ஆபத்துக்காத்த விநாயகர் |
| திருநாரையூர்<br>திருவெண்ணெய் நல்லூர் | - | பொல்லாப் பிள்ளையார் |
| அம்பல் | - | சுட்டுவிநாயகர் |
| திருவாரூர் | - | மாற்றுரைத்த விநாயகர்<br>வாதாபி விநாயகர் |
| ஆலவாய் (மதுரை)<br>சிதம்பரம்<br>மாயூரம் | - | முக்குறுணிப் பிள்ளையார் |
| வல்லம் | - | வரசித்திவிநாயகர் |
| திருக்களர்<br>காஞ்சிபுரம்<br>அத்திகிரி | - | வலம்புரி விநாயகர் |
| திருப்புகலூர்<br>திருச்செங்காட்டங்குடி<br>திருவாரூர் | - | வாதாபி விநாயகர் |
| காஞ்சிபுரம் | - | விகடசக்ரவிநாயகர் |
| திருவலஞ்சுழி | - | வெள்ள விநாயகர் |
| திருவேதிகுடி | - | வேதப்பிள்ளையார் |
| திருநல்லூர் | - | சாலக்கிராம விநாயகர் |

| | | |
|---|---|---|
| **திருந்துதேவன்குடி** | - | கர்க்கடக விநாயகர் (நண்டு பூசித்த விநாயகர்) |
| **மயூரபுரம்** | - | மயூரேச விநாயகர் |
| **காசி** | - | துண்டி விநாயகர் |
| **மதுரை** | - | சித்தி விநாயகர் |
| **காளத்தி** | - | மஞ்சந்தி விநாயகர் |
| **மகாபலேஸ்வரம் அல்லது திருக்கோகர்ணம்** | - | மகாகணபதி |
| **செல்லக்கதிர்காமம்** | | மாணிக்க விநாயகர் |

## சதுர்த்தி விரதம்

*ஒவ்வொரு மாதமும் பிரதமை முதல் அமாவாசை அல்லது பௌர்மணி வரையுள்ள திதிகள் பதினைந்தும் இரண்டு முறை வருகின்றன. அவற்றுள் நான்காவதாக வரும் திதி சதுர்த்தி தினமாகும். விநாயகப் பெருமான் பிறந்த தினமும் சதுர்த்தி திதியே. எனவே ஆனைமுகனைப் பூசிக்க ஏற்ற விஷேச தினம் சதுர்த்தி தினமாக புராணங்களில் சொல்லப்பட்டுள்ளது. அமாவாசைக்குப் பின் வரும் சதுர்த்தி மாத சதுர்த்தி. பௌர்ணமிக்குப் பின் வரும் சதுர்த்தி சங்கடஹர சதுர்த்தி எனப்படுகிறது.*

## சங்கடஹர சதுர்த்தி

*மாதம் தோறும் வரும் தேய்பிறைச் சதுர்த்தி தினமே சங்கடஹர சதுர்த்தியாகும். மாசிமாதம் செவ்வாய்க்கிழமையில் வரும் சதுர்த்தி தினத்தில் தான் இவ்விரதத்தைத் தொடங்கவேண்டும். விரதமிருப்பவர்கள் பகல் முழுவதும் உடபவாசம் இருந்து இரவில் சதுர்த்தி பூஜை முடிந்தபின் உணவருந்தி விரதம் முடிக்க வேண்டும். (மாசி மாதத்தில் சதுர்த்தி செவ்வாய்க்கிழமையில் வராவிட்டால் அவசியம் விரதம் இருக்க வேண்டும் என விரும்புவர்கள் ஏதாவொரு மாதத்தில் செவ்வாய்க்கிழமையில் வரும் சதுர்த்தியில் விரதத்தினை ஆரம்பிக்கலாம்) சிலர் கொழுக்கட்டைகளை பிரசாதமாக உண்டு இரவு ஆகாரத்தைத் தவிர்த்துவிடுவர். குழந்தை வரம் வேண்டி இவ்விரதம் அனுஷ்டிப்பவர்கள் அன்று முழுவதும் உபவாசம் இருந்து மறுநாட் காலையில் பாரணை செய்ய வேண்டும்.*

*விநாயகருக்கு வன்னி இலை, மந்தாரை மலர்கள் மற்றும் அறுகு என்பவற்றால் அர்ச்சனை செய்வித்து பருப்பு, நெய்யுடன் சேர்ந்த அன்னம் (சாதம்), கொழுக்கட்டை (மோதகம்) என்பவற்றை நிவேதனம் செய்ய வேண்டும்.*

# யாழ்ப்பாணக் குடாநாட்டில் விநாயகர் வழிபாட்டு மரபின் தோற்றமும் தொன்மமும் - சில குறிப்புக்கள்.

பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா
வரலாறு - தொல்லியற்றுறை,
யாழ் - பல்கலைக்கழகம்

## அறிமுகம்:

யாழ்ப்பாணக் குடாநாடு என்ற நிலக்கூறு தனித்துவமான பண்புகள் பலவற்றைப் பெற்றிருப்பதனைக் காணமுடிகிறது. புவியமைப்பியல் அடிப்படையிலும், மக்கள் பரம்பல், வாழ்வு, பண்பாட்டு அடிப்படைகளிலும், மக்கள் பரம்பல், வாழ்வு, பண்பாட்டு அடிப்படைகளிலும் அத்தனித்துவமான பண்புகளை அவதானிக்க முடிகிறது. இக்குடாநாட்டிலுள்ள கோயிற்கட்டிடக்கலை என்று எடுத்துக்கொண்டாலும் அதன் தனித்துவமான இயல்புகளைக் காணமுடிகின்றது. வீட்டுக்கட்டிடங்களின் அமைப்பிலும் மிகவும் தனித்துவமான வடிவங்களைக் காணமுடிகிறது.

இத்தகைய சிறப்பியல்புபகளைத் தாங்கியுள்ள யாழ்ப்பாணக்குடாநாடு அதன் உள்ளூர் பிரதேச பிராந்திய வாழ்விடங்கள் பொறுத்து ஒன்றிலிருந்து மற்றொன்று தனித்துவமான வாழ்க்கைக் கோலங்களைக் கொண்டிருப்பதனையும் காண்கின்றோம். இவ்வாறான ஒரு பண்பாட்டுப் பிரிதளப் பரிமாணத்திற்கான இயங்குதளம் மிகவும் தொன்மையான சமூக பொருளாதார, சமய இயக்க மூலங்களினால் கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் மிகத்தெளிவாக உள்ளது[1]. ஒரு புண்ணிய பூமியாக மாருதப்புரவீக வல்லியினாலும், சங்கமித்தையினாலும், லவல்லியினாலும், மணிமேகலையினாலும், கண்ணிகியினாலும் வருகை புரிந்து, அறநெறி காத்த போதனையாளர் வந்து தங்கிய தளமாக - மணியல்லவமாக - நாக நாடாக - ஏழ்பனைநாடாக - ஈழமண்டலமாக விளங்கியிருந்தமையைக் காணும்போது யாழ்ப்பாணக் குடாநாட்டின் சமய - புனித தீர்த்த யாத்திரைக்குரிய வலையமைப்பின் தொடர்புகள் மிகவும் புராதன காலப் பரப்பொன்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டமையை அனுமானிக்கலாம். அவ்வழியே விநாயகர் மரபும், அம்மரபு இக்குடாநாட்டினுள் போற்றப்படத் தொடங்கிய காலப்பகுதியும் மிகவும் தொன்மையானது என்பதனை தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் வாயிலாக நிறுவமுடிகிறது.

## பண்பாட்டு வருகையை உள்வாங்கியிருந்த முகப்புக்கள்

யாழ்ப்பாணக்குடாநாடு என்றவோர் தனித்துவமான புவியில் நிலக்கூறு இலங்கைத்தீவின் பண்பாட்டு வரலாற்றிற்கு ஒரு தனித்துவத்தினையும், தலைமைத்துவத்தினையும் வழங்குவதற்கேற்ற வகையில் கடல்முகப்புத் தளங்களைக் கொண்டு காணப்பட்டிருந்தது. அதாவது இத்தீவகத்திற்கான பண்பாட்டு அறிமுக நிகழ்வுகளில் தொண்ணூறு வீதமானவை யாழ்ப்பாணக் குடாநாட்டின்கண் அமைந்திருந்த

கடல் முகப்புத்தளங்களினூடாகவே உள்வாங்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இக்குடாநாடு என்ற தனித்துவமான பிரதேசம் மிக நீண்ட நெடுங் காலத்திலிருந்தே இலங்கைத்தீவிற்கான பண்பாட்டு உள்வாங்கலில் ஒரு தலைமையான நிலையில் இருந்துவந்திருப்பதனைக் காணமுடிகிறது. கௌதமபுத்தரின் (நாகதீப) வருகை, கண்ணகி வருகை, சங்கமித்தையின் வருகை போன்ற ஐதீகங்கள் மிகத் தொன்மைவாய்ந்த சமூக - பொருளாதார வழிபாட்டு நிறுவனங்களின் உட்செலுத்துகையை யாழ்ப்பாணக் குடாநாட்டின் அமைவிடம் பெற்றிருந்தது என்பதனையே குறிக்கின்றது எனலாம். சாபவிமோசனம் நாடிப் புனித நீர் - தீர்த்த சமயப்பெரியார்கள், முனிவர்கள் தவசிரேஷ்டர்கள் ஆகியோர் மையங்களுக்கு வருகை தந்தமை பற்றிய கதைமரபுகளும் இங்கு காணப்படுவதிலிருந்து புனிதர்களும் ரிஷிகளும் இங்கு நிலைகொண்டிருந்திருக்கக்கூடிய ஆதரவினைக் கொடுத்த போஷணையாளர் வாழ்ந்த மையமாகவும் இக்குடாநாடு விளங்கியிருந்தமையைக் காணலாம்.

கணபதி வழிபாட்டு மரபும் அவ்வாறான ஒரு அனுசரணையாளர்களின் கூட்டான வாழ்வுமுறையினூடாக இக்குடாநாட்டின்கண் வேரூன்றி, தழைத்து, பண்பாட்டடிப்படையில் மக்களின் வாழ்வியலின் ஓரங்கமாக மாறிவிட்டிருந்தது. குளக்கரைகளிலும், தொடக்க வாயில்களிலும், ஊரின் எல்லைகளிலும், வயல்வெளியின் மையத்திலும் கணபதியை வைத்து வணங்கும் முறை பிரசித்தமானதற்குப் பின்னணியில் சமூக, பொருண்மிய அபிவிருத்திகளே பெரிதும் அடிப்படைகளாக விளங்கியிருந்தன. இதற்கும் மேலே வர்த்தக / வாணிய நடைமுறை வாழ்விலே கணபதியின் பிரசன்னம் மிகவும் அத்தியாவசியமாகப் புரிந்து கொள்ளப்பட்டது. கணபதி கணக்குப்போடுவதில் வல்லமையுள்ள தெய்வமாகையால் காதலும் வாணிபமும் எவ்வித இடையூறுமில்லாமல் வளர்வதற்காக கணபதியை இறைஞ்சுகின்ற ஒரு மனோபாங்கு வளர்ச்சியடைந்தது.[2] விக்கினம் தீர்த்து செல்லும் பாதையை (மார்க்கத்தினை) இடையூறுகள் நிகழா வண்ணம் காத்திருள் பாலிக்கும் தெய்வமாக விநாயகர் வழிபடப்பட்டதன் பின்னணியில் விநாயகர் வழிபாடு யாழ்ப்பாணக்குடா நாட்டிலே பரவியிருந்ததென்றால் அது மிகத் தொன்மமான வாணிப மார்க்கங்களினூடாகப் பயணித்து வந்த மக்களின் இருப்பினை உறுதிப்படுத்தியுள்ளது எனலாம். தென்கிழக்காசிய நாடுகளுடன் கொண்ட வாணிபத்தொடர்புகள், தென்னிந்தியாவுடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்புகள் போன்றவற்றிற்கான கடல்முகப்புத் தளங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே காணப்பட்டிருந்தன. வன்னிப் பிரதேசத்திலிருந்து உள்வாங்கப்பட்ட பண்பாட்டு அலைகளுக்குரிய முகப்புக்களும் இங்கு காணப்பட்டிருந்தமைக்கான ஆதாரங்களும் உள.[3]

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் காணப்படும் விநாயகர் வழிபாட்டுமரபுகள் யாவும் வன்னிப்பிராந்தியத்திலிருந்து தென்மராட்சிக் கடனீரேரிப் பரப்பினூடாக எடுத்து வரப்பட்டவையாகக் காணப்படுகின்றன. வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் காணப்படும் பண்பாட்டு மையங்களுக்கான உள்வாங்கல் கேரளம், திருநெல்வேலி மாவட்டம் போன்றவற்றிலிருந்து நிகழ்ந்தவைகளாக உள்ளன. எனினும் கேரள மாநிலத்திலிருந்து கணபதி வழிபாடு யாழ்ப்பாணக்குடா நாட்டிற்குள் ஊடுருவியருந்தமைக்கான தொல்லியற்சான்றுகள் இதுவரையில் கிடைத்திருக்காவிடினும், கேரளம் கடல் வாணிபத்தின் செழிப்பிலே யாழ்ப்பாணக் குடநாநாட்டின் பண்பாட்டு வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பினை நல்கியிருந்தமையைக் காணமுடிகிறது. கண்ணகி வழிபாட்டுமரபின் வருகை அவ்வாறான பங்களிப்பிலே குறிப்பிடத்தக்கதாகும்.[4]

இருந்தும் எண்கோண வட்டக் குடிலமப்பில் அமைந்துள்ள தில்மையம்பலப் பிள்ளையாரின் வழிபாட்டு சடங்குமுறைகள்யாவும் கேரளப்பிரதேசத்துடன் இன்றும் எடுத்துக் காட்டப்படுவது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். இதுவரைகாலமும் இத்தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் சடங்காசார முறைகள் பற்றி எவருமே ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் அனைவராலும் நன்கு அறியப்பட்ட ஒரு பிரதான கணபதி வழிபாட்டுத் தலமாக இன்றும் மிளிர்ந்துகொண்டிருப்பது தில்லையம்பலப் பிள்ளையார் கோவிலின் தனித்துவமான வளர்ச்சி நிலையையே எடுத்துக்காட்டு கின்றதெனலாம்.[5]

இதே நேரத்தில் வலிகாமம் மேற்கில் பறாளை விநாயகர் வழிபாட்டு மரபு மகநீண்ட காலமாக கி.பி நூற்றாண்டிலிருந்தே தேர் உற்சவச் சடங்குகளுடன் நிகழ்த்தப்பெற்றதாக இருந்து வருவதும் இங்கு மனங்கொள்ள வேண்டியதாகும். வெள்ளரசமரத் தலவிருட்சத்தினைக் கொண்டுள்ள பறாளை விநாயகர் வழிபாட்டு மரபுகளுடன் பௌத்தப் பாரம்பரியம் பின்னணியிலிருந்திருக்க வேண்டும்.[6] எனவே இவ்வாய்வுக்கடடுரையின்கண் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த கணபதி வழிபாட்டு மரபுகள் தென்கிழக்காசியா தென்னிந்தியா மற்றும் வன்னிப் பிராந்தியங்களிலிருந்து நேரடியான உள்வாங்கலைப் பெற்றிருந்தமை பற்றியும் அவ்வழியே அம்மரபின் தொன்மையையும் ஆராய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

## குடாநாட்டினுள் கணபதி மரபின் தொன்மம்

யாழ்ப்பாணக் குடாநாட்டினைப் பொறுத்தவரையில் கணபதி வழிபாட்டின் தோற்றகாலம் எது என்பதனைக் கண்டு கொள்வது சற்று சிரமமாகவிருப்பினும், புராதனம் வாய்ந்த தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த மையங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட சுடுமண் உருங்கள், சிறிய உலோகச் சிற்பங்கள் போன்வற்றிலிருந்து கணபதி மரபின் தொன்மத்தினை சற்று உணர்ந்து கொள்ள முடியும். அந்த வகையில் கந்தரோடையிலிருந்து காலத்திற்குக்காலம் சேகரிக்கப்பட்ட பொருட்களில் மூன்று சுடுமண் உருவங்கள் மிகப்புராதனம் வாய்ந்த விநாயகர் வடிவமாகத் திகழ்வதினை இங்கு சுட்டிக்காட்டுவது மிகப்பொருத்தமாகும். இம்மூன்று சுடுமண் உருவங்களும் கந்ததேராடையிலுள்ள அருளானந்தப்பிள்ளையார் கோயிலின் பின் வீதியிலுள்ள ஒரு மையத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (1985 ஆம் ஆண்டில் இக்கட்டுரையாசிரியரினால் மேற்கொள்ளப்பட்ட இதேமையத்தில் அமைந்த ஆய்வுக்குழியொன்றின் அகழ்வின்போது தமிழ் பிராமி மட்பாண்ட சாசனங்கள் உட்பட குறிப்பிடத்தக்க தொல்லியல் எச்சங்கள் இங்கிருந்து மீட்டெடுக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது)

கிடைத்துள்ள சுடுமண் சிற்பங்கள் மிகவும் பழமையானவை என்பதில் சந்தேகமில்லை.[7] இம்மூன்று சுடுமண் உருவங்களில் மூன்றாவது சிறிய உருவமானது மிகத்தெளிவாகத் தும்பிக்கையுடனான விநாயகர் உருவத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றது. இவற்றையொத்த சுடுமண் உருவங்கள் பல புங்குடுதீவிலுள்ள வேரப்பிட்டியில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்படிருந்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அவற்றுள் விநாயகர் வடிவ மண் சிற்பங்களும் உள்ளடங்கியிருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கந்தரோடையிலிருந்து சேகரிக்கப்பட்ட கணபதி உலோகச் சிலைகள் இரண்டு இப்பிராந்தியத்தில் அதன் வழிபாட்டுத் தொன்மத்தினை எமக்கு உறுதிப்படுத்தி நிற்பதனைக் காணலாம். ஏற்கனவே இச்சிலைகளின் இயல்புகள் வடிவமைப்பு போன்றவை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. (**இலங்கையில் இந்து உலோகப் படிமங்கள் உருவாக்கமும் உருவாக்கிவர்களும்** என்ற தலைப்பில் அச்சாகிக் கொண்டிருக்கின்ற ஒரு நூலிலும் கந்தரோடையிற் கிடைத்த இவ்விரு விநாயகர் படிமம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது) Prototype க்குரிய விநாயகர் வடிவமாக இவ்விரு உலோகப் படிமங்களும் காணப்படுவதினால் அவை கிறீஸ்தாப்தத்தின் தொடக்ககாலப் பகுதிக்குரியவையாக காலக்கணிப்பீடு ஓர் உத்தேசமட்டத்தில் செய்யப்பட்டுள்ள போதிலும் அவற்றையொத்த வேறு படிமங்களுடன் ஒப்பிட்டு ஆய்வதன் மூலமே இவற்றின் தொன்மத்தினை நன்கு வரையறை செய்து கொள்ள முடியும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் மிகவும் புராதனம் வாய்ந்தவொரு வழிபாட்டு மரபு உடுவில் பிரதேசத்திலுள்ள மல்வம் என்ற மையத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இங்குள்ள இரட்டைக் கோயிலான பாலசுப்பிரமணியர் கோவில் பழம் பெருமை வாய்ந்த கற்சிற்பங்களையும் வெண்கலப் படிமங்களையும், கல்வெட்டுக்களையும் கெனாண்டிருப்பதனைக் காண்லாம். அந்த வகையில் கற்சிற்பமாகக் காட்சியளிக்கும் கணதி வடிவமொன்று தொன்மம் வாய்ந்ததாக விளங்குவதனைக் காணலாம். பொலனறுவையிற் கிடைத்துள்ள கல்லாலான விநாயகர் படிமங்களுடன் மல்வத்திலுள்ள இவ்வுதாரணத்தினை ஒப்பிடக்கூடியளவிற்கு தனித்துவம் வாய்ந்ததாக விளங்குவதனைக் காண முடிகிறது. பிற்பட்ட சோழர் காலக் கலைப் பாணிக்குரிய இயல்புகள் இம் மல்வத்திலுள்ள விநாயகர் படிமத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மிகவும் ஆழமாக இவ்வாலயத்திலுள்ள படிங்களை மேலும் ஆராயும் போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் வளர்ச்சியடைந்திருந்த இந்து விக்கிரஹவியல் பண்பாடு தொடர்பாக பல புதிய தகவல்கள் கிடைக்கும் என்பது உறுதி.

## மோதகக்கணபதி + மாம்பழக்கணபதி மரபுகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கணபதி வழிபாட்டு மரபின் தொன்மமானது கிறீஸ்தவ சகாப்தத்தின் முற்பட்ட காலத்திலிருந்தே காணப்படுகின்ற போதும் அம்மரபு எந்த வகைக்குரியது என்பதனை இனங்காணவேண்டிய நிலையொன்றுண்டு. மோதகக்கணபதி மரபு (Rice cake traclutans) நெல்லுற்பத்திப் பொருண்மிய சமூக அலகுடன் தொடர்பு பட்டதாகவும் மாம்பழக் கணபதி மரபு பருத்தி நூல் + நெசவு + ஆடையுற்பத்திப் பொருண்மிய சமூக அலகுடன் தொடர்புப்பட்டதாகவும் விளங்கியிருந்தமையை பௌராணிக மரபுகள் சித்தரிக்கின்றன. இலங்கைத் தீவினை எடுத்துக் கொண்டால் இத்தீவின் கிழக்குக் கரையோரமாகக் காணப்படும் கணபதி வழிபாட்டு மரபு மோதகக் கணபதிக்குரியதாகவும் தீவின் மேற்குக் கரையோரமாகக் காணப்படும் மரபு மாம்பழக் கணபதிக்குரியதாகவும் காணப்படுவதற்கான காரணம் முறையே தென்கிழக்காசியா வட இந்தியாப்பண்பாட்டலைகளின் செல்வாக்கே ஆகும்.[8] யாழ்ப்பாணக் குடா நாட்டினுள்ளே இந்த இரண்டு மரபும் சங்கமித்திருப்பதனைக் காண்கின்றோம். வடமராட்சியும், வடமராட்சி கிழக்கும் மோதககக் கணபதி மரபினையும் வலிகாமம் மாம்பழக் கணபதி மரபினையும் கொண்டு விளங்குவதனைக் காணலாம். இங்கு நெல்லுற்பத்திப் பொருண்மியமும் சேலை + தறிப்புடவை + பருத்தியுற்பத்திப்

பொருண்மியமும் ஒன்று கலந்திருந்த வகையில் புராதன சமூகவுருவாக்கத்திற்கு வழிகோலியிருப்பதனைக் காணலாம். இதற்காதாரமாக விஜயன் வருகையின்போது குவேனி பருத்திநூல் நூற்றுக் கொண்டிருந்த மரபு சிறந்தவொரு எடுத்துக்காட்டாகும். பருத்திப் பண்பாடும் மாம்பழக்கலாசாரமும் இங்கு தனித்துவமான சமூக - பொருண்மியக் கட்டமைப்பொன்றினை உருவாக்கிவிட்டிருந்த அதே நேரத்தில் நெல்லுற்பத்திப் பொருண்மியமும் மோதகப் பண்பாடும் நீர்வள நாகரீக சமூக உருவாக்கத்திற்கு வழிசமைத்துவிட்டிருந்த வகையைக் காணலாம். மத்தியகால இலங்கையின் கணபதி வழிபாட்டு மரபில் விளாங்கனிமரபு தோற்றம் பெற்றிருந்தமையைக் காணும்போது மேற்கூறிய இருமரபுகளும் ஒருபொதுமரபாக சிங்கள - பௌத்த மரபிற்குரிய கணபதி வழிபாட்டு மரபொன்று உருவாகிவிட்டிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். இப்பின்னணியிலே எதிர்காலத்தில் யாழ்ப்பாணக்குடாநாட்டில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருந்த விநாயகர் வழிபாட்டுமரபின் தோற்றம் பற்றிய ஆராய்வதே பொருத்தமான தாகும்.

## அடிக்குறிப்புக்கள்

1. கிருஷ்ணராசா.செ. தெல்லியமும் யாழ்ப்பாணத்தமிழர் பண்பாட்டுத் தொன்மையும் பக் 20. 1998, யாழ்ப்பாணம்.

2. கிருஷ்ணராசா, செ: தென் - தென்கிழக்காசிய நாடுகளில் கணபதி வழிபாட்டு மரபும் தொன்மையும், பத்மம் (prof. S.Pathmanathan Felicitation Valume) P5 2004. Chennai.

3. வன்னப்பிராந்தியத்திற்கும் யாழ்ப்பாணக்குடா நாட்டிற்கும் இடையில் சங்கால வாணிபத்தொடர்புகள் மிகவும் இறுக்கமாக இருந்தமையினை அண்மைக்காலத்தில் திரு. குணரட்ணம் என்பவர் மேற்கொண்டு வரும் தொல்லியல் கண்டுபிடிப்புக்களினூடாக உறுதிப்படுத்த முடிந்தது. தமிழ்ப்பிராமி வரிவடிவம் பொறித்த சங்கால மீன்வடிவ நாணயங்கள் பலவற்றை அவர் தனது சேகரிப்பில் கொண்டுள்ளார். நாகர் அல்லது நாக என்ற பெயருடன் அவை காணப்படுவது யாழ்ப்பாணமான நாகதீபத்திற்கும் வன்னிப்பிராந்திய வாணிபத்திற்குமிடையே இருந்திருக்கக்கூடிய தொடர்புகளை உறுதிப்படுத்த உதவியுள்ளது.

(நீர்வேலி வாய்க்காற்றரவை பிள்ளையார் கோயிலுக்குரிய மூலவர் சிற்பமும் வன்னிப்பிரதேசத்திலிருந்து நெல்மூடைகளுக்குள் மறைத்து வைத்த நிலையிலேயே எடுத்து வரப்பட்டது என்பதும் இங்கு நோக்கத்தக்கது .

4. கந்தரோடை :- மாகியப்பிட்டிக் கணமையில் அமைந்துள்ள அங்கணாவைக்கடவை என்று அழைக்கப்படும் புராதன கண்ணகையம்மன் ஆலயமே முதலாம் நிலைக்குரிய புராதன ஆலயமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படுகிறது. கண்ணகி தெய்வத்திற்க்கு எடுக்கப்பட்ட விழாவில் கலந்து கொள்ளச்சென்ற இலங்கைவேந்தனான முதலாம் கயவாகு மன்னனே இலங்கைக்குத் திரும்பும்போது அக்கண்ணிகையம்மன் சிலையைக் கொண்டுவந்ததாக மரபுகள் குறிப்பிடுகின்றன. அங்கண் அம்மைக்கடவை என்பதே அதன் புராதன பெயர்.

5. தில்லையம்பலப் பிள்ளையார் வழிபாட்டுமுறையில் தனித்துவமான பல கூறுகள் காணப்படுகின்றன. கருவறை எண்பக்கக் கோணங்களையுடைய விசாலமான

அமைப்பாகும். ஆகமமுறைப்படி இங்கு எந்தக் கிரியை முறைகளும் நடாத்தப்படுவது இல்லை. மோதகப்படையல் மிகப்பிரதானமான நைவேத்தியமாகும். கருவறையிலுள்ள திருவருவம் தனிப்பாலினாலேயே குளிப்பாட்டப்படுவது பொதுவழக்கு. மிகப புராதனகாலத்திலிருந்தே அப்பாரம்பரியம் பின்பற்றப்பட்டுக் கொண்டு வரப்படுவது குறிப்பிடத்தக்கது.

6. கிருஷ்ணராசா,செ. தென் தென்கிழக்காசிய நாடுகளில் கணபதி வழிபாட்டுமரபும், தொன்மையும் பத்மம், பக் 4.

7. கிருஷ்ணராசா, செ. தென் - தென்கிழக்காசிய நாடுகளில் கணபதி வழிபாட்டு மரபும் தொன்மையும். பத்மம், பக் 2.

8. மேற்படி பக் 7

## விநாயக ஷஷ்டி விரதம்
## (பிள்ளையார் பெருங்கதை)

*இந்த விரதமானது கார்த்திகை மாதக் கார்த்திகையை (திருக்கார்த்திகை விளக்கீடு) அடுத்து வரும் கிருஷ்ணபட்ச (தேய்பிறை) பிரதமையும், ரோகிணி நட்சத்திரமும் சேர்ந்த நாளில் ஆரம்பித்து ஷஷ்டி திதியும், சதய நட்சத்திரமும் சேர்ந்து வரும் விசேஷ நாளில் விரதாந்தமாக (நிறைவு நாள்) அமைகிறது. ஆரம்ப தினத்தில் சங்கல்பம் செய்து முதல் இருபது நாளும் ஒரு பொழுது உணவருந்தி, நிறைவு நாளான ஷஷ்டியில் உபவாசமிருந்து, இருபத்தொரு (21) இழையாலாகிய காப்பை ஆண்கள் வலது கை மணிக்கட்டிலும், பெண்கள் இடது கை மணிக்கட்லும் கட்டி மனதை ஒருமுகப்படுத்தி ஆலய வீதி வலம் வந்து விநாயகர் அகவல், விநாயகர் கவசம் மற்றும் பிள்ளையார் காப்புக்கதை என்பவற்றைப் படித்து முறையாக விரதம் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் வீதி வலம் வரமுடியாதவர்கள் 21ம் நாள் 21 முறை வீதி வலம் வரவேண்டும்.*

"அப்பமுப்பழம் அமுது செய்தருளிய
தொப்பையப்பனை தொழ வினையறுமே"



# நீர்வேலி, வாய்க்காற்றரவை
# மூத்த விநாயகர் தேவஸ்தானம்

## வரலாற்றுக் குறிப்புக்களும் வளர்ச்சிப் படிகளும்

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா இறைவன் தன் பெருங்கருணையினால் ஆன்மாக்களை உய்வித்தற் பொருட்டுப் பல திருவிளையாடல்களைப் புரிந்திருப்பதைப் புராணங்கள் வாயிலாக அறிகிறோம். அவ்விதமே அவரது திருவிளையாடலால் பல திருத்தலங்கள் உற்பவமாகியிருப்பதைக் காண்கின்றோம். மூத்த விநாயகர் ஆலயமும் விநாயகரது திருவிளையாடலால் தோன்றியது.

பதினெட்டாம் நூற்றாண்டளவில் நீர்வேலிக்கு வடமேற்காக உள்ள குப்பிளான் பகுதியை சேர்ந்த கமஞ்செய்யும் மக்கள் மாட்டு வண்டியில் வன்னிப்பகுதிக்குச் சென்று நெல் முதலிய தானியங்களைத் தமது ஊருக்குக் கொண்டு வருவார்கள். அவர்கள் செல்லும் மார்க்கம் நீர்வேலி ஊடாக இருந்தது. கோப்பாய் கைதடிப் பெருவெளிப்பாதையால் வந்தவர்கள் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பெருந் தெருவிலிருந்து புன்னாலைக்கட்டுவனுக:கு செல்லும் சந்திக்கு அணித்தாக உள்ளது மூத்தநயினார் கோவில் எனும் காணி.

இக்காணி இலுப்பை மரங்கள் செறிந்து வளர்ந்ததோடு ஒரு சிறு குளமும் உடையதாக அமைந்திருந்த காரணத்தால் வழிப்போக்கர்கள், மட்டுவண்டிவில் பொருட்கள் ஏற்றிச்செல்பவர்கள், தாங்களும் தமது கால்நடைகளும் தண்ணீர் அருந்தித் தாகமும் தீர்த்து, ஆயாசம் தீர்த்து தமது ஊர்களுக்குச் செல்வது வழக்கம். அவ்விதம் வன்னிப்பக்கத்தில் கமஞ்செய்து வருங்காலத்தில் வயலொன்றில் பிள்ளையார் விக்கிரகம் ஒன்றை அவர்கள் கண்டெடுத்து, அவ்விக்கிரகத்தைத் தமது ஊரில் ஸ்தாபிக்க விரும்பி அதனை ஒருநெற்சாக்கில் கட்டி வண்டியில் வரும் மார்க்கத்தில் வழமைபோல் நீர்வேலி மூத்த நயினார் கோவில் வளவில்த் தங்கி தமது களைப்பு நீங்க நெல்லு மூடைகளை மாட்டுவண்டியிலிருந்து கீழ் இறக்கித் திரும்ப வண்டியில் ஏற்றவேண்டிய அவசியமேற்பட்டது. அதன் காரணமாக நெல்மூடைகளைத் திரும்ப வண்டியில் ஏற்றப்படும் பொழுது பிள்ளையார் கட்டப்பட்டிருந்த நெல்மூடையைத் தூக்க முடியவில்லை. கூடிய முயற்சி செய்தும் இயவில்லை "எல்லாம் வல்ல இறைவன் வல்லமைக்கு முன் மனிதர் வல்லமை எம்மட்டு!" முடிவில் இது பிள்ளையாரின் திருவிளையாடல் என்றெண்ணித் தங்கள் ஊருக்குச் சென்று விட்டனர்.

இதனையறிந்த அக்காணிக்குரிய சிறுப்பிட்டியைச் சேர்ந்த உயர்வேளாண் மரபைச் சேர்ந்த சுப்பிரமணியர் குருநாதர் என்பவர் நீர்வேலி குருக்கள் குடியைச் சேர்ந்த **சிவசுவாமிக்குருக்கள் முத்துச்சாமிக்குருக்களை** ஆணுகி விநாயகரை அவ்விடத்தில் ஓர் ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டை செய்தனர். அத்தோடு அசைவுள்ள கோவில் தளபாடங்கள், அசைவற்ற காணிகள், வயல்கள் முதலியவற்றைத் தருமசாதனஞ் செய்து 1880 ஆம் ஆண்டளவில் சிவசுவாமிக்குருக்கள் முத்துச்சாமிக்குருக்களிடம் நித்திய நைமித்திகங்களைச் செய்ய அதிகார தத்துவ நன்கொடைச் சாட்டுதல் உறுதியை முடித்துக்கொடுத்திருந்தார்.

சில காலங்கள் முத்துசாமிக்குருக்கள் கோவிற்காரியங்களைப் பார்த்து வந்தார். சிவசுவாமிக்குருக்கள் முத்துசாமிக்குருக்கள் வயோதிபமடைந்தபடியாலும், சந்ததி இல்லாத காரணத்தாலும் தமது உடன்பிறந்த சகோதரி மகனாகிய **சோமசுந்தரக்குருக்கள் சந்திரசேகரக்குருக்களுக்கு** (இவரே அண்ணாச்சாமிக்குருக்கள் என்றபெயரால் அழைக்கப்படுவர்) கோவில் பொறுப்புக்களை ஒப்படைத்தார். அக்காலத்தில் ஆகமக் கல்வியறிவு, கோவிற்கிரியா மார்க்கங்களைக் கற்றுத் தெரிந்த சிவாச்சாரியார்கள் ஊருக்கூர் ஒரு சிலரே இருந்தனர். அவர்கள் கோவில் கும்பாபிஷேகங்கள், மஹோற்சவங்கள் செய்வதற்குப் பல கோவில்களுக்கும் போக வேண்டிய அவசியம் இருந்தது. அதன் காரணமாகக் குறித்த சந்திரசேகரக்குரு நித்தியபூஜை நடத்தக் கஷ்டமாக இருந்தது. அல்லாமலும் அவர்களுக்கு வயல்புலக் காணிகளால் வருமானங்கள் கிடைத்தபடியால் பொருளாதார நெருக்கடியும் இல்லை. கல்விச் செல்வம் சிறந்த காரணத்தால் "குருக்கள் ஆதீனம்" என்று இவர்கள் அழைக்கப்பட்டார்கள். அக்காலத்தில் வரும் ஆகமக் கிரியை சந்தேகங்களையும் பல சிவாச்சார்யர்கள் ஒன்றுகூடி ஆராய்ந்து முடிவு செய்யும் சிறம்பம்சங்களும் இருந்தன.

இதன் காரணங்களால் வாய்க்காற்தரவை மூத்த விநாயகர் கோவிலுக்கு நித்திய பூஜைக் காரியங்களுக்கு ச. **கார்த்திகேசக்குருக்கள்** அவர்களை நியமித்திருந்தார். கார்த்திகேசக்குருக்கள் கோவில் இரண்டாம் வீதியில் அமைந்த வீட்டில் குடியிருந்து, நியமந் தவறாது இருகாலப் பூஜைகளைச் செய்துவந்தார். விநாயகர் சந்நிதானம், மூஷிகம், பலபீடம், சிறிய உற்சவ விநாயகர் இவ்வளவு சுருங்கிய நிலையில் கோவில் அமைந்திருந்தாலும் ஆகமத்தில் நித்திய பூஜை விதியில் விதித்த பிரகாரம் "சிவபூஜாதுரந்தரராகிய கார்த்திகேசக் குருக்கள் நித்திய நைமித்திகங்களைச் செய்து செய்து வந்தார். இதன் காரணமாக சுவாமி சாந்நித்தியகரமாகக் கோவில் வளர்ச்சியடைந்தது. சந்திரசேகரக்குருக்கள் 1918 ஆம் ஆண்டளவில் தமது வயது முதிர்ந்த நிலையில் தமது ஏகபுத்திரானாகிய **சுப்பிரமணிக்குருக்களி**டம் கோவில் பரிபாலனப் பொறுப்புக்களை ஒப்படை சாசனஞ் செய்தார். சுப்பிரமாணியக் குருக்களை அப்பாத்துரைக் குருக்கள் என்றும் அழைப்பதுண்டு.

இவர்களது காலத்தில் முன்னிருந்த சுண்ணாம்பு செங்கற் கட்டடம் ஜீரணமடைந்தபடியால் ஊர்மக்களின் உதவியுடன் பாலஸ்தாபனஞ் செய்து கோவில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மஹாமண்டபம், ஸ்நபனமண்டபம் ஆகியன வெள்ளைக்கல் திருப்பணியாகச் செய்து கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் செய்து மஹோற்சவம், மாதச்சதுர்த்தி உற்சவம் முதலியன சிறப்பாக நடந்தன. இவர்கள்

காலத்தில் **நடராஜக்குருக்கள்** இரண்டாம் வீதியில் வாழ்ந்து நித்திய பூஜைகளை நடத்திவந்தார். அப்பொழுது அவர் இருந்த வீடும் ஜீரணமடைந்ததோடு அவரது குடும்ப ஆரோக்கியமும் நல்லாக இல்லாதபடியால் கோவில் பூஜையில் இருந்து விலகிக் கொண்டார்.

அவரின்பின் சுப்பிரமணியக் குருக்களின் ஏற்பாட்டில் **கோவிலடிஐயா** என்பவர், பிள்ளையாரின் பூஜைக் காரியங்கைளப் பத்து வருடங்கள் வரை நியமமாகச் செய்து வந்தார்கள். இவர் நீர்வேலிக் குருக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆதீனத்தைச் சேர்ந்த சிவாச்சார்யர்கள் குடும்பத்தில் தனது வாழ்க்கைத்துணையை அமைத்துப் பிள்ளையார் கோவிலுக்குத் தெற்குப் பக்கமாக வீடு அமைத்து வாழ்ந்நிருந்தார்.

அவர்கள் காலத்ததுக்குப்பின் சுப்பிரமணியக்குருக்கள் தமது மூத்தமகனைப் பூஜைக்கு ஏற்பாடு செய்து வைத்தார். நடராஜக்குருக்கள் சில வருடங்கள் பூஜை செய்துவரும் காலத்தில் சிவலோகப் பிராப்தியடைந்து விட்டார். அதனைத் தொடர்ந்து சுப்பிரமணியக்குருக்களின் குமாரர்களாகிய **பிட்சாடனக்குருக்கள் என்கின்ற ஆபதோத்தாரணக்குருக்களும், முத்துச்சுவாமிக்குருக்களும்** பிள்ளையாரின் நித்திய நைமித்திகங்களைச் செய்து வந்தார்கள். சுப்பிரமணியக்குருக்கள் தமது பக்தி வைராக்கிய பூஜைகளால் பிள்ளையாரின் அனுக்கிரகச் செயற்பாடுகள் மக்களுக்கு அச்சமூட்டும் வகையில் இருந்தன. இப்பொழுது வேட்டைத்திருவிழாவுக்கு சுவாமி ஆரோஹணிக்கும் மிகப்பெரிய குதிரைவாகனம் வேறொரு கோவிலில் கோவிலில் இரவலாக எடுத்திருந்தார்கள். பின்பு அக்குதிரைவாகனம் கோவிலுக்கு வெளியில் கொண்டு செல்லமுடியாமல் போனகாரணத்தால் பிளன்ளையாருக்கே சொந்தமாகிவிட்டது. சிலர் பிள்ளையாரின் கண்டாமணியைக் களவாக எடுத்துக்கொண்டு போகும்வழியில் அதன் பாரத்தைப் பிள்ளையார் அதிகரிக்கத் திருடர்கள் அந்த இடத்தில் அதனை விட்டுப்போயினர். பல அடியார்கள் மோதகம் செய்து நிவேதனஞ் செய்வித்து பிரார்த்தனை பண்ணிப் பலகாரியங்கள் அனுகூலமடைந்துள்ளனர்.

சுப்பிரமணியக்கருக்குகளின் காலத்தில் தாமே (கொழுக்கட்டை) மோதகத்துக்கு ஆகவேண்டிய பொருட்களை ஆயத்தஞ் செய்து ஆசாரமாக மோதகத்தைச் செய்து மழைவேண்டி நூற்றெட்டு மோதகங்கள் நிவேதனஞ் செய்தவுடன் மழை சொரிந்த அற்புத வரலாறுண்டு. உற்சவமூர்த்திப் பிள்ளையார், சுப்பிரமணியர் உற்சவர் ஆகிய உருவத்திருமேனிகள் அவர்காலத்தில் செய்யப்பட்டன. இவர் தமது வயோதிபநிலையில் 1947 ஆம் ஆண்டில் தமது மைந்தர்களான பிட்சாடனக்குருக்களுக்கும், முத்துச்சாமிக்குருக்களுக்கும் சமபாகமாகக் கோவில் பூஜையைச் சாட்டுதல் பண்ணி மூத்த மகனாகிய ஆபதோத்தாரணக் குருக்களை மனேஜிங் டிரஸ்டியாக நியமித்தார். ஆபதோத்தாரணக்குருக்கள் தமது குடும்பப் பழுக்கள் நிரம்ப இருந்த்தும் விநாயகரின் இடைவிடா அன்பால் கோவிலின் முன்னேற்றத்திற்குப் பல காரியங்களைச் செய்துள்ளார்கள். ஒரு அன்பரின் உதவியோடு நாளொன்றிற்கு மூன்று காலப்பூஜையைச் செய்வதற்கு ஏற்பாடு பண்ணினார். ஸ்தம்ப மண்டபம், வஸந்த மண்டபம், கோபுரம், மணிக் கோபுரம் ஆகியவற்றை உபயகாரர்களையும் அன்பர்களையும் ஊக்குவித்துச் சிற்சாஸ்திர முறைப்படி செய்வித்தார்கள்.

இதற்கு மத்தியில் விநாயகரின் திருத்தேர் மிகவும் புராதனமடைந்து விட்டபடியால் எம்பெருமானுக்கு ஒரு சிறந்த இரதம் செய்து பிள்ளையாரை எழுந்தருளப் பண்ணி அக்காட்சியைப் பார்க்க வேண்டிய எண்ணம் 1958ம் ஆண்டளவில் உண்டாகியது. உடன் தனது பணத்தில் தேரின் அச்சு பார்மரங்கள் முதலியவற்றை வவுனியா, நம்பைக் குளம் காடுகளில் வெட்டிக் (தறித்து) கோவில் வீதியில் கொண்டுவந்து சேர்க்கப்பட்டது. தேருக்கு வேண்டிய பிரமாணப்படி மிகப் பெரிய மருத மரங்கள் வந்து சேர்ந்தன. இதன் பின் தேர்த்திருப்பணி சபை 4.9.59 அன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் குருக்கள் அவர்கள் தலைவராகவும், திரு க.வே. கனகரத்தினம் பொருளாளராகவும் திரு. வே. செல்லத்துரை அவர்கள் செயலாளராகவும் தெரியப்பட்டார்கள். அக் கூட்டத்தில் ஒரு நிருவாக சபையும் தெரியப்பட்டது. இத்திருப்பணிச்சபை செயல்திறமுள்ள கருத்து வேறுபடாத அங்கத்தவர்களைக் கொண்டதாக அமைப்பதற்குக் குருக்களுக்குப் பக்க பலமாக செயல்பட்டவர் பண்டிதர் செ. துரைசிங்கம் ஆவார். சிறுப்பிட்டி விதானை திரு. மு. வேலாயுதர் ஒரு நிர்வாகசபை அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டார். அவரின் அனுசரணையுடன் அச்செழு சிறுப்பிட்டிப் பக்கத்திலும் அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தேர்திருப்பணிச்சபையினர் கால தாமதமின்றிப் பணம் சேர்த்தல் ஊரிலுள்ள இலுப்பை, வேம்பு ஆகிய மரங்களைச் சேகரம் பண்ணுதல் போன்ற பணிகளைத் தீவிரமாகச் செய்தார்கள்.

அக்காலத்தில் வடமாகாண அதிபராகவும், தேர்த்திருப்பணிச்சபை போஷகராகவும் இருந்த திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் விகாரி வருடம் கார்த்திகை மாதம் 28ம் நிகதி தேர்த்திருப்பணி வேலையை ஆரம்பித்து வைத்து இப்பணி விரைவில் நிறைவேறவேண்டுமென்று வாழ்த்தினார்கள். தமிழ் நாடு திருவிடைமருதூரைச் சேர்ந்த கோவிந்தராஜ் ஆசாரியிடம் தேர்வேலை ஒப்படைக்கப்பட்டது. அவர் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த ஆசாரிமார்களுடன் சேர்ந்து தேர் வேலையைச் செய்தார்கள்.

தேர் திருப்பணிச் சபையின் பொருளாளர் திரு. க. வே. கனகரத்தினம் அவர்கள் காலதாமதமின்றி பணம் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார். அவரும் குருக்களும் சேர்ந்து பல செல்வந்தர்களிடம் பணம் பெற்றார்கள்.

பொருள் உள்ளவர்களுக்கு மனம் இருக்காது மனம் உள்ளவர்களுக்கு .பொருள் இருக்காது என்று சாதாரணமாகக் கூறப்படுவதுண்டு. இறைவன் திருவருளால் ஒரளவு பொருள்வாய்ப்பும், நற்பணிகளைச் செய்து நிறைவேற்ற வேண்டுமென்ற உயர்ந்த உள்ளமும் ஒருங்கு வாய்க்கப் பெற்றவர். திரு. க. வே. கனகரத்தினம் அவர்கள். இவரின் பெரும் முயற்சியால் தமிழிசைச் செல்வி K.B. சுந்தராம்பாள் அவர்களின் இசைக்கச்சேரி மூலம் பெற்ற பெருந்தொகைப் பணம் தேர்த்திருப்பணி வேகமாக நிறைவேற உதவியது.

மக்களாலே செய்யப்படும் முயற்சிகளெல்லாம் திருவருட் கலப்பாலே சோபிக்கின்றன. என்றாலும் திருவருட்கலப்புக்கும் மக்களின் தகுதி காரணமாகின்றது. இந்த வகையில் உயிரோட்டமான சித்திர வேலைப்பாடுகளுடன், திரு. R.கோவிந்தராஜா ஆசாரி தேரைச்செய்து முடித்தார்கள். சுபகிருது வருடம் ஆனி மாதம் 23ந் திகதி திருத்தேர் வெள்ளோட்ட வைபவம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான பரிபாலகர்

ஸ்ரீசண்முகதாச மாப்பாண முதலியார் அவர்களாலே திருவடம் பிடித்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுபகிருது வருடம் ஆடிமாதம் 31ந் திகதி வாய்க்காற்தரவை மூத்த விநாயகர் சித்திர இரத்தில் ஆரோகணித்துப் பிரபல நாதஸ்வர மேதைகளின் மங்கள இசையுடன் வீதிவலம் வந்ததும் “நாதசுரகான அரசி மதுரை M.S. பொன்னுத்தாய் அவர்கள் இலவச நாதசுர இன்னிசை அளித்தார்கள்.

தேர்திருப்பணி மலர் ஒன்றும் 1963ல் வெளியிடப்பட்டது. மலர் ஆசிரியரான பண்டிதர் செ. துரைசிங்கம் பல கல்விமான்களின் கட்டுரைகள், பன்னிருதிருமுறை தொகுப்பு, சித்திரத் தேரின் உருவமைப்புப் படங்கள் இன்னும் பல சிறப்பம்ஸங்களுடன் வெளியிட்டார்கள். தேர்திருப்பணிச்சபை வரவு செலவுக் கணக்குகளும் அதனோடு இணைக்கப்பட்டுள்ளது. இக்காலம் மூத்தவிநாயகர் வரலாற்றில் ஒரு பொற்காலம் என கூறலாம்.

பல ஆலயங்களில் திருத்தேர் காவலராக வைரவக்கடவுள் தேர் மண்டபத்தில் (தேர்முட்டியில்) ஒரு பக்கத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இங்கு தேர் மண்டபத்திற்கு தெற்குத்திசையில் மூல விநாயகருக்கு அபிமுகமாக கோயில் கட்டி அதில் விநாயகரே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அவருக்குத் தினமும் ஒரு காலப் பூஜை நடைபெறுகின்றது. மகோற்சவத்தில் ஒரு நாள் சுபமூகூர்த்த வேளையில் நேரடி விநாயகருக்கு அபிஷேக அலங்கார பூஜைகள் செய்து உற்சவ விநாயகர் எழுந்தருளி காட்சியளிக்க தேர் முட்டுப் பொறித்தல் வைபவம் நிகழும். குருக்கள் அவர்கள் தமிழ் நாட்டில் சில இடங்களில் இவ்வாறு நடப்பதாக அதனை விரும்பி அச்சம்பிரதாயத்தை இங்கு ஏற்படுத்தி உள்ளார்கள்.

விநாயகர் பேரருளால் தேர்த்திருப்பணி நிறைவு பெற மஹாகும்பாபிஷேக காலங்கள் நெருங்கி வந்தன. அதன் காரணமாக பாலஸ்தாபனஞ் செய்து பொதுமக்களிடம் தாமே பணம் சேர்த்து விரோதிகிருது விருஷம் வைகாசி மாதம் (4-6-71) வெள்ளிக்கிழமை சுக்கிலபட்ச ஏகாதசித் திதி சித்திரை நட்சத்திரத்தில் விநாயகருக்குப் பஞ்சகுண்டபட்ச மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேகமும் நடைபெற்றன. இக்காலத்தில் சண்டிகேஸ்வரருக்குக் கோவில் அமைத்து சண்டகேஸ்வரப் பிரதிஷ்டைசெய்து வைத்தார்கள்.

இதன்பின் குருக்கள் அவர்கள் தமது ஜேஷ்டகனாகிய சந்திரசேகரக் குருக்களுக்கு சிவாச்சார்ய அபிஷேகஞ் செய்து பிள்ளையாரின் துவஜாரோகஹணம் (கொடியேற்றம் மஹோற்சவம்) செய்வித்து வைத்தார்கள். சிலவருடங்களின் பின் இரண்டாவது குமாரன் சோமசுந்தரக் குருக்களுக்கு 1973ம் ஆண்டில் சிவாச்சார்யாபிஷேகம் செய்து அவ்வருட துவஜாரோகண மஹோற்சவத்தையும் செய்வித்தார்கள்.

பிள்ளையாருக்குப் பரிவார மூர்த்தியாக வல்லி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி பிரதிஷ்டை செய்ய விரும்பினார். தன்னுடைய எண்ணத்தைப் பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்களிடமும் கலந்து பேசி அத்திருப்பணியை எப்படியும் செய்ய

வேண்டுமென்ற காரணத்தால் தமிழ்நாட்டு ஸ்தபதி பெரியசாமி என்பவரை அழைத்துக் கோவில் நிலையமும் குறிக்கப்பட்டது. சில நாட்களில் குருக்கள் உடல் தளர்ச்சி உற்று நோய்வாய்ப்பட்டிருந்தார். தனது இறுதிக்காலத்தை உணர்ந்து உடனடியாகத் தமது குலதெய்வமான மூத்த விநாயகர் கோவில் பரிபாலனப் பொறுப்புக்களை தமது மக்களாகிய சந்திரசேகரக்குருக்கள், சோமசுந்தரக்குருக்கள், சுப்பிரமணியசர்மா ஆகியோருக்குச் சமபாகமாகவும் சம உரிமை உள்ளவர்களாகவும் உறுதிசாட்டுதல் பண்ணி வைத்தார்கள். சிவசிந்தனையும் தன்னிற் பிற்காலம் பிள்ளையாரின் காரியங்கள் நன்றாக மேலோங்கி நடக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் 4-4-74ற்குச் சரியான பிரமாதீச வருடம் பங்குனி மாதம் 24ம் திகதி வியாழக்கிழமை வளர் திரயோதசி பிரதோஷ நன்னாளில் மாலை 4.00 மணியளவில் பிறவாயாக்கைப் பெருமான் திருவடி நிழலில் நித்தியானந்தப் பெருவாழ்வெய்தினார்.

குருக்களின்பின் அவரது இரண்டாவது மகனாகிய சோமசுந்தரக்குருக்கள் மற்றும் பங்களர்களாகிய சந்திரசேகரக்குருக்கள் சுப்பிரமணியசர்மா ஆகியோரின் ஆலோசனையுடன் கோவில் காரியங்களைச் சிறப்பாக நடத்தி வந்தார். குருக்கள் ஆரம்பித்த கந்தசுவாமி பரிவாரக் கோவிலைக் குருக்களின் வேண்டுகோளுக்கு அமையப் பண்டிதார் துரைசிங்கம் அவர்களின் சகோதரமுறையிலுள்ள தம்பையா சின்னத்துரை அவர்கள் கட்டி இராட்சத வருடம் 22ந்திகதி (6-07-75) ஞாயிற்றுக்கிழமை ரோகிணி நட்சத்திரத்தில் மாவிட்டபுரம் சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்களின் தலைமையில் தேவஸ்தான சந்திரசேகரக் குருக்களால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவ்வருடம் மஹாகும்பாபிஷேகத்தில் சின்னத்துரையின் துணைவியார் நாகேஸ்வரி அப்பொறுப்பை ஏற்றுச் சிறப்பாக நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்துடன் அடுத்த வருடம் வைரவர் பரிவார ஆலயம் நீர்வேலி மத்தி வாரித்தம்பி சின்னத்தம்பி அவர்களால் கட்டி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1982ஆம் ஆண்டளவில் யாழ். வர்த்தக வங்கி முகாமையாளராயிருந்தவரும் நீர்வேலியைச் சேர்ந்தவரும் எமது உறவினரும் ஆகிய பிரம்மஸ்ரீ செல்லச்சாமிக் குருக்கள் வைத்திய நாதன் அவர்கள் கோயில் முன்னேற்றத்திற்காக எல்லாவகைகளிலும் பாடுபட்டார். ஆலயத்தில் வருடாவருடம் மஹாகணபதி ஹோமம் நடைபெறுவதற்கு பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்களுடன் இணைந்து செயற்பட்டார். அவரது பாரியாராகிய வித்துவான் ஸ்ரீமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் வேண்டிய வேளைகளில் ஆலயத்தில் சொற்பொழிவுகள் ஆற்றிச் சிறப்பித்தார். (இக் கும்பாபிஷேக மலரிலும் சிறப்பான ஓர் ஆக்கத்தை வழங்கியுள்ளார்.)

சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் நித்திய பூஜை காரியங்களைச் செய்து வரும் காலத்தில் வேறொரு உரிமையுள்ள கோவிலில் கும்பாபிஷேகம், மஹோற்சவப் பொறுப்பை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்தால் சந்திரசேகரக்குருக்களிடம் விட்டுச் சென்றார். சந்திரசேகரக்குருக்கள் பொறுப்பேற்ற காலத்தில் மஹாகும்பாபிஷேகம் செய்ய வேண்டிய காலம் வந்தபடியால் மற்றும் பங்காளிகளுடன் ஆலோசனை செய்து 16-4-83 இல் பாலஸ்தான கும்பாபிஷேகம் நடைபெற்றது. உடனடியாகக் குருக்கள் குடும்பத்தார் முதலீடாக ஒரு தொகைப் பணத்தை செலவழித்து வேலையை ஆரம்பித்துப் பொதுமக்கள் சிரமதானத் தொண்டர்களின் உதவியுடன் வேலைகள் நடைபெற்றன. விநாயகருக்கு இருதள ஸ்தூபி அமைக்கப்பட்டது. இருந்தும் மிகுதி

வேலைகள் கும்பாபிஷேகம் நடைபெறப் பணம் தொகையாகத் தேவைப்பட்டதால் திருப்பணிச்சபை நிறுவி அவர்களின் உதவியுடன் வேலைகள் பூர்த்தியடைந்தது. இக்காலத்தில் ஆலய ஆரம்பகால சந்திரசேகரக்குருக்களால் பூஜிக்கப்பட்ட சிவலிங்கம் டச்சுக் காரரின் ஆக்கிரமிப்பால் இடிபட்ட சிவாலயம் ஒன்றில் கண்டெடுத்த சிவலிங்கம் ஆவுடையாருடன் அமையப்பெற்றிருந்தது. அதற்கு ஒரு ஆலயம் அமைக்க ஆலய தர்மகர்த்தாக்கள் விரும்பி செ.சேனாதிராசாவுடன் ஆலோசித்த சமயம் அவர் மஹோற்சவ இரண்டாம் திருவிழா உபயகாரரில் ஒருவராக இருந்தபடியால் அவர் மற்றைய பங்காளருடன் ஆலோசித்து தமது விருப்பத்தைத் தெரிவித்தார். அத்தோடு முன்னைய விதானையார் கந்தையா ஞானப்பிரகாசம் குடும்பத்தினரும் இணைந்து சிவாலயத்தைக் கட்ட உதவினார். முற்காலம் தொடங்கி சந்திரசேகரக்குருக்கள் விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதர் என்ற நாமத்தால் பூஜித்து வந்தனர். எனவே அம்பாள் நூதனமாகச் செய்ய வேண்டியதாயிற்று.

அப்பொழுது யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் பிரம்மஸ்ரீ. கா. கைலாசநாதக் குருக்களின் ஆலோசனை அங்கீகாரத்துடன் புதிய அம்பாள் (விசாலாட்சி) செய்யப் பெற்றது. அத்திருப்பணியை நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி அருணாசலத்தின் பிள்ளைகள் செய்தனர். திருப்பணிகள் ஓரளவு பூர்த்தியாகிக் குரோதன வருடம் ஆனி மாதம் 20ம் திகதி (4-7-85) வியாழக்கிழமை உத்திராட நட்சத்திரத்திலன்று பஞ்சகுண்ட பட்சமாக மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பேராசிரியர் கா. கைலாச நாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. அதன்பின் சந்திருசேகரக் குருக்களும், சோமசுந்தரக்குருக்களும் நித்திய நைமித்தியங்களை நடத்தி வருகின்றனர்.

விசாலாட்சி அம்பாள் விசுவநாதருக்கு உற்சவ பேரம் இல்லாத குறையை வள்ளிநாயகி வீரசிங்கம் அவர்கள் போக்கி 24.10.94 திங்கட்கிழமை கும்பாபிஷேகம் நடைபெற்றது. இரவு திருக்கல்யாண வைபவம் அருணாசலம் குடும்பத்தார் விமரிசையாகச் செய்தனர். நல்லூர் நியாயசிரோமணி கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையில் இக்கிரியைகள் நடைபெற்றன.

விநாயகருக்கான முக்கிய விரத தினங்கள் எல்லாவற்றிற்கும் உபகாரர்கள் எற்பட்டு அபிஷேகம் உற்சவங்கள் நடைபெறுகின்றன. பூர்வ பட்சச் சதுர்த்தி, ஐப்பசிமாத வெள்ளிக்கிழமை, ஆடிப்பூர அம்மன் அபிஷேகம், நவராத்திரி லலிதா ஸகஸ்கர நாம அர்ச்சனை, விசேட பூஜைகள் பிள்ளையார்கதை படிப்பதுடன் விசேட அபிஷேகம், மூலவருக்கு இலட்சார்ச்சனை, கஜமுகன் போர், மார்கழித் திருவெம்பாவை அபிஷேகம் திருவிழா முதலியன சிறப்பாக நடைபெறும். தைப்பூசத்தன்று அபிஷேகம் விசேட பூஜை நடைபெற்றுப் பிள்ளையார் வீதி வலம் வருவார். தொடர்ந்து திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணப்படிப்பு ஆரம்பமாகும். இது பங்குனி உத்தரத்தன்று மகாகணபதி ஹோமம் அபிஷேகம் நடைபெற்று விசேட பூஜையுடன் புஸ்தகப் பூஜை புராணப் படிப்பு பூர்த்தி அடையும். அன்று மாகேஸ்வரபூஜை நடைபெறும். பங்குனி உத்தரம் அந்தமாகப் பத்து நாட்களுக்குப் பஞ்சமுக விநாகருக்கு இலட்ச்சார்ச்சனை நடைபெறும். சித்திரை வருஷப் பிறப்பு (மேஷசங்கிராந்தி) அபிஷேகம் திருவிழா, தைப்பொங்கல் (மகரசங்கிராந்தி) விசேட அபிஷேகம், திருவிழா நடைபெறும். ஆடி மாத பௌர்ணமி

தீர்த்தாந்தமாகப் பன்னிரண்டு நாட்கள் துவஜாரோகண மஹோற்சவம் நடைபெற்று மறுநாள் மகோற்சவ பிராயச்சித்த அபிஷேகம், மாலையில் சண்டிகேஸ்வரர் யாகம் விசேட வசந்த மணடப பூஜை, சண்டிகேஸ்வர உற்சவம் நடைபெறும். அடுத்த நாள் பகல் அபிஷேகம் பூஜைகள் நடைபெறும். மாலையில் சுவாமி விசேஷ அலங்காரங்களுடன் பூங்காவன உற்சவம் நடைபெறும். தொடர்ந்து பகல் விநாயகருக்கு சங்கடஹரசதுர்த்தி சங்காபிஷேகம் நடைபெற்று மாலையில் சுப்பிரமணிய சுவாமி திருக்கல்யாண உற்சவம். புஷ்பப்பல்லக்கில் விநாயகர், சுப்பிரமணியர் வீதி வலம் வருவர். இத்தோடு வருட பிரம்மோற்சவம் பூர்த்தியடையும்.

இவ்வாறு விநாயகரின் காரியங்கள் நாட்டின் யுத்த நடவடிக்கைகள் மத்தியிலும் அடக்கமாக முறைதவறாமல் நடைபெற்றன. இடம் பெயர்வுகளுடன் சிறு சிறு சேதங்களும் உண்டாகின. பூஜாஹீன பிராயச்சித்தங்கள் சாந்தி ஹோமங்கள் செய்யப் பெற்றுப் பூஜைகள் மகோற்சவங்கள் நடைபெற்றாலும் மழைக்காலங்களில் மழைநீர் ஒழுகுவதால் மிகவும் கஷ்டப்பட வேண்டியும் இருந்தது. மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றுப் பத்தொன்பது வருடங்கள் நிறைவு பெற்று இருக்கும் காலத்தில் தர்மகர்த்தாக்கள் மூவரும் விநாயகர் திருவருளை முன்னிட்டுப் பார்த்திப வருடம் சித்திரை மாதம் 14ம் நாள் (27-04-2005) புதன் கிழமை பாலஸ்தாபனம் செய்தும் வேலை தொடங்கப் பல ஆயத்தங்கள் செய்தும் அனுகூலம் செய்யவில்லை. தர்மகர்த்தாக்கள் ஒவ்வொருவரும் மனம் வெதும்பினார்கள். சோமசுந்தரக் குருக்கள் பூஜை பூர்த்தி பண்ணிப் பிள்ளையாரிடம் முறையிடுவார்.

விய வருடம் பங்குனி உத்தரத் திருநாளன்று பஞ்சமுக விநாயகருக்கு மஹா கணபதி ஓமம், விசேஷ அபிஷேகங்கள் நடைபெற்று இலட்சார்ச்சனைப்பூர்த்தியும், மாஹேஸ்வர பூஜையும் நடைபெற்றன. அப்பொழுது பிள்ளையாரின் திருப்பணிகள் ஆரம்பிக்க வேண்டுமென்று குருக்களுக்கும், மறைந்த க. கணபதிப்பிள்ளை இன்னும் பல அன்பர்களுக்கும் மனதில் விநாயகர் உத்வேகத்தை உண்டாக்கினார். அதன் பெறுபேறாக சர்வசித்து வருடம் சித்திரை மாதம் பத்தாம் நாள் (23-04-2007) திருப்பணி வேலை ஆரம்பித்துப் பணம் சேகரிக்க க. கணபதிப்பிள்ளையும், தொண்டர்களும் வீடு வீடாகச் சென்றார்கள். எல்லா மக்களும் ஆர்வத்துடன் பல உதவிகளைச் செய்ய முன்வந்தனர். புலம் பெயர்ந்த அன்பர்களும் பணம் சேர்த்து அனுப்பினார்கள். செல்வராசா கஜதீபன் பணத்திற்குப் பொறுப்பாளராகப் பற்றசீட்டுக்களை வழங்கித் திருப்பணி வரவு செலவுகளை ஆவணப் படுத்தினார். வேலைகள் துரிதமாக நடந்தன. நிருதி திக்கில் மஹாலக்ஷ்மிக்கு கோவில் அமைக்கப்பட்டது தஷ்ணமூர்த்திக்கும் கோவில் கட்டப்பட்டது. நூதன மூர்த்திகள் வருவிக்கப்பட்டன. தர்மகர்த்தாக்களுள் ஒருவரான சுப்பிரமணியசர்மாவினால் தமிழ்நாடு பிரபல்ய சிவாச்சார்யராகிய காஞ்சிபுரம் சிவஸ்ரீ ராஜப்பாக் குருக்களிடம் மஹா கும்பாபிஷேக முகூர்த்தம் நிச்சயம் செய்யப்பட்டது. சுவஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வதாரி வருஷம் வைகாசி மாதம் 13ம் நாள் 26-05-08) திங்கட்கிழமை கும்பாபிஷேக நாளாகும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தர்மகர்த்தாக்களின் வேண்டுகோளுக்கமைய பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா அவர்கள் செய்தார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள தகுதி வாய்ந்த சிவாச்சார்யர்கள் கும்பாபிஷேகத்தை நடத்திவைத்தனர். வேத, திருமுறை பாராயணங்கள் சிறப்பாக நடந்தன.

ஆலயத்தில் புதிய மூர்த்திகளாகிய மஹாலக்ஷ்மிக்கு முன்னய தேவஸ்தான ஆதீனகர்த்தர் பிட்சாடனக் குருக்கள் துணைவியார் ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மாளின் விருப்பத்திற்கமைய அவருடைய பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளினாலும். தக்ஷிணாமூர்த்தி முன்குறித்த ஆதீனகர்த்தரின் மகள் மருமகன் ஸ்ரீ, ஸ்ரீமதி இரங்கசாமி ஐயரின் பிள்ளைகள், மருமக்கள் குடும்பத்தினராலும், துவஜஸ்தம்ப விநாயகர் கொடியேற்ற உபயகாராகிய திரு. இ. பாலசிங்கம் அவர்களாலும் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

தேரடி விநாயகர் சின்னையா சின்னத்தம்பி சார்பில் செல்லையா ராஜ்மணி அவர்கள் யாக கும்பாபிஷேகத்தை நடத்துவித்தார்கள். மற்ற யாகங்கள் 1985ம் ஆண்டு கும்பாபிஷேகத்தில் செய்த உபய ஒழுங்கில் நடந்தன. மூல விநாயகர் மஹாயாகச் செலவில் ஒரு பகுதி மறைந்த க. கணபதிப்பிள்ளை அவர்களின் பிள்ளைகளால் பொறுப்பேற்கப்பட்டது. ஏனையவை ஆதீனகர்த்தர்களில் ஒருவரான சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்களின் மூத்த மருகரான சிவஸ்ரீ. சா. சுந்தரேசக் குருக்களாலும் சிவஸ்ரீ பிட்சாடனக்குருக்கள் வெங்கடேஸ்வரக் குருக்களாலும் பொறுப்பேற்கப்பட்டன. அத்துடன் கும்பாபிஷேகத் தினத்தன்று சுபமுகூர்த்த வேளையில் நவக்கிர கோவில் அமைப்பதற்காக அஸ்திவாரம் இடப்பட்டது. இக்கோயில் பிரதிஷ்டை செய்வதற்கான பொறுப்பை நீர்வேலி வடக்கு திரு தம்பிராசா குடும்பத்தினர் (ஆசைப்பிள்ளை) ஏற்றுள்ளார்கள். மஹாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நாற்பது நாட்களும் நாற்பத்தைந்து அபிஷேகங்கள் நடந்தன. தினமும் சுப்பிரமணியர் சகிதம் விநாயகப் பெருமான் திருவுலாக் காட்சி தந்தார். இறுதி நாள் மூலவிநாயகருக்கு ஆயிரத்தெட்டு கலச சங்காபிஷேகமும், பரிவார சுவாமிகளுக்கு நூற்றி எட்டு சங்காபிஷேகமும் நடை பெற்று மாலையில் பூந்தண்டிகை உற்சவமும் நடைபெற்றன. இந்த உபயம் நீர்வேலி வடக்கு திரு அம்பிகைபாகன் குடும்பத்தாரால் நடத்தப்பட்டது. இதனையடுத்து ஆடிப் பௌர்ணமியை தீர்த்தாந்தமாகக் கொண்டமையும் மஹோற்சவம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

மூத்த விநாகர் கோவில் சிறப்பும் அருள்வளமும் உடையது. நீர்வேலி வடகிழக்கு (ஈசான) திசையில் அமைந்தது. சர்வகாமபலப்ரதம் சகல விருப்பங்களும் கைகூடும் என்பதேயாகும்.

இவ்வாலயத்தில் பலவருடங்களாகக் கூட்டுப்பிரார்த்தனை நடக்கும் பெரியோர்களும் சிறியோர்களும் சேர்ந்து பஜனை செய்வது ஒரு சிறப்பாகும். இதுகாறும் அருள் மிகு மூத்தவிநாயகரின் ஆலய வளர்ச்சி, அற்புதங்கள் பாரம்பரியங்கள் தொண்டர்களின் சிறப்பு அந்தணர்களின் மாண்பு இவைபற்றி ஆலய வரலாறோடு இணைத்துக் கூறப்பட்டது. மூத்த விநாயகருக்கு ராஜகோபுரம் அமைய வேண்டிப் பிரார்த்தித்து விநாயகர் அருளைப் பெற்றுய்வோமாக.

"சர்வே ஜநாஹா சுகினோ பவந்து"

இங்ஙனம்
இறைபணி நிற்கும்,
ஆ. சந்திரசேகரக் குருக்கள்
ஆதின கர்த்தர்கள் சார்பில்.

# நன்றி நவிலல்

நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் கோவில் புனரமைப்புச் செய்து மஹாகும்பாபிஷேகம் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டதனால் 20-04-2005ஆம் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணி வேலைகள் 19-08-2005இல் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் இத்திருப்பணி வேலைகள் இரு வருடங்களாகியும் பல்வேறு தடங்கல்களால் கைகூடி வரவில்லை. இதன்காரணமாக சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகவில்லையே என ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்திருந்ததால் 2007 ஏப்ரல் மாதத்தில் எவ்வாறாயினும் திருப்பணி வேலைகளை ஆரம்பிக்கவேண்டுமெனத் தீர்மானித்து 23-4-2007இல் விநாயகர் அடியார் காலஞ்சென்ற திரு க. கணபதிப்பிள்ளை அவர்களதும் றேறு சில அடியார்களினதும் உந்துதலின்பேரில் அதற்கான முயற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதும் உபயகாரர்கள் விநாயகர் அடியார்கள் - உள்நாட்டில் வசிப்பவர்களும் வெளிநாட்டில் வசிப்பவர்களும் - மனமுவந்தளித்த உடனடி ஆதரவினால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான முக்கிய தரைவழிப்பாதை மூடப்பட்டதனால் சீமெந்து மணல் மற்றும் கட்டடப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவிய போதும் பல பெரியார்களின் ஒத்துழைப்புக் காரணமாகச் சரியாக ஒரே வருடத்தில் யாவரும் வியக்கத்தக்க முறையில் 2008 மார்ச் மாதத்திலேயே கும்பாபிஷேகம் செய்வதற்கு ஏற்றவாறு வேலைகள் திறம்பட முடிவுறுத்தப்பட்டது.

எனினும் பெரியவர்களுடைய ஆலோசனைப்படியும் தமிழ்நாடு, காஞ்சிபுரம், ஸ்ரீ ஏகாம்பரநாதேஸ்வரர் தேவஸ்தானம், ஸ்ரீ கைலாசநாதர் தேவஸ்தானம் ஆகியவற்றைச்சார்ந்த சைவசித்தாந்த ஆகமசாரம், சிவாகமஞானபாநு, சிவாகமச் செல்வர் சாளவ க. ராஜப்பாக் குருக்கள் அவர்களின் ஆலோசனைப்படியும் கடந்த 26 - 05 - 2008 திங்கட்கிழமை சுபமுகூர்த்தத்தில் நவகுண்டபட்சமாக கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறியது. இவை எல்லாவற்றுக்கும் எல்லாம் வல்ல வாய்க்காற்றரவை மூத்தவிநாயகரை நன்றியுடன் தொழுது தியானிப்போமாக.

திருப்பணி வேலைகள் ஆரம்பித்த காலத்தை நோக்கும்போது பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில் மிக விரைவாகத் திருப்பணி வேலைகள் நிறைவேறுவதற்கு உபயகாரர்களும் அடியார்களும் மனமுவந்தளித்த நன்கொடைகளே காரணம். அவர்களுக்கு எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிள்ளையாரை பாலஸ்தாபனம் செய்வதற்கும் பின்னர் திருப்பணி வேலைகள் ஆரம்பிப்பதற்கும் உதவியாக இருந்த சிற்பாசாரியர் அராலியூர் திரு ரவீந்திரராஜா அவர்களுக்கு எமது ஆலயத்தின் சார்பில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். நாட்டில் ஏற்பட்ட சூழல்காரணமாக அவரால் திருப்பணி வேலைகளை முன்னெடுத்துச்செல்ல முடியவில்லை. அச்சமயத்தில் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் முழுமையாக முன்னெடுத்துச் சென்று முடிவுறுத்திய சிற்பாசாரியார் தொல்புரம் திரு சக்திவேல் ஆசாரியார் அவர்களுக்கும் அவரது உதவியாளர்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும்

கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆலயத்தின் உள்வீதி முழுவதும் நிலம் ரெறாசோ இட்டு மூலஸ்தானம் கிறனைட் கல் பதித்து ஏனைய மண்டபங்கள் கோவில்கள் முழுவதும் பளிங்கு மாபிள் பதித்து அழகுறச்செய்த ஒப்பந்தகாரர் நல்லூர் "ஸ்ரீ கிருஷ்ணானந்த கொங்கிறீற் வேர்க்ஸ்" உரிமையாளர் திரு லிங்கம் அவர்களுக்கும் அவரது உதவியாளர்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கவும் அவர்தம் தொழில் சிறக்கவும் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆலயத்தை மெருகூட்டச்செய்வது ஆலயத்தின் வர்ணவேலைகள்தான். அந்த அடிப்படையில் தனது சிறந்த வர்ண வேலைப்பாடுமூலம் ஆலயம் முழுவதையும் மெருகூட்டியிருப்பவர் எமது ஊரைச் சேர்ந்த இளைஞர் திரு சர்வேஸ்வரன் அவர்கள். அவருக்கு எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கவும் அவர்தம் தொழில் சிறக்கவும் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆலயத்தின் பல்வேறு திருத்த வேலைகளுக்கும் எமது ஊரைச்சேர்ந்த ஆசாரிமார் உதவிபுரிந்துள்ளனர். அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

எமது ஆலயத்தின் பல்வேறு திருப்பணிவேலைகளுக்கும் சிரமம்பாராது இரவு பகல் பாராது எந்த நேரமும் தமது தொண்டுமூலம் பல்வேறு வேலைகள் சிறப்புற முடிவடைய ஆலயத்தின் தொண்டர்கள்தான் காரணம். அவர்களுடைய தொண்டின் பயனாக இலட்சக்கணக்கான ரூபாய்கள் சேமிக்கப்பட்டு வெவ்வேறு திருப்பணிகள் பூர்த்திசெய்யப்பட்டன. அவர்களது சேவை அளப்பரியது. இவ்வாறு தொண்டு செய்பவர்களுக்கு உணவும் சிற்றுண்டியும் தயாரித்து வழங்குவதில் உதவியாக இருந்தவர்கள் பலர். அவர்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கவும் சகல சீரும் பெற்று வாழப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கும்பாபிஷேகக் கிரியைகள் சிறப்புறுவது கும்பாபிஷேகத்தில் பங்குபற்றும் சிவாச்சார்யர்களினாலேயாகும். அந்தவகையில் இக் கும்பாபிஷேகத்திற்கு எல்லா வகையிலும் எமக்கு ஆலோசனை வழங்கிய காஞ்சிபுரம், சாளவ க. ராஜப்பாக் குருக்கள் அவர்களுக்கு எமது ஆலயத்தின் சார்பில் நன்றிகலந்த நமஸ்காரத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கும்பாபிஷேகக் கிரியை ஆரம்பத்திலிருந்து கும்பாபிஷேகம் முடியும்வரை சர்வபோதக சிவாசார்ய குருமணியாக இருந்து வழிநடத்திய இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் வேதாகம ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் அவர்களுக்கு எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சர்வபோதக சிவாச்சார்ய குருமணியாக ஆலோசனை வழங்கிய கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானம் ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கும்பாபிஷேக விழாக் கிரியைகள் சிறப்புறக் காரணமாக இருந்த அனைத்துச் சிவாசார்யர்களுக்கும் அனைத்து சாதகாச்சாரியார்களுக்கும் அனைத்து யாக சம்ரட்சகர்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆரம்பத்திலிருந்தே இக்கும்பாபிஷேக வைபவம் சிறப்புற நடைபெறும் வகையில் பல்வேறு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கிய சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவரும் வல்வை சிவன்தேவஸ்தான பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள் அவர்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மிக முக்கியமாக எல்லாவற்றையும் ஒருங்கிணைத்துச் செயற்படுத்திய பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா அவர்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கவும் சகல பேறுகள் கிடைத்து வாழவும் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பூர்வாங்கக் கிரியைகள் நடைபெறும் நாட்களிலும் கும்பாபிஷேகம் நடபெற்ற நாளிலும் கிரியா விளக்க உரைகளும் சமயச் சொற்பொழிவுகளும் வேத பாராயணம், திருமுறை பாராயணம் நிகழ்த்தியவர்களுக்கும் கீத வாத்திய நாதஸ்வர தவில் விற்பன்னர்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கவும் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்ட அனைத்துக் குருமாருக்கும் தேவஸ்தானத்தைச் சேர்ந்த அனைவருக்கும் அறுசுவை உணவு நேரத்துக்கு நேரம் தயாரித்து வழங்கிய பிரம்மஸ்ரீ முருகானந்த சர்மா அவர்களுக்கும் அவரது உதவியாளர்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாட்களுக்கு நடைபெற்ற மண்டலாபிஷேக உபயங்களைப் பொறுப்பேற்றுச் சிறப்புற நிறைவேற்றிய எல்லா உபயகாரருக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மூன்று தலைமுறைகளாக எமது ஆலயத்தின் மூர்த்திகளுக்கு அலங்காரம் செய்வதும் சிறந்த மாலைகளைக்கொண்டு ஆசாரசீலர்களாக அலங்காரம் செய்வதும் அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த ஸ்ரீ சிவராஜா ஐயர் அவர்களும் அவரது புத்திரர்களும் ஆவர். அவர்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கும்பாபிஷேகம் நிறைவுபெற்றதும் கும்பாபிஷேகத்தை நினைவூட்டும் வகையில் சிறப்புமலர் ஒன்றை வெளியிடவேண்டும் என்ற எமது விருப்பத்தை எமது உறவினரும் சிறந்த எழுத்தாளரும் சாதகாச்சாரியாருமான பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்)அவர்களை அணுகியபோது எமது வேண்டுகோளை ஏற்று மலராசிரியராகப் பொறுப்பேற்று நிறைவேற்றித்தந்த அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் இம்மலர் சிறப்புறும் வகையில் ஆக்கங்கள் நல்கிய சகல பெரியார்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இம்மலரை மிகவும் துரிதமாகவும் சிறப்பாகவும் அச்சேற்றித்தந்த கோண்டாவில் சிவரஞ்சனம் ஓவ்செற் பிறின்ரேர்ஸ் உரிமையாளர் மற்றும் ஊழியர் அனைவருக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கவும் அவர்தம் தொழில் சிறக்கவும் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கும்பாபிஷேக நிகழ்வுகள் யாவற்றையும் ஒலிபெருக்கி மூலம் ஊர்அறியச்செய்த சிறுப்பிட்டி வடக்கைச்சேர்ந்த திரு பாக்கியநாதன் அவர்களுக்கும் அவருடைய புத்திரர்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கவும் அவர்தம் தொழில் சிறக்கவும் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கும்பாபிஷேக நிகழ்வுகள் அனைத்தையும் ஒளிப்பதிவு செய்த விநாயகர் அடியார் திரு பாலா அவர்களுக்கும் அவருக்கு உதவியோருக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கும்பாபிஷேக நிகழ்வுகளின்போது எமது அழைப்பை ஏற்று வருகைதந்த அனைத்து அந்தணப் பெருமக்களுக்கும் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன மஹாசந்நிதானம் அவர்களுக்கும் மற்றும் பெரியார்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பல்வேறு வழிகளிலும் பண உதவி, பொருளுதவி, சரீர உதவி வழங்கிய அனைத்து அன்பர்களுக்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் எல்லாம் வல்ல மூத்தவிநாயகரின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, ஆலயத்தின் சார்பில் எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்
இறைபணி நிற்கும்,
ஆ. சுப்பிரமணிய சர்மா.
ஆதின கர்த்தர்கள் சார்பில்.



*ஓம்.*
*சச்சிதானந்தப் பரம்பொருளே,*
*அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும்*
*நாங்கள் செய்த சகல குற்றங்களையும்*
*பொறுத்துக் காத்து ரட்சிக்க வேண்டும்.*
*ஓம்.*

திருச்சிற்றம்பலம்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையம் நினையாப் பிழையும் நின் ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் தொழாப் பிழையும் துதியாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே

திருச்சிற்றம்பலம்

***இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!***
***அன்பே சிவம்***



